Number & date not known

உ

ஸ்ரீராமஜெயம்.

# மயிலிராவணன்கதை.

இஃது

சேர்குலாபுரம்

சரவணபண்டிதரவர்களால்

பார்வையிடப்பட்டுச்

சித்தூர்

வீராசாமிநாயுடு - அவர்களால்

தமது

வித்யாவிநோத - அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரமஹு

ஸ்ரீராமஜெயம்.

# மயிலிராவணன்கதை.

காப்புகள்

## விநாயகர்தோத்திரம்.

கலிவிருத்தம்,

அயிலும்வில்லுவில் நாணியுமஸ்திரம்
பயிலுமாபலம் மாரிற்படைத்தவன்
மயிலிராவணன் பாகதைபாடிடக்
கயிலைமேவுங் கணபதிகாப்பரோ.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

கொங்கக்கன்னடமீழமாடங் குருகங்கலியாணம்
குருநாட்சைபு ரோமசலமிகுச்சரிமச்சரியம்
வங்கம்மாளவம்வாரணமாகதமகதக்காம்பீலி
மலையாளங்கோவைத் துளைடில்லிவழங்கும்பைங்கோவை
சிங்களமெங்குந்துதிசெய்யும் ஸ்ரீராமன்றன்கதையைச்
செகதலமதில்வாழ்மானிடர்யாருஞ் சிந்தைகளித்தன்பாய்
சங்கப்புலவோர்கூறியவாறே தமிழ்கதைசெய்தேன்
தனிமாபாரதமெழுதியவேங்கடாராயன்றாள்சரணே.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

நாடியபொருள்கைக்கூடுஞ் ஞானமும்புகழுமுண்டாம்
வீடியவழியதாக்கும் வேதியன்கமலநோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன் றாள்வலிகூறுவோர்க்கே.

## காப்பு.

### கலிநிலைத்துறை

வடகலைதென்கலை வடுககன்னட
மிடமுளபாஷைக ளியாவராயினும்
திடமுளரகுபதி ராமன்கதை
அடைவுடன்கூறிடி லமராவரோ

### இதுவுமது.

நன்மையுஞ்செல்வமு நாளுநல்குமே
துன்மையும்பாவமுந் துலைந்துதேயுமே
வன்மையில்ஜென்மமு மாணந்திருமே
இன்மையில்ராமாவென் றெழுந்திரண்டினால்.

காப்புகள் - முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமஜெயம்.

# மலியிராவணன்கதை.

---

## முகவுரை.

கடல்புடை சூழ்ந்தநெடியவுலகத்திலே இராமாயணமென்றுகூறத்தக்க இந்தவசனகாவியமானது மானிடருக்கு சித்திமுத்திபத்தி வைராக்கியங்களைத் தருதலானும் ஆணவம் மாயை காமியமென்னும் மும்மலங்களை நீக்கலானும மெய் வாய் கண் மூக்கு செவியென்னும் ஐம்புலன்களை பரிசுத்தமாக்கலானும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்என்னு மைம்பொறிகளை நோக்கலானும் பிறவிப்பிணிகளைத் தீர்க்காலானும் அதிக சிறப்புடையதாய் நீடுபுகழோங்கிகின்றது.

## கதையின்வரலாறு:

இந்த மயிலிராவணன் என்கிற இராட்சசனுடைய சரித்திரத்தை சிற்றறிவினனாகிய யான் கதைசொல்லப் போகிறேனென்று நாரதமகாமுனிவர் கௌதமரிஷிக்குத தமிழில்மொழிபெயர்க்கத்தொடங்கினார்:-கேளுமையாகௌதமரிஷியே ஆதிகாலத்தில் ஸ்ரீராமரானவர் தென்னிலங்கையென்கிற பட்டணத்திற்கு அரசனாகியஇராவணனை சம்ஹாரஞ்செய்யும் பொருட்டாக எழுபதுவெள்ளம் சேனையுடனே தண்டதலைவர்-அணித்தலைவர் படைத்தலைவர் - முதலிய சேனாசமுத்திரங்களோடு சுவாமியானவர் சமுத்திரக்கரையிலேபோய் இறங்கி சேதுவையணைக்கட்டி தென்னிலங்கைக்கரையில் இழிந்து இராவணனுடனே போர்புரிந்துகொண்டிருக்கின்றகாலத்திலே அதிகாயன்- மகாமாயன் -நிகும்பன்- அகம்பன்- கும்பகர்ன்னன் சம்புமாலி - இந்திரசித்து முதலானபற்பல அரக்கர்சேனைகளும் இரணக்களத்திலே கால்வேறு-தலைவேறு- கைவேறு-மெய்வேறு தொடைவேறு- இடைவேறு- முழங்கால்வேறு - கணுக்கால்வேறு இப்படி நானாவிதமாக வீராதிவீரனாகிய இராவணனுடைய பிள்ளைகளும் இராட்சசசேனைகளும் பலவாறாக சிதைந்து மாண்டுபோனார்கள்.

இந்த விசேஷமெல்லாம் இராவணன்கேட்டு கையிலிருந்த ஆயுதங்களைக் கீழேபோட்டுத் திடீலென்று சிங்காதனத்தின் மீதிருந்தபடியே பூமியில்விழுந்து அதிகவிசாரத்தோடு மூர்ச்சையடைந்தான் சற்றுநேரம் சென்றபின்பு மறுபடியும் இராவணன் மூர்ச்சைதெளிந்து

எழுந்து அழுதுகடவுளைத்தொழுது மனமென்கிறவில்லைத் தளைத்து ம
ந்திரிமார்களையழைத்து வாருங்கள் மந்திரிகளே இராமனை இலட்சுமண
ன் என்கிற இரண்டுமனிதரும அநேகம் வானரசேனையோடு கூடிவந்து
யுத்தகளத்திலே அதிகாயன்-மகாமாயன் -திரிபுரன்-கும்பக
ர்ன்னன்-சம்புமாலி-இந்திரசித்து- மயேந்திரசித்து-முதலிய தமபிமாரு
ம் அனேகபுத்திரர்களும் இரதகசதுரகபதாதிகளும் யானையும்-சதுரங்க
சேனையும்அந்தஇரண்டுமனிதர்கையினாலேஇறந்துபோனார்கள அப்படி
யிருக்கஎன்சரீரமாத்திரமென்னபுதுமையுடையதுஇதைப்பொல்லாதகா
வயமாறுதில்லாமலும்ஒருவரோடுசொல்லாமலுமபோகுமென்றுசல்லா
ருமறிவதுபோல நாமும அறிந்திருந்து தம்பிமார்களையிழந்து அரசாட்
சிசெய்வதெப்படியென்று விசனப்படுகிறபோது மந்திரிகள்இராவணே
ஸ்வரனைப்பார்த்து ஓ ஓ வாருணமயாசுவாமி நீரோ விசாரப்பட்டால் அடி
யோங்கள் எப்படிபிழைப்போம இனிமேலாகிறதென்ன இப்போது இ
லங்கையிலே யுண்டான யானை-குதிரை- சேனை-ஒட்டகமுதலிய படை
களையுங்கூட்டி அந்த இராமலட்சுமணருக்கெதிராக நாட்டி நம்முடைய
சவுரியங்களைக்காட்டி வானரசேனைகளைவாட்டி மிதயாக எண்ணி அக
ங்காரப்பண்ணி வருவோம் அஞ்சாதே சுவாமியென்று மந்திரிகள்கூற
இதுகளையெல்லாங்கேட்ட இராவணன்மகிழ்ந்துபுகழ்ந்து மந்திரிகளைப்பா
ர்த்துமமனதகொண்டார்த்துநல்லதுநல்லது சரி-சரி- ஆம்- ஆம் என்றுபல
வாளுக்கஞ்கூறி ஆணவமீறிதன்னுடைய ராணுவங்களாகிய யானைகளையும
குதிரை- ஒட்டையானை முதலியவைகளையும் சதுரங்கசேனைகளையும் வ
ரும்படி ஆக்கியாபித்து இராவணனானவன் வெளியிலே வந்து தன்னு
டைய தேரின்பேரிலேறி ஜயம் ஜயம் என்றுகூறி சகல ஆடம்பரத்துட
னே யுத்தகளத்திலேவந்து நின்றுகொண்டு ராமசுவாமியைப் பார்த்து
ஒருவார்த்தைசொல்லத்தொடங்கினன்.

ஓ-ஓ-ஓ மானிடர்களே மரித்துப்போன பிணங்களே நற்றுணையில்
லாக்குரங்குகளே ஈக்கள்மொய்க்கும் பிணங்களே என்தம்பிமார்களை நீ
ங்களிருவருமல்லவோ கொன்றீர்கள் நல்லதாகட்டும இதோ ஒருநொடி
யில் உங்களைக்கொல்லுகிறேன் அம்புகளாலேவெல்லுகிறேன் யமனுக்
கிரைகொடுக்கும்படி கொல்லுகிறேன் உங்கள்சரீரத்தைச் சல்லடைக்
கண்கள்போலக் கெல்லுகிறேன் யென்று ஆக்கரித்துப்பற்களை நற நற
வென்று கடித்து மீசை துடித்து வில்லைவளைத்து நாணியேற்றி அண்
டங்களெல்லாம கிடு கிடு வென்று நடுங்கும்படி பயமுறுத்தினன் இரா
மசுவாமிக்குக் கோபம்வந்து கோதண்டத்தை வளைத்து பாணசந்தா
னஞ்செய்கிறபோது அனேகமாயிரம் சேனைகளும தாலால்களு
ம் யுத்தகளத்திலே இறந்துபோய் இராவணனானவன் ஒருவனாகநின
று யுத்தம் பண்ணுகிறபோது இன்னமநேகஞ் சேனைகளும் இரா

மசுவாமி பாணத்தினாலே அடிப்பட்டுமூறிந்து இலங்கைத்தீவுக் கரையி லே தன்னுடைய அரண்மனையிலே அந்தரங்கத்தில்போய் படுத்துக் கொண்டு அதிக்விசாரத்துடனே இருந்தான் அப்படியிருக்கிறகாலத்தி லே பிரகஸ்தனென்கிற மந்திரிஇராவணனண்டையில்வந்து விசாரமாக இருக்கிறவனைப்பார்த்து வாருமையாசுவாமி நீர் மகாபாக்கிரமசாலியா இருந்தும இப்படியாகத் துயரப்பட்டிருக்கா லாகிறதென்ன மென்று சொல்லுகிறபோது இராவணன் சொல்லுகிறான்

வாரும்பிள்ளாய் மந்திரிபிரதானி தண்டுத்தலைவனேநான் சீதையை க்கொண்டுவந்த நிமித்தம் இலங்கையிலே என்றுமில்லாத அலுஷ்ட மவந்து தம்பிமார்களாகிய கும்பகர்ணன் இந்திரசித்து முதலானவரும் போய் நானொருவனுமே நின்றேன் இனிமேலிருந்து துயரம்பொறுக்கப் போகிறதில்லையென்று வெகுவிசனமாக அழுகிறபோது மந்திரி சொல் லுகிறான் அந்த இராமலட்சுமணனை ஒருவராலும் வெல்லப் போகாது அந்த சீதையைக் கொண்டுபோய் இராமசுவாமி முன்னேவிட்டு சரணாக தியென்று சொன்னால் தயவுசெய்வார் என்றுசொன்ன மாத்திரத்திலே இராவணன் சொல்லுகிறான் வாரும்பிள்ளாய் பிரகஸ்தனே என்தம்பி யாகிய விபீஷணனங்கேயிருந்துகொண்டு இததனைபேரையுங் கொல் லச் சொல்லிக்கொண் டிருக்கிறான் அவனிருக்கிறவிடத்திலே நான் சர ணமென்று சொல்லப்போகிற தில்லை சீதையை விடுகிறதுமில்லை அப் படிப்பட்ட தம்பியார்போனபிற்பாடு இப்படிகெட்டகாரியம் நடவாது அ வர்களுக்கு எந்தவழியாச்சுதோ அந்தவழிநமக்கும் ஆகுது வேறேயோ சனை யில்லையென்று தன்னுடைய துயரமெல்லாம் ஆற்றித்திட்டஞ்சொல் லி அழுது மூர்ச்சைதெளிந்து எழுந்துசற்றுநேரம் சும்மாயிருந்தான் இ ராவணனைப்பார்த்து மந்திரிசொல்லுகிறான் வாருமையாசுவாமி ஒரு உ பாயமிருக்கின்றது அவர்களைச் சயிக்குமுபாயம் யெப்படியென்றால் பாதாளயிலங்கையிலே உம்முடைய தாயாதிவர்க்கத்திலே தம்பியாகிய மயில்ராவணன் இருக்கின்றான் அவனோமாயாவினோதி கபடநாடக சூஸ்திராவதாரி சதுர்விதவுபாயி அவனை மூவராலும் தேவராலும் யாவ ராலும் சயிக்கப்போகாது மகாசுத்தவீரன் சத்துருசம்மாரன் அப்பேர் ப்பட்டவனிருக்கச்சே உமக்கு யோசனையென்ன அவனை அழைப்பி த்தால் அவனிந்த எழுபதுவெள்ளஞ் சேனையையும் செயிக்க வேண்டு மென்றாலும் செயிப்பான் அல்லது இராமலட்சுமணனிரண்டுபேரை யும் சம்மரிக்கும்படி சொன்னாலும் சங்கரிப்பான் இராமலட்சுமணனி ருவரையும் பாதாளலங்கையிலே காளிக்குப் பலியிடச் சொன்னாலும் பலியிடுவான் அப்படிப்பட்ட பராக்கிரமசாலியாகிய தம்பி இருக்கும் போது என் துயரப்படுகிறீர் சீக்கிரத்திலே மயில்ராவணனை அழைத்து எந்தவிதத்திலேயும் இராமலட்சுமணனை செயிக்க வேண்டுமென்று

பிரகஸ்தனென்று மந்திரிகூற இராவணன்செவியிலே ஈரமாத்திரத்தில் மயிராவணனிட்டஞ்சொற்போலுமேறிற்று.

இராவணன் இதுமெய்தான் நல்லயோசனை சொன்னீரென்று பிரகஸ்தனுக்கு வேண்டிய வெகுமதிகொடுத்து கனகாபிஷேகஞ்செய்து பின்பு இராவணனென்பவன் சீக்கிரத்திலே மயிலிராவணன் பாதத்தைத்தன் மனதிலேநினைத்தான் அப்போது பாதாள இலங்கையிலே தேவேந்திரன்போல் கொலுவிருக்கிற மயிலிராவணனுக்குத் தெரிந்ததுவுடனே மயிலிராவணனென்பவன் யோசனைசெய்து நமமிட தமயனாகிய இலங்காபுரியையாளுகிற இராவணேஸ்வரனுக்கு என்ன ஆபத்துவந்ததோ தெரியாது அவன் வெகுநாளாக நம்மை நினைத்ததில்லை ஆதாலால் என்னவேலையிருந்தபோதிலும் இப்போதேபோய் உதவிசெய்யவேண்டுமென்று தன்மனதிலே யெண்ணி யோசனைபண்ணி மந்திரிகளையழைத்து அப்பா நான் இலங்கைக்குப்போய் வருகிறேன் நான் வருமளவும் நீங்கள் சாவதானமாகப் பாதுகாத்திருங்களென்றுசொல்லிவிட்டு மயிலிராவணன் இலங்காபுரிப்பட்டணத்துக்கு வந்துவிட்டான் அந்த இலங்கையின் அதிசயமெல்லாம் பார்த்தான் எல்லாம் பாழாயிருப்பதைப் பார்த்துக்கொண்டு அந்தப்புரத்திலே போனான் இராவணன் ஒருவனாகவிருக்கிறதைக்கண்டான் மயிலிராவணன் தமயனாகிய இராவணேஸ்வரனுக்கு சாஷ்டாங்கதெண்டனிட்டு ஒருவார்த்தை சொல்லுகிறான் வாருமையா சுவாமிபட்டணமெல்லாம் பாழாய்க்கிடக்கிறதென்ன அனேகம்விசாரத்தை அடைந்திருக்கிறதென்ன இதுவெல்லாம் உண்மையாகச் சொல்லவேண்டுமென்று அஞ்சலிசெய்து கேட்க இராவணன் சொல்லுகிறான்.

வாரும்பிள்ளாய் தம்பி முன்னாலே தசரதமகாராசாவினுடைய பிள்ளை இராமலட்சுமணர் இருவரும் தண்டகாரணிய வனத்திலேவந்திருந்தார்கள் அப்போது நமது தங்கை சூர்ப்பனகையினுடைய மூக்கு காது முலை முதலியதைச் சேதம்பண்ணினார்கள் அவளிங்கேவந்து முறையிட்டாள் அப்போது நான்போய் அந்தராமனுடைய தேவியாகிய சீதையையெடுத்துக்கொண்டு வந்தேன் அன்றுமுதல் இலங்கையிலே அனுஷ்டம்வந்தது அனுமானென்கிற குரங்கு சீதையைப் பார்க்கவந்தவிடத்திலே பட்டணமெல்லாம் சுட்டு கோட்டைபாப்பி அட்சயகுமாரனையுங்கொன்று அனேகராட்சசனையுங் கொன்றுவிட்டுப் போயிற்று பின்பு இராமசுவாமி அவர்தம்பி இலட்சுமணன் பின்னும் சுக்கிரீவன் அங்கதன்- நீலன்- நளன்-குமுதன்-சாம்புவன்-அனுமான்-இப்படி எழுபது வெள்ளஞ்சேனையும் கூடிவந்து சேதுவை அணைகட்டி இலங்கையிலேவந்து யுத்தங்களாகிறபோது அதிகாயன்-மகாமாயன் இந்திரசித்து கும்பகர்ணன் அநேகராட்சதர்களும் பட்டுப்போனார்கள் என்று சொன்னமாத்திரத்திலே இந்தவசனங்களை மயிலிராவணன் கேட்டு அனே

கந்துயாப்பட்டு ஒருபெரிய விருட்சமாய் சகோரப்பட்சியாய் கிளைகள் இலைகள் பழங்களுடனே இருக்கப்பட்ட விருட்சமானது அடியோடே அறுத்துவிட்டா லெவ்வாறுவிழுமோ அவ்வாறுபோலக் கீழ்விழுந்து அழுது கடவுளைத்தொழுது அணிந்து பணிந்து கோபந்தணிந்து ஒருவாறுமனந்துணிந்து சொல்லுகிறான்.

வாருமையாசுவாமி நீர் சகலரையுங்கொன்றுவென்று சுவர்க்கத்துக்கு அனுப்பினபின்பு எம்மை அழைத்தீர் முன்னதாகவே எனக்குவிரதக்கிரமென்று தெரியாமற்போயிற்றே இப்போது யான்செய்யவேண்டியதென்னவென்றுகேட்க இராவணேஸ்வரன் கூறுகிறான் கேளும்பிள்ளாய்த்தம்பி இராமலட்சுமணன் இரண்டுபேரும் மகாபராக்கிரமசாலிகள் அவர்கள் வானரசேனைகளுடன் நம்முடையதம்பி விபீஷணனையும் அழைத்துக்கொண்டு இலங்கைநகரெல்லாம் சுட்டு அனர்த்தஞ்செய்துவிட்டார்கள் அந்த இராமலட்சுமணனை ஒருவனாலும் ஜெயிக்கக்கூடாது நானும் அனேகவிதயுத்தங்கள்செய்து இராமபாணத்தின்முன்பாக நிற்கக்கூடாமல் முறிந்தோடிவந்தேன் அவர்கள் மனிதருமாயிருக்கவில்லை அவர்களை சம்காரஞ்செய்ய எவ்விதஉபாயமுண்டோ அவ்விதஉபாயஞ்செய்யும்பிள்ளாயென்று இராவணன்சொல்ல மயில்ராவணனானவன்சொல்லுகிறான் கேளுமையாசுவாமி இந்தபொழுதுவெள்ளஞ்சேனையும் இராமலட்சுமணனை இரண்டுபேரையும் ஆகாயமார்க்கமாய் அதிசீக்கிரத்துடன் கொண்டுபோய்ப் பாதாள இலங்கையிலே என்னுடைய காளிகாதேவிக்கு பலிகொடுக்கிறேனென்று சொல்லி உறுதிப்பாடுசெய்துகொண்டு தன் ஆண்பனை வந்துசேர்ந்து மந்திரியார்களோடு தான் இலங்கைக்குப்போனதும் அவ்விடத்தில் நடந்தவிவரமும் தான் இராவணனுக்கு சபதஞ்செய்துவந்ததும் இதுகளெல்லாம் சவிஸ்தாரமாகச்சொல்லி இனிமேல் எப்படிசெய்யப்போமென்று மந்திரிகளோடு ஆலோசனைசெய்துக்கொண்டிருந்தான்.

இங்கே இப்படியிருக்கும்போது சீதாதேவியம்மனருகில் காத்துக்கொண்டிருக்கிற விபீஷணனுடையபெண் திரிச்சடையானவள்மனதிறக்கவலைகொண்டு மயில்ராவணன்வந்து இராவணனுடனே பிரதிக்கினைசெய்துக்கொண்டுபோன விசேஷமெல்லாங்கேட்டு இனிநாம் என்னசெய்யப்போகிறோமென்றெண்ணி நம்முடையபிதாவாகிய விபீஷணனானவன் சுவாமியைசரணாகதியென்று அடைந்திருக்கிறாரோ அவருடன் இந்தவிசேஷமெல்லாம் யாவர் அறிவிக்கப்போகிறார்களென்று மனங்கனிந்து அதிகதுக்கத்துடனழுதுகொண்டு அவன் மகாமாயாவியென்றும் கபடநாடகசூஸ்திரதாரி என்றுயோசனைசெய்துக்கொண்டிருக்கிற சமயத்தில் வாயுபுத்திரனானவர் அவ்விடம்வந்தார் அப்போது திரிச

டையாணவள்பார்த்து வாருமையாசுவாமி வாய்வுபகவானே நானொருவிசேஷஞ்சொல்லுகிறேன் அதைக்கருத்துற்றுச் சாவதானமாய்க்கேளும் அஃதென்னெனில் அதிசயமானவிசேஷம அதையாதாமொருவருமறியக்கூடாது நீர் இராமசுவாமிக்குஉயிர்த்துணையானவர் ஆகையால் நான் உமதுடன்சொல்லுகிறேன் நீர்தவிரமற்றொருவரறியக்கூடாது அது விபீஷணருக்குத்தெரிந்திருக்கும் ஆகையால் மயில்ராவணனை இராவணனுடன்பிரதிக்கினைசெய்துக்கொண்டுபோனவிசேஷமென்னவென்றால் இன்றையஇரவில் பதினெட்டுநாழிகைக்குமேல் இராமலட்சுமணன் இருவரையுங்கொண்டுபோய் பாதாள இலங்கையிலிருக்கும் தன்னுடையகாளிகாதேவிக்குப் பலியிடுகிறேனென்று பிரதிக்கினைசெய்துகொண்டுபோனான் அவன்மாயாவிநோதி ஒருவராலும் ஜெயிக்கக்கூடாதவன் அவன்எந்தரூபமெடுத்து மோசம்பண்ணுவானோதெரியாது அவனுடையகபடெல்லாம் விபீஷணருக்குத்தெரியவரும் இதெல்லாம் அவருக்குச்சொல்லி எவ்விதஜாக்கிரதையாயிருக்கவேணுமோ அவ்விதமாயிருக்கச்சொல்லி வரவேண்டுமென்று சொன்னமாத்திரத்தில் வாய்வுபகவானும் அப்படியேசம்மதித்துப் போய்வருகிறேனென்று திரிசடையாவிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விபீஷணரைவந்து கண்டாவிபீஷணர் வாய்வுபகவானைப்பார்த்துசொல்லுகின்றார்.

வாருமையாசுவாமி வாய்வுபகவானே நீர் எங்கேவந்தீர் நான் உம்மைக்கண்டு வெகுநாளாச்சுது நீர் வந்தசங்கதியை தெரியப்படுத்துமையாவென்று கேட்க வாய்வுபகவானவர்சொல்லுகிறார் கேளும்விபீஷணரே மயில்ராவணனை இராவணன் அழைப்பித்து தன்னுடைய துயரமெல்லாஞ்சொன்னபோது மயில்ராவணன் சொல்லியதென்னவென்றால் உயுத்தியஞ்செய்வதற்கு முன்சொல்லாமல் இப்போது காரியமுடிந்தபிறகு என்னையழைப்பித்தீர் ஆகிலும்பெரிதல்ல உன்பிள்ளைகளாகிய அட்சயகுமாரன்-அதிகாயன்-மகாமாயன்-இந்திரசித்து-கும்பகர்ணன்முதலான சேனைப்படைகளைக்கொன்றவர்கள் இராமலட்சுமணர்தானோ அப்படிப்பட்ட பராக்கிரமசாலிகளான அவ்விருவரையும இன்றையதினம்இரவில் பதினெட்டுநாழிகைக்கு பாதாள இலங்கைக்குக்கொண்டுபோய் என்னுடையகாளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேனென்று சபதங்கூறித் தனக்குவேண்டியதிரவியங்களும் பெற்றுக்கொண்டுபோனானும் இந்தசமாச்சாரம் திரிசடையாள் கேட்டுக்கொண்டிருந்து இவ்விடத்தில் ஒருவருமில்லையேயென்று துயரப்பட்டுக்கொண்டிருக்கிறசமயத்தில்நான் அவ்விடத்துக்குப்போனேன் அப்போது திரிச்சடையானவள் என்னை அழைத்து சுவாமி உம்மாலேஒருகாரியமாகவேண்டுமென்று இந்த விசேஷங்களை உமக்குச்சொல்லி ராமசுவாமிக்கு அறிக்கைசெய்யும்படிசொ

ன்னுளென்று சொல்லி வாய்வுபகவானும் தானிருக்கிறவிடத்துக்குப் போய்விட்டார்.

வாய்வுபகவான் போனபின்பு விபீஷணர் அனேகவிசாரத்தை அடைந்து இதற்கென்னசெய்வோமென்று மனமிடைந்து அவன்மகாக படநாடகசூஸ்திராவதாரி நானாவிதருபாதிகாரி அவன் என்னைப்போலும் உருபமெடுத்துமோசம்பண்ணுவான் பற்பலருபங்களாகவும் பண்ணுவானென்று மிகவும் எண்ணி யோசனைபண்ணி சுவாமி சபையிலேயெவ்வாறுசொல்லுவோமெனக் கருத்திலிருத்தி சுக்கிரீவன்-அங்கதன்-சாம்புவன்-நீலன்-நளன்-அனுமார்-இவ்வித எழுபதுவெள்ளஞ் சேனையுடனே கொலுவிருக்கிறசமயத்திலே விபீஷணர்போனார் இராமசுவாமி கண்டு மகிழ்வுகொண்டுசொல்லுகிறார் வாரும்விபீஷணரே உம்முடைய்முகம் பூரணச்சந்திரன்போலும் மலர்ந்ததாமரைமலர்போலும் இருக்குமே யாதுகாரணத்தினால் முகங்கறுத்து அகம்வெறுத்துக் கருகி மனம் உருகி கண்ணீர்சொரிந்து துயரம்பெருகி அதிகவிசாரமடைந்திருப்பதேனென்று இராமசுவாமிகேட்டபோது விபீஷணர்பயந்து நைந்து திடீலென்றெழுந்து காலில்விழுந்து கைகட்டிவாய்புதைத்துச் சரீரம்பதைத்து மெள்ளமெள்ளக்கிட்டிசென்று சுவாமியைப்பார்த்து நடந்தவிசேஷங்கள் யாவுமொளியாமற்சொன்னார் அவைகள்யாவும் இராமசுவாமிகேட்டு ஆலோசனைசெய்து ஜாம்புவன்முதலிய சகலரையும் அழைப்பித்து விபீஷணர்கூறிய விசேடமெல்லாஞ்சொல்லி இன்றையாத்திரிபதினைந்துநாழிகையளவிலே மயில்ராவணன் நம்மையாவரையும் மோசம்பண்ணுகிறேனென்று கூறிப்போனானும் அதற்கென்னவுபாயமுண்டோ அவ்விதவுபாயம்செய்யுங்களென்ன சுக்கிரீபன்கேட்டுவிபீஷணரைப்பார்த்துசொல்லுகிறான் வாருமையா விபீஷணரே மயில்ராவணனென்பவன் யாவன் அவனிருப்பிடமெங்கே அவன் பூர்வோத்திரமென்ன அவன் இராவணனுக்கு செவ்விதமாகப் பாத்தியஞ்சொல்லுமென்றுகூற விபீஷணர் சொல்லுகிறார்.

கேளும் சுக்கிரீபசற்பாத்திரனே அந்தமயில்ராவணன் என்பவன் பாதாளஇலங்கையிலே இருக்கிறவன் இராவணனுக்குத்தாயாதிவர்க்கத்திலேதமபியாகவேண்டும் அவன்மகாமாயாவிநோதி கபடநாடகசூஸ்திராவதாரி நானாவிதருபாதிகாரி அவனையொருவராலும் ஜெயிக்கப்போகாதென்று விபீஷணர் சுக்கிரீபருக்குச்சொல்ல எல்லாருங்கேட்டுக்கொண்டிருந்து யோசனைசெய்து அனுமாராலே ஆகவேண்டுமென்றுநிச்சயம்பண்ணி சுவாமிகிட்டபோய் சுக்கிரீபன்-அங்கதன்-விபீஷணர்-சாம்புவன்-இந்தநாலுபேரும் சுவாமியுடனே என்னசொல்லுகிறார்களென்றால் இராமசுவாமிப்பெருமானே இந்தகாரியமெல்லாம் அனுமார் ஒருவரா,

லே யாகவேண்டுமேயொழிய மற்றொருவராலேயாகாதென்று சொன்ன
ர்கள் இந்தவிசேடமெல்லாம் அனுமார்கேட்டு ஒன்றுமறியாதவர்போலி
ருந்து தலையைக்குனிந்துக்கொண்டிருந்தார் அப்போதுசுவாமியானவர்
வாரும் அனுமானே விபீஷணர்கூறிய விசேடத்துக்கு என்னவுபாயமு
ண்டோ அவ்வுபாயங்களைச்செய்யுமென்று மறுமொழிகொடுக்க அ
னுமார்கேட்டு அச்சமென்பதைமண்ணிற்போட்டு ஆறவாரித்து மகாம
ரித்து சந்தோஷக்கடலிற்புகுந்து பெருமிதமிகுந்து சிங்கம்போலத்
துள்ளி லங்கைராவணனைத்தள்ளி மயிலிராவணன்சிரசைக்கிள்ளி அவ
னுதிரத்தைநக்கையினாலள்ளி தாகந்தீர்ந்து மகிழ்ச்சிகூர்ந்து வருகிறேன்
வருகிறேனென்று சபதங்கூறி மமதைமீறி சுவாமியைப்பணிந்து துணி
ந்து வந்தனையோடுசிந்தனைசெய்து கந்தபுஷ்பங்கள்காலிற்பெய்து அஞ்
சலிசெய்து வணங்கி இணங்கி ஒதுங்கி பதுங்கி ஆடிப்பாட்டுகள்பாடிப்
பூமலர்ச்சூடிக் கடவுளைநாடி அவர்திருவடிதேடி அன்போபோடோடி
வந்துநின்றார்.

அப்போது-விபீஷணன்-சுக்கிரீபன்-சாம்புவன் இந்த மூன்றுபே
ரும் அனுமானைப்பார்த்து அவசியமான ஒருவிசேஷஞ்சொல்லுகிறோம்நீ
ர் மகாபராக்கிரமசாலியல்லவோ உமக்கு ஈடுசோடொருவருமில்லை நீர்ஆ
காயம் பூமி பாதாளத்துக்கு மொன்றாய் சரீரமெடுக்கவேண்டுமென்றா
லும் எடிப்பீர் நீர் மகாபுருஷசிங்கம் நாங்களென்னசொல்லப்போகிறோ
ம் இன்றுஇராத்திரிக்கிமாத்திரம் உம்முடைய வாலினாலே இந்த எழுப
துவெள்ளஞ் சேனைகளுக்கும் கோட்டையிட்டுக்கொண்டிருந்து மகா
ஜாக்கிரதையாகக் காக்கவேண்டுமென்று சொன்னமாத்திரத்திலே அ
னுமார்கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து அப்படியேஆகட்டுமென்றுசொன்னா
ர் இப்படியிருக்கிறசமயத்திலே சூரியன் அஸ்தமானமாச்சுது உடனே
அனுமாரானவர் எழுபதுவெள்ளஞ்சேனையையும் ஒன்றாகச்சேர்த்து த
ம்முடையவாலினாலே கோட்டையிட்டார் கோட்டையானதெப்படியி
ருந்ததென்றால் ஆகாயம் பூமி பாதாளத்துக்கு மூடுருவத்தக்கதாகயிரு
ந்தது அக்கோட்டைக்கு வாசலெங்கேயென்றால் அனுமாருடைய வா
யிலேபுகுந்து செவியிலே புறப்படவேண்டும் மற்றப்படி வாசலுமில்
லை வழியுமில்லை ஒரு ஈ எறும்பும் நுழையப்போகாது நுழையவேண்
டுமென்றாலும் இடமில்லாமல் வாலுடனே வால் நெருக்கமாகவும் அ
ழுத்தமாகவும் கோட்டையிட்டுக்கொண்டிருக்கிறசமயத்திலே இராமல
ட்சுமணரிரண்டுபேரும் ஓர் பர்ணகசாலையிலே பள்ளிக்கொண்டிரு
ந்தார்கள அத்தருணத்தில் விபீஷணரும் சுக்கிரீபரும் யோசனைசெ
ய்து இன்றிரவில் நாலுஜாமமும் மகாசாக்கிரதையாக யிருக்கவேண்டு
மென்றுசொல்லி அங்கதனை யழைப்பித்து அவனோடே இலட்சும
ணனையுங்கூட்டி விருதுமணிகளையாட்டி சந்தடிகளைக்காட்டி சிங்கநாத

ங்களைமீட்டி சித்திரையென்பதையோட்டிபற்பலவாத்திய முழங்கவும் தருமதானம்வழங்கவும்வேசையாடவுமவித்துவான்கள்பாடவும இப்படி நானாவித வேடிக்கையோடு மகா ஜாககிருதையாய் விழிததிருக்கும்படி கட்டளையிட்டு இநத காரியத்தில் அசட்டையாயிருந்தால் நமமுடையஆக்கினைதெரியுமே யென்றுசொல்லி கட்டுதிட்டஞ்செய்து நளனையழைப்பிதது அவனுககும அவ்வாறே கட்டளை யிட்டருளி சுக்கிரீபன் நீலன் இவர்களை அழைப்பித்து தண்டம . வேல் - வில் - வாள் - யானைகுதிரை - ஒட்டைமுதலிய பலவிதஆயுதங்களையுங்கொடுத்துஇன்றிரவில் தென்திசைப்புறத்தில் பதனமாகக் காருங்களென்றுகட்டளை யிட்டருளி மகா வீரனான் குமுதனை அழைப்பித்து அவனுக்குத் துணைக்கருவியாக இரண்டுலட்சம் வானரசேனைகளைக்கூட்டி சிறிது வாத்தியங்களைக் கொடுத்து அப்பா நீ மேற்குத் திசைப்புறத்திலே இரவில்நாலுஜாமமும் சாக்கிரதையாகக் காருமென்று ஆக்கினையோடு தாக்கிதுசெய்துசாம்புவனை அழைத்து அப்பா நீ வடக்குத்திசைப் புறத்திலே பதனமாகக் காருமென்று சட்டமோடு திட்டஞ்செய்து கிழக்குத்திசைப் புறத்திலும் அவ்வாறே ஆவலோடு காவலாளிகளை சேவகஞ்செய்யத் திட்டமோடு கட்டளையிட்டருளி அங்கதன் - நீலன் - குமுதன - சாம்புவந்தன் இந்நாலுபேரும் அவரவர் திசைபுறத்திலேசாக்கிறதையாகக் கார்க்கிற சமயத்திலே விபீஷணரானவர் அவரவருக்கு சாக்கிறதை சொல்லிக்கொண்டந்தக்கோட்டையைச் சுற்றிக் கொண்டு வந்தார் இப்படி இருக்கிற சமயத்திலே இரவில் பதினைந்துநாழிகையாச்சுது

இனிமேல் மயில்ராவணன்கதையைக் கூறுகின்றது.

நாரதமஹா முனியானவர் சொல்லுகிறார் கேளுமையா கௌதமரிஷியே இப்படி இவர்களிருக்கிற காலத்திலே பாதாள இலங்கையாளுகின்ற மயில்ராவணன் அன்றிரவில் பதினைந்து நாழிகையில் ஆலோசனை செய்து தன்னுடைய அஞ்சன சாஸ்திரத்தை னெஞ்சிலிலளித்துப் பிராமணனை அழைத்து சாஸ்திரங் கேட்டுதன்மனம்நிடச்சித்தனாகி மந்திரிகளை அழைத்துக் கெட்டிக்காரனாக நான்குபேரை நேமித்தான் அவர்கள் யாரென்றால் சதுரனென்றும் சாயத்தியனென்றும் சகலப்பிரவாணனென்றும் மகாமாயாவினோதி யென்றும்நான்குபெயரையுடையவர்கள்இந்த நான்குபேர்களையுங் கூட்டிக் கொண்டு புறப்பட்டான்வர்ண மாலிகை யென்கிறவள் தன்னுடைய புருடனாகியமயில்ராவணன் கையைப்பிடித்துக்கொண்டு ஒருவிசேஷம் சொல்லுகிறாள் வாருமையா சுவாமிநீர்இத்தனைவேளையில் எனக்கேபயணமென்றுகேட்க மயில்ராவணன்சொல்லுகிறான்கேளும்பெண்ணே வர்ணமாலிகையே இலங்கையிலேஇராமலட்சுமணனிரண்டுமனிதர்கள்வந்துஎழுபதுவெள்ளஞ் சே

னையுடனே நமது தமையனாகிய இராவணேஸ்வரனுடைய தம்பி கும்பக ர்ணனையும் குமாரவர்க்கங்களையும் சகல துத இராக்ஷதர்களையும் அதம்பண் ணிப் போட்டார்கள் அப்படிப்பட்ட மனிதர்களை +காளிக்குப் பலிகொடுக் கிறேனென்று சபதங் கூறிவந்தனன் அந்தச் சபதம் தப்பாமல் அவர்க ளிரண்டுபேரையும் கொண்டுவரவேண்டுமென்று போகிறேனென்று கூற இதுகளைக் கேட்ட வர்ணமாலிகை சொல்லுகிறாள் வாருமையா சுவாமி நா னொருவிசேடம் சொல்லுகிறேன் கேளும் அந்த இராமலட்சுமணரிரண்டு பேரும் மனிதரென்று எண்ணவேண்டாம் சாக்ஷாத் ஸ்ரீவைகுண்டவாசியா கிய மகாவிஷ்ணுவென்று எண்ணிக்கொள்ளும் அவர்களை ஒருவராலும் ச யிக்கப்போகாது இராவணனுக்குக் கெட்டுப்போகக்காலம் வந்தபடியால் சீதையென்கிற அக்கினியைக் கொண்டுவந்து சிறையில் வைத்திருக்கிறான் இலங்கைக்கு அனர்த்தந் தேடிக்கொண்டான் புத்திரமித்திரர்களையுங் கொ ன்றுபோட்டுத் தானுஞ் சாகவேண்டுமென்று திரிகிறான் அவனும் செயிக்க ப்போகிறதில்லை நீரும் செயிக்கப்போகிறதில்லை விபீஷணனானவர் தமை யனாகிய இராவணனுக்குச் சொல்லத்தகுந்த புத்திகளையெல்லாம் சொன் னா சொன்னவிடத்திலே அவர் புத்தியைக் கேளாதபடியினாலே இப்ப டிக்கெல்லாம் ஆயிற்று அவன் நல்ல புத்திமானானபடியினாலே நாமிங்கே யிருந்தால் அதமாய்ப் போவோமென்று கருதி அந்த இராமசுவாமியை ச் சரணமென்றடைந்தான் அவனுக்கு இலங்கை இராச்சியத்தை பட்டா பிஷேகஞ் செய்யப்போகிறார் சுவாமி நீரும்போனால் உமது மேனியைப் ஒப்போலே வைத்துக்கொண்டிருப்பார் அடியாள் சொல்லுகிற காரியத் திற்கு விகாதம் செய்து போனால் உம்முடைய காரியம் யாவும் விபரீதமா கும் என்னையனே என்னுயிர்த் துணைவா நீர் இங்கேதானே யிருந்தால் பா தாளலங்கையை யாண்டுக்கொண்டு சுகமாயிருக்கலாம் அங்கேபோகிற து சரியானவுபாயமல்லவென்று அனேகவிதமாக நன்மார்க்கங்கூறி அ வனது இருகையையும் பிடித்துக்கொண்டு அந்தப்புரம் போவோம் வா ருமென்று பலவாறாகத் தடுத்து நற்புத்தியெடுத்துச் சொல்லிக்கூறினள் இவ ளதுவார்த்தைதனைக் கேட்டு அந்தமகாபாவியான மயிலிராவணன் சீறிகோ பமீறிப் பதிவிரதாசிரோமணியான வர்ணமாலிகையைத் தள்ளிப்போவதே உ த்தமமென்று தள்ளி-விழுந்து-எழுந்து-தமது மந்திரிகளைக் கூட்டி சேனை களையோட்டி சவுரியங்களைக் காட்டி நடந்தான்

வர்ணமாலிகை மறுபடியும் புருடனைப் பார்த்து தேகம் வேர்த்து- ஓ ஓ சுவாமி யானொருவது சொன்னேனென் நீர்படுகிற துன்பத்தைப்படுமென்று கூறி அவள் புத்திமாறி அவனைத் தூறி அந்தப்புரம் வீறியஞ்சணையேறி வீ ற்றிருந்தாள் மயிலிராவணன்-கரி-பரி- முதலிய சேனைகளை அழைத் துக்கொண்டு தன்னுடைய அரண்மனையை விட்டு ஆயுதங்களைத் தொட்டு

வாசல்கடந்து அக்கினிக்கோட்டைக்குவந்துயோசனைசெய்து அவ்விட
ம்விட்டுமேல்சமுத்திரக்கரைவெளியிலேலொருவிடத்திலேவாதிருந்து தந
துகாலுமந்திரிகளையும்பார்த்து ஓர்விசேடஞ்சொல்லுகிறான் கேளும்மந்தி
ரிகளேஇனிமேலேஇராமலட்சுமணரிருவரையும் யாவர்பிடித்துக் கொ
ண்டுவருவீர்களென்றுவினவசதுரனென்னுமந்திரிஎழுந்துகாலில்விழுந்
துபயந்துநயந்துமயில்ராவணனைக்கண்டுஅஞ்சலிகொண்டுசொல்லுகிறா
ன்வாருமையாசுவாமிஎன்னைஅனுப்பினீரானால்அந்தஎழுபதுவெள்ளஞ்
சேனைகளையுங்கொன்றுவென்றுஅங்கேநின்றுதின்றுவருவேனென்கூறு
றிஅவர்களிரண்டுபேரையும் கொண்டுவாச்சொன்னாலும்கொண்டுவருகி
றேன்அல்லதுகொன்றுவாச்சொன்னாலும்கொலைசெய்து வருகிறேனெ
ன்றுமறுபடியுஞ்சொன்னான் இவ்வார்த்தைதனைக்கேட்டமாத்திரத்திலேம
யில்ராவணன் சதுரனுக்குச் சகல வெகுமதிசெய்துபாக்குவெற்றிலையுங்
கொடுத்துசீக்கிரத்திலே அனுகூலஞ்செய்துவாருமென்று அனுப்பிவித்
தான்அந்தச்சதுரன்விடைபெற்றுக்கொண்டுஇராமனுடையசேனைகளிரு
க்குமிடம் எங்கேயெங்கேயென்று பார்த்துக்கொண்டு வந்து அனுமார்
கோட்டையிட்டுக்கொண்டிருக்கிறதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்
டு இப்படிப்பட்ட கோட்டையையெந்தாச்சியத்திலும் கண்டதுமில்லை
காதினாலேகேட்டதுமில்லையென்றுநினைத்து நாலுமூலையும் சுற்றிப்பா
ர்த்தான் வாசலெங்கேயென்றால் அனுமாருடையவாயிலேபுகுந்துசெவி
யிலேபுறப்படவேண்டும் அதுவேயொழியவேறேயெங்கும்வழியுமில்லை
வாசலுமில்லைகோட்டையானது ஆகாயபூமி பாதாளத்துக்குமொன்றா
யிருக்கிறதுஒருவர்கையினாலேயும்ஆகாதுகோட்டையிலேயிருக்கிறபே
ர்வெகுசாக்கிறதையாக யிருக்கிறார்கள்ஆனபடியினாலேநம்மாலேயும் பி
ன்னையொருவர்கையினாலேயும்கோட்டைக்குள்நுழையமுடியாதென்று
நினைத்து சதுரனானவன்திரும்பிப்போய் மயில்ராவணனைக் கண்டுதலை
யைக்குனிந்துகொண்டுநின்றான் அப்போதுமயில்ராவணன்சதுரனைப்
பார்த்துவாரும்பிள்ளாசதுராப யிங்கே யிருந்துபோகச்சே யிருந்ததீச
மென்னஇப்போதலையைக்குனிந்துநிற்கும்விதமென்னவென்று கேட்க
சதுரன்சொல்லுகிறான்வாருமையாசுவாமிநாம்வந்தகாரியமாகிற தில்லை
திரும்பிப்போவதேபெரியகாரியம் அதுவெப்படியென்றால்அனுமானான
வர்தம்முடையவாலாலேகோட்டையிட்டுக்கொண்டிருக்கிறார் அந்தக்
கோட்டைக்குள்நுழையவாசற்படிஎங்கும்காணோம்ஆகாயம்பூமிபாதா
ளத்திற்கும்ஒன்றாகவிருக்குதுகோட்டைக்குள் ளிருக்கிறபேர்வெகுசா
க்கிறதையாகஇருக்கிறார்கள்நம்முடைய கையினாலேஆகாதென்றுசதுர
ன்சொன்னமாத்திரத்திலேசாயதியனெழுந்து மயில்ராவணன்காலில்
விழுந்து சாஷ்டாங்கதெண்டன்சமர்ப்பித்து நமஸ்கரித்து சதுரனைவ

ன் உலகமெல்லாம் தன்னைப்போலெண்ணுவான் அவனாலேயாகாவிட்டாலும் என்னாலாகும்சுவாமிஎன்னை அனுப்பினால் அந்தக்குரங்குவாலாலேயிட்டிருக்கிற கோட்டையை நான் காலினாலுதைத்துத்தள்ளிப்போட்டுஎழுபதுவெள்ளஞ் சேனையையுஞ் சங்காரஞ்செய்து இராமலட்சுமணரிரண்டுபேரையும் சங்கரிக்கச்சொன்னாலுஞ்சரியே அல்லது இருவரையும்மகாவிநோதமானபெட்டியிலேபோட்டுக்கொண்டுவரச்சொன்னாலும்போட்டுக்கொண்டுவருகிறேன்சீக்கிரம் அடியேனுக்குவிடைகொடுக்கும்படியென்றுகேட்டான அப்படிகேட்ட மந்தரியைப்பார்த்துமயில்ராவணன் அதிகசந்தோஷப்பட்டு அவனுக்கு அநேகவெகுமதிகளைச்செய்து அனுப்பினான் சர்யத்திமன்விடை பெற்றுக்கொண்டு இராமருடைய பாளையத்தில்வந்து அனுமார்கோட்டையிட்டுக்கொண்டிருக்கிறதைப்பார்த்து ஆச்சரியப்பட்டுபிர்மித்து நின்றுநாமென்னசபதஞ்செய்துவந்தோம் இதைப்பார்த்தால் வெகுகடினமாயிருக்கிறது சதுரானைப்போலேசாமும்சுரமாஇராமல் அனேகசபதங்களைச்செய்துவெகுமதிகளையும்பெற்றுவந்தோம் இப்போதுதிரும்பிப்போனால்நம்மைப்பரிகாசம்பண்ணுவார்கள் அதைவிடச்செத்தாலும்நல்லதென்று அநேகயோசனைசெய்துகோட்டைக்குவழியுமில்லையே இதற்கென்ன செய்யலாமென்றெண்ணி ஆலோசனைபண்ணி பக்ஷிரூபமெடுத்து ஆகாயத்திலேபறந்து கோட்டைக்குள்ளேபோய் இராமலட்சுமணரிருவரையு மெடுத்துக்கொண்டுபோவோமென்றுநிச்சயம்பண்ணிப் பக்ஷிரூபமெடுத்து ஆகாயத்திலேபறந்து வாய்வுமண்டலம்மேகமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம் இக்கல்லைகைமண்டலமப்புறத்திலும் பறந்துபார்த்தான் பார்த்தவளவிலேவாலானது அப்புறம்ஊடுருவிப்போவதைக்கண்டு அதிகவிசாரங்கொண்டுஇப்படியும் ஆகாதென்று பூமியிலேயிறங்கிதன் சுயரூபமெடுத்து கோட்டைக்குட்போகவேண்டுமென்றுமெள்ளமெள்ளவாலைக் கிளப்பி தலையைஉள்ளேநுழையவிட்டான் அப்படி நுழையவிட்டமாத்திரத்திலே அனுமாருக்கு வால்அசைவுகொடுத்ததிற்க அனுமாரென்னமோவென்றுவாலைக்கெட்டியாகநெருக்கினார் வலுவாகவும்இறுக்கினார் நெருக்கி இறுக்கினமாத்திரத்திலே அவனது தலையுள்ளேஉடல் வெளியிலேயுமாக நசுங்கித்தேய்ந்துநெருங்கிசிவன்போகத்தக்கதாக கடினமாச்சுது அப்போது தலையைக்கெட்டியாகஇழுத்தான் இழுந்தமாத்திரத்திலேவால்நெருக்கத்தினாலே முகம் மூக்கு நாக்கு கண் இவைகளெல்லாம் நசுங்கித்தேய்ந்துபோய் இரத்தவெள்ள மெடுத்துக் கொண்டு தலைவெளியிலே வந்தவுடனே மூர்ச்சையடைந்து சற்றுநேரஞ் சென்றபின் மூர்ச்சை தெளிந்தெழுந்து அழுது கடவுளைத்தொழுது மூக்கையும் முகத்தையும் மூடிக் கொண்டு வெட்கப்பட்டு மயில்ராவணன் முன்னேவ

தலையைக்குனிந்துக்கொண்டு கும்பிட்டுநின்றான் நின்றவனைப்பார்த்து மயில்ராவணன் திகைத்து கதைத்து வாரும்பிள்ளாய் சூரதீரசிரோன்மணியே சாயத்தியனென்னுநவமணியே நீ இவ்விருந்து சொல்லிப்போனவிசேடமென்ன இப்போது மூகமும்மூக்குந்தேய்த்து திரும்பிவந்த வயணமென்ன உன்னை இப்படிசெய்ததாரென்றுகேட்க சாயத்தியன்மிகுந்தவிசனத்துடன்சொல்லுகிறான் கேளுமையாசுவாமி நான் அவர்களுடைய பாளயத்திற்குப்போய் கோட்டையைச் சுற்றிப்பார்த்தேன் அந்தகோட்டையானது ஆகாயம்பூமி பாதாளத்துக்கும் ஒன்றாயிருந்ததைக்கண்டு ஆலோசித்துப் பறந்துபோகிறபோது வாயுமண்டலம் - சந்திரமண்டலம்-சூரியமண்டலம்-நட்சத்திரமண்டலம்வரையிலும் பறந்துபார்த்தேன் வால்கோட்டை நெருக்கமாயுயர்ந்திருப்பதைக்கண்டு திரும்பிப் பூமியிலேஇறங்கிப் பெருச்சாளிபோலே அறுத்துக்கொண்டுபோம்போது அதல-விதல-சுதல-விதல-தராதல-மகாதல-பாதாளவரைக்கும் வால்நெருக்கமாகவும் நீண்டுமிருப்பதைக்கண்டு மீண்டுவெளியிலேவந்து மெதுவாக வாலைக்கிளப்பி தலையை உள்ளேபோகவிட்டேன் அந்த அனுமாருக்கு வல்லமைகொடுத்தபடியால் வாலைநெருக்கினார் என்னுடைய தலை உள்ளேயும் உடல்வெளியிலேயுமாகத்தேய்ந்து சீவன்போவதாய்ப்பிராணனுக்கு அபாயம்வருவதுகண்டு தலையையிழுத்துக்கொண்டேன் இழுக்கிறபோது மூகம் மூக்கு முதலானவைகள் நசுங்கிப்போய்ப்பிராணன் பிழைத்துவந்தேன் சதுரர் சொன்னதைக்கேட்டு நாம்பரிகாசஞ்செய்தோமே அந்த அனுமார் மகாபராக்கிரமசாலி அவனைச்செயிப்பது அரிது நாம்வந்தகாரியம் அசத்தியமாயிருக்குது அப்புறம் உமதுசித்தத்துக்குத் தகுந்தயுக்திப்படியே செய்யுமென்று மெத்தவுமவேண்டி சதானைத்தாண்டி தனதுகாவலில் ஆவலோடுசேவகஞ்செய்திருந்தான்.

அப்பால் மயில்ராவணன் சாயத்தியன்போனபின்பு மந்திரிகளைப் பார்த்து வாருங்கள்மந்திரிகளே நான்போய்வருகிறேன் உங்கள்கையினால் ஆகாமற்போச்சுதே நீங்கள் இங்கேதானே நாளைவருகிறபடியந்தம்பத்திரமாகவிருங்களென்று சொல்லிவிட்டு மயில்ராவணனானவன் விபீஷணனைப்போலே ரூபமெடுத்துக்கொண்டு மிகுந்தகோபாவேசத்துடன் இராமலட்சுமணாளெங்கேயென்றுபார்க்க அனுமார்வாலினால்கோட்டை கட்டிக்கொண்டிருப்பதைக்கண்டு அனுமானேஎச்சரிக்கையென்றுசொல்லிக்கொண்டு கிட்டப்போய் கோட்டைக்குள்ளேயெல்லாரும் எச்சரிக்கையாயிருக்கிறீர்களா நான்போய்ப்பார்க்கவேண்டுமென்றுசொல்ல அனுமார்வாலையசைத்து திறந்தமாத்திரத்திலே மயில்ராவணன் அனுமாருடைய வாயிலேபுகுந்து செவியிலேபுறப்பட்டுக் கோட்டைக்குள்ளே

போய் இராமலட்சுமணாள் படுத்துக்கொண்டிருக்குமிடத்தைத்தேடி அங்கேபோய் அவர்களைப்பார்த்து மெதுவாகமாய விநோதம்பண்ணி இரண்டுபேரையுமெடுத்து ஒருபெட்டியிலே போட்டுக கெட்டியாகக்கட்டியெடுத்துக்கொண்டு ஒருவார்த்தைசொல்லுகிறான் ஓ அனுமாரே நாழிகைபதினெட்டும் ஆச்சுது இன்னம் பதினெட்டுநாழிகையிருக்கிறது எச்சரிக்கையாக இரும் நான்வருகிற கள்ளவழிகளையெல்லாம பார்த்துவருகிறேன் மயில்ராவணன் என்னைப்போலும ரூபமெடுத்துக்கொண்டு வருவான் இதுகளையெல்லாம நன்றாக ஆராய்ந்துபார்த்திருமென்று சொல்லிவிட்டுவிபீஷணனைப்போல அனுமாருடைய செவியிலேபுகுந்துவாயிலேபுறப்பட்டு தன்னுடைய மந்திரிமார்களிருக்கிறவிடத்திலே போயழைத்துக்கொண்டுதமது பாதாளவிலங்கையிலேபெட்டியைக் கொண்டு போய்வைத்து சில இராட்சசர்களையும் காவல்வைத்துவிட்டுத திரும்பினான்.

அந்தசமயத்திலே ஆகாயவாணிபார்த்துச்சொல்லுகிறாள் அடாவடாமயில்ராவணா இந்தமட்டுக்குந்தான் உனக்குப் பட்டமெல்லாருக்கும இனிமேல் பட்டமபொறுக்காது இந்தபெட்டியிலிருக்கிறவர் சாக்ஷாத ஸ்ரீவைகுண்டநாயகராகிய இராமலட்சுமணரையெடுத்துக்கொண்டுவந்தாயே அதனாலேஉனக்கு அழிவுகாலம்வந்துவிட்டது அனுமாரானவர் வந்து பட்டணமெல்லாஞ்சுட்டுக் கோட்டையைக்கெருந்தி இராட்சசர்களையுங்கொன்றுவென்று உன்னுடபிறந்தாளாகிய தூரதண்டியின்பிள்ளை சித்திரசேனனுக்குப்பட்டங்கட்டிவிட்டு இராமலட்சுமணரையெடுத்துக்கொண்டுபோவாரென்று ஆகாயவாணி பலமுறைநற்புத்திகளெடுத்துக்கூறினாள் அந்தமகாபாவியானமயில்ராவணன்காதிலே நாராசங்காய்ச்சிவிட்டதுபோலும் மரமதிலேவயிரவாணிகடாவினாற்போலும் எரிற்றுமயில்ராவணன் பயந்துநடுங்கி ஒடுங்கி அயர்ந்துமயர்ந்துநாணி மனதுகோணியுடனே தூரதண்டியையுமசித்திரசேனனையும பிடித்துக்கட்டி காலவிலங்குகைவிலங்குமெய்விலங்குதோள்விலங்குமார்விலங்கு இவைகளைப்பூட்டி ஒருகுகையிலேமாட்டி அடைத்துதன்னுடைய ஆசனமனையிலே ஆஸ்தானிகாமஞ்சத்தில்சித்தினைபோகத்திற்குப்போனான்.

அங்கே விபீஷணனானவர் வால்கோட்டையிலே அவரவர்களுக்கு எச்சரிக்கைகூறிவரும்போது அனுமார்சொல்லுகிறார் ஏன் விபீஷணரே அர்த்தநாழிகைக்குமுன்னே வந்து என்னைப்போல் உருவமெடுத்து வருவானென்றும் நான் அவன்வருகிறகள்ளவழிகளைப்பார்த்து வருகிறேனென்றும் சொல்லிவிட்டுப்போனீர் என்னையறியாமல் கோட்டைக்குள் எப்படிவந்தீர் மறுபடியும மனதுகசிந்துகசிந்துவருவது என்னவென்று அனுமார்கேட்டார் விபீஷணர்கேட்டு இடிவிழுந்தாற்போல ஏங்கி

பொரிந்து கரிந்து குடலுஞ்சரிந்து எடுத்துக்கொண்டுபோய் விட்ட
செலறுதெரிந்து அரிந்து பழுமரம்போலுருண்டு விழுந்து எழுந்து
வாரித்து மனம்பதித்து தியங்கி மயங்கி அஞ்சித அஞ்சி அனுமானை
க்கெஞ்சி விசாரமின்றி ஐயையோகெடுத்தீரே வீண்பெயரொடுத்தீரே எ
ன்றுகூற அனுமார்கனிந்து முனிந்து அகம்வெறுத்து முகங்கறுத்துக்கூ
ணைப்போதிலே மூர்ச்சையடைந்தார் மூர்ச்சைதெளிந்து விபீஷணனைப்
பார்த்து நீசொன்னதுபொய்யல்ல மெய்யே எனக்கு மதிமயங்கி ஒன்
றுந்தெரியாமற்போயிற்று இதற்கென்ன செய்வோமென்று கேட்க விபீ
ஷணர்சொல்லுகிறார்.

வாருமையா அனுமாரே யான் என்தமையனாகிய இராவணனைப்ப
கைத்துக்கொண்டு வழிபடுகடவுளாகிய இராமசுவாமியைச் சரணமென்
றடைகதேன் அப்படிப்பட்ட சுவாமியையும் மயிலிராவணன்கையில் ஒ
ப்பித்துவிட்டேன் என்னைப்போலொருபாவி இவ்வுலகிலுண்டோவெ
ன்று பலவாறுஅழுது கடவுளைத்தொழுது துயரப்பட அனுமாரும்மன
துகலங்கி துயரமவிலகிச் சொல்லுகிறார் கேளும்விபீஷணரேநமது சு
வாமி படுத்துக்கொண்டிருக்கிற விடத்திலேபோய்ப் பார்ப்போம் வாரு
மென்று அழைக்க நல்லதென்று இருவரும் சுவாமிபடுத்துக்கொண்டிரு
க்கிறவிடத்திலே பார்க்க அவ்விடத்தில் சுவாமியைக் காணுதபடியினு
லே விபீஷணர்கூறுகிறார் இனிப்பொழுதுவிடிந்தால் சுக்கிரீபர் வருவா
ரோ சுவாமிஎங்கேயென்று கேட்பாரோ அவருக்கென்ன சொல்லுகிறது
இத்தனைபேருமிருந்தும் சுவாமியை ஒப்பித்துவிடலாமோமென்று வைவ
வாரோ ஆக்கினையும் செய்வாரோ எழுபதுவெள்ளஞ்சேனையும் அவரவரி
ருப்பிடம்போய்விடுமே நான் சுவாமியைநம்பிவந்தேனல்லவா நான்எங்
கேபோவேன் எனக்கு ஒருவிடமுமில்லையே அநாதிபட்டுபோலானே
னே அபகீர்த்தியும்ஆயிற்றே தீரவீரப்போயிற்றே சுவாமியை எந்தக்கா
லத்திலேகாண்பேனென்று வெகுவாய்விசாரப்படுகிறபோது அனுமார்
ஒருவிசேஷஞ்சொல்லுகிறார் ஐயா விபீஷணரே மயிலிராவணன்உம்மை
ப்போல்உருவமெடுத்தது தெரியாமற்போயிற்று இப்படி கபடுசெய்வா
னென்று தெரிந்தேனாகில் மகாசாக்கிரதையாகவிருப்பேன் அப்படிப்பட்
டதுன்மார்க்கனைக் கொன்றுவிட்டு இராமலட்சுமணு ளிரண்டுபேரையு
மெடுத்துக்கொண்டுவருகிறேன் நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்
அந்தபாதாளவிலங்கைக்குப்போகிறவழி யெப்படிஎன்றுகேட்க விபீஷ
ணர்சொல்லுகிறார் கேளுமையா பாதாளவிலங்கைக்கு நீராவதுபோவ
தேது பாதாளவிலங்கையோவெகுகடினம் ஒருவராலேயுமாகாது அஃ
தெப்படியென்றால் நடுச்சமுத்திரத்திலே பெரியகடற்றாமரைப்படர்ந்தி
ருக்கும் அதிலொருதாமரைநீண்டும் ஒருபுட்பம் பெரியதாயுமிருக்கும்

அந்தபுட்பத்தின் தண்டிலே துவாரமாயிருக்கும் அத்துவாரத்திலே சரீ
ரத்தைபொடிக்கி நுட்பமான புகையைப்போல் போகவேண்டும் அப்ப
டிப்போனால் அவனுடைய பாதாளலங்கை அக்கினிக்கோட்டையோடுதோ
ன்றும் அக்கோட்டையின் சிகரத்திலே யச்சகற்பனென்று ஓர்ராட்சச
னுண்டு அவன் மகாபராக்கிரமசாலி அவனை ஒருவராலேயும் ஜயிக்கப்படா
து அவனோடுகூட இரண்டாயிரம் இலட்சம இராட்சசர்களுண்டு ஒருவ
னைப்பார்க்கிலும் ஒருவர் மகாபராக்கிரமசாலிகள் அங்ஙனமவிட்டு மற்
றொருபக்கமபோனால் அங்கொருசற்பகத்திருக்குளம் ஒன்றுண்டு அந
திருக்குளத்திலே அந்தப்பட்டணத்திலுள்ள ஜனங்களும் இராட்சசஜ
னங்களும்வந்து தண்ணீர்மூழ்குவதும் பூசை செயலதுமாக யிருக்குமத
ண்ணீரெடுத்துக்கொண்டுபோகிறபோது கோட்டைவாசலிலே இருக்கி
றபேர் தண்ணீர்முதலானதும் துலாபாரத்திலேவைத்து நிறுத்துச்சோ
தித்துக்கொள்ளுவார்கள் அதிலேயாதாமொரு அத்தாட்சிகாணப்படுவா
ராயின் அங்ஙனமே அக்கினியோடு தாக்கீதுசெய்வார்கள் அப்படிப்பட்
டகட்டுங்காவலுமாகயிருக்கும் அப்புறம்போகையில் அந்தபட்டணமமா
டமாளிகை கூடகோபுரம் அரண்மனையோடுதோன்றும் பாதாளலங்
கையின் பெருமையும் அருமையும் மூவராலும் தேவராலும் யாவராலு
ம்சொல்லப்படாதென்று விபீஷணர்கூற அநுமார்கேட்டு இனிமேல்
அமைச்சணமிருக்கிறதில்லை நாம்வழிபடுதெய்வமாகிய இராமலட்சுமணு
ளிரண்டுபேரையுமெடுத்துக்கொண்டுவராவிட்டால்பாதாளலங்கையி
லேஎன்சீவனைவிட்டுவிடுகிறேன் இனி ஒருவருக்குமஎன்முகத்தைக்கா
ட்டுகிறதில்லையென்று சொல்லிப் புறப்பட்டார் மறுபடியும விபீஷணர்
சொல்லுகிறார்.

வாருமையா அநுமாரேஅந்தவிதத்திலேபோய் வரவேண்டுமோ அ
ந்தவிதத்திலேபோயவாரும் நீர்செயமாய்வந்தாலாச்சுது இல்லாவிட்டா
ல் இவ்விடத்திலேதானே நான்பிராணத்தியாகம்செய்துகொள்ளுகிறே
ன் அதுநிச்சயமாயெண்ணிக்கொள்ளும் இராமசுவாமியார்கிருபையினு
லே நீர்ஜயமாய்வருவீர் சீக்கிரத்திலே நமதுகாரியத்தைச்செய்துசெய்து
வாருமென்றுவிடைகொடுத்தார் அநுமார் பாதாளலங்கைக்குப்புறப்
பட்டுபோகிறபோது நடுச்சமுத்திரத்திலே தாமரைவிசேஷமாகப்படர்ந்
திருந்தன அதிலே ஒருபெரியதாமரைப்புட்பமிருந்தன அந்தபுஷ்பத்தி
ன்தண்டிலே தன அசரீரத்தைபொடுக்கி புகைபோலேப்புகுந்து பாதாள
இலங்கைக்குப்போய் அக்கினிக்கோட்டையைக்கண்டு அதனருகேபோ
கிறபோது அப்பட்டணத்திலுள்ளவர் அநுமானைக்கண்டு சொல்லுகிறா
ர்கள் இதற்குள்ளே அநுமாரும்கிட்டேவந்துவிட்டார் சனங்கள்பார்த்து
இந்தக்குரங்கைப் பிடிக்கவேண்டுமென்றுவந்து நாலுபுறமும் வளைந்து
க்கொண்டார்கள் அவர்கள் நாலுபுறமும் வளைத்துக்கொண்டதை அநு

மார்பார்த்து சற்றும் அஞ்சாமல்உடனே தமது விசுவரூபத்தையெடுத்
துஇராட்சசரைததடுத்து வாலாலே வளைத்துசசுறறிநிலததிலேஉளத்து
ருகைகைப்போல் மூளைதது விசுவரூபங்கொளதது அடிஅடி யென்றடித
து இடியிடியென்றடித்து புடைததது வாலைததுடைத்துஅனறு இராட்
சசர் தலையைககிள்ளி இரத்தநீரை அள்ளி அருந்தி மனதுகவிந்திருக்கும
பொருந்திஇருக்க சற்றும இராட்சசர்வந்து எதிரக அவர்களையும் அவ்வா
று காலமாடுதலைமாடு காலமாடாகப் பிடிதது அடித்து இடித்துமிதித்து
டித்துப் பற்களைகறகறவென்றுகடித்து யுத்தங்கள்பண்ணுகிறபோது ம
ச்சகற்பன்கேட்டு மனமபதைததுஅநேக இராட்சசககூட்டமுந்தானு
மாக அனுமாரிடத்திலே வந்துசேர்ந்துசண்டைக்குமுனைந்துவீரமணி
களையாட்டி சவுரியங்களைக்காட்டி வானரசேனையைமாட்டி அரக்கர் கூ
ட்டங்களைநாட்டி சிங்காதனங்களைமீட்டிவெற்றிவெற்றியென்று விருது
பதாகைச்சாட்டி யுத்தவாயுதமணிந்து சித்தமாகத அணிந்துநோக்கி
அனுமாரோடுதாக்கி தோர்வையென்பதைநீக்கி வெவ்வியென்பதையா
க்கிமகாவீரனாகவும் தீரனாகவும அனுமானைக்கொல்லவும அதிகவெல்ல
வுமாகவந்து எதிர்த்தனன் அனுமாரும் மச்சகற்பனும் ஒருவர்க்கொரு
வர்தாக்கி சண்டைகளாக்கி அவனடிக்க இவரிடிக்கமச்சகற்பனுவிதடி
க்க சற்றும் இளையாமலும்சளையாமலும்தேகம்பதைக்கவும் இராட்சசனு
டல்சிதைக்கவும் அனுமாரவதைக்கவும் பூமியில்தள்ளிஉதைக்கவும் இ
ராட்சசன்கோபமீறி அனுமானைத்தூறி பாம்பைப்போலச்சீறி சிங்கம்
போலவீறிஅஞ்சாமலும்விரதீரத்துஞ்சாமலும்அவரோடுகூடசரிசமான
மாகச்சண்டைசெய்துவந்தான் அனுமாருக்குகைகால்அசைந்துதோர்ப்
படைந்தார்அப்படித்தோர்ப்படைந்த அனுமார் ஆலோசித்துஒருவார்த
தைசொல்லுகிறார்சேனுமபிள்ளாய் நீயாருடையகுமாரன் உன்தகப்பன்
பேரென்ன உன் தாய்பேரென்ன உன்பெயரென்ன அதையெனக்குத்
தெரியப்படச்சொல்லென்றுகேட்கமசசவல்லபன்கூறுகிறான் அடாவா
டாவானராகீஎன்னைகேட்கிறது நான்என்னைசொல்லுகிறதுசண்டைசெ
ய்யவந்தவிபுணைன் நீதானுசண்டைசெய்யத் திறமில்லாமல்சாதி குலம
கேட்கவந்த நீதிகெட்டவனே எழுந்திருசண்டைசெய்வோம் உன்சம
ர்த்தும் என்சமர்த்தும் அறியலாம சற்றெழுந்திரு சற்றெழுந்திருயென
று வலுவந்தமாக அழைகக அனுமார்சொல்லுகிறார் கேளும் பிள்ளாய்
இராட்சதோத்கபசிகாமணியே உன்குலமும்நலமும்பலமும்சகதியும் நீ
தியுமகேட்பதென்னவென்றுகேட்டாயேயானுலசொல்லுகிறேன்

சேனும்பிள்ளாய் நான் அநேக சீமையிலேயோடி அநேகம்பே
ருட்னே கூடி சண்டைகளாடினேன் சகலரையுஞ்சாடினேன் வெற்றி
யில் நீடினேன் யெனக்குமிஞ்சினபலசாலிகள் இந்தபூமண்டலத்

திலுமில்லை அப்படிப்பட்ட மகாசுத்தவீரனாகிய நான் உனக்குத் தஞ்சினேன் அஞ்சினேன் ஆனபடியினாலேஎன்னுடையஜீவன்உன்கையினாலே போமபடியாகத் தோன்றுது இதற்குமுன்னமே எல்லாமறிந்துசாவோம் அல்லதுகிருபயிப்போவோமென்றுஎண்ணியும் யோசனைபண்ணியும்சொன்னேன் இவ்வளவு பராக்கிரமசாலியாகிய உன்னைப் பெறறமாதாயாரோ அவளைச்சேர்ந்தசுத்தவீரனெத்தனைபராக்கிரமசாலியாகவிருப்பானோஅறியேன் எவ்வளவுதபசு செய்துபெற்றார்களோ அதையுங்குறியேன இப்பேர்ப்பட்டபெலத்துடன்கூடி ஒருவனிடத்திலே சேவிப்பானேன் நீஇந்தப்பதினாலுலோகங்களுந்,செயிப்பாயேமயிலிராவணனிடத்திலேசேவிக்கிறகாரணமென்னநானுகேட்கிறேனென்று கோபித்துக்கொள்ளவேண்டாம் என்னைச்சண்டைக்கு அழையாதேநானுன்னோடேசண்டைசெய்யவெனக்குப்பலனில்லைநானதோற்றுப்போனதேபோனதுமெய்யேஎன்பேரில் தயவுசெய்யுமையாவென்று அநுமார் பலமுறையுந்தொழுதார்.

மச்சவல்லபனு மனதிரங்கி தஞ்சமென்றவனைக் கொல்லக்கூடாதென்று நெஞ்சினைந்துகேளும் வானரசிகாமணியே என்னுடைய தகப்பன்பேர் சொல்லுகிறேன்கேளும் கேட்டபின்பு சண்டைக்குவாரீரோ என்ன அப்படியேநல்லதென்று அநுமார்கூறமச்சவல்லபன்சொல்லுகிறான் ஐயா வானரோத்தமா என்தகப்பன்யாரென்றால் அஷ்டதிக்குப்பாலரையும் வெல்லுவான்மும்மூர்த்திகளையுங்கொல்லுவான் மகாசமர்த்தன்சுத்தவீரன் சத்துருசம்மாரன் சாவில்லாமல் சிரஞ்சீவிபெற்றவன்சாக்ஷாத்சிவசங்கற்பமாயிருக்கிறானே அவன்தான் என்தகப்பன் அவருடையநாமதேயம்அநுமாரென்றுசொல்லப்படும் என்தாயார் திமிதிஎன்னும்மச்சம்என்தகப்பனைப்பெற்றவன்வாயுபகவான்என் பெயர்மச்சகற்பன்என்றுசொல்ல அநுமார்கேட்டுத்திடுக்கிட்டுமச்ச வல்லபனைப்பார்த்து அநேகமாயோசித்து ஏதப்பா என்னைத்தவிர வேறொருஅநுமானுண்டோ இல்லைநான்ஒருவன்தானே அநுமார்இதென்ன விசித்திரமாயிருக்கிறது எனக்குஸ்திரீகளில்லையே காமநித்தியபிரமசாரியாயிற்றே ஆனால் முன்னம் இலங்கைக்குப் போய்ச் சீதையைத்தேட இராவணனுடையபுட்பகவிமானத்தில்ஸ்திரீகள் தாருமாறாகக்கிடந்தார்களே அவர்களைக்காமம்பார்த்துச்சாபல்லியப்பட்டோமே ஐயையோ என்னையறியாமல் பிள்ளைவந்தகாரணமேது என்னமோபுதுமையாகத்தோன்றுது மற்றும் கேட்டறிவோமென்றுகேட்கிறார்

வாருமையா மச்சவல்லபா மறுபடியுங் கேட்கிறேனென்று கோபம் செய்துக் கொள்ளாதே என்வார்த்தையைத்தள்ளாதே இன்னம் ஒரு விசேடம கேட்கிறேனென்று சொல்லுகிறார் அநுமா ரென்று சொ

ன்னீரோ அவன் எங்கேயிருக்கிறவன் யாரிடத்திலே சேவிக்கிறான் சொ
ல்லுமென்று வினவமறுபடியும் மச்சவல்லபன் அனுமானைப் பார்த்து
ச்சொல்லுகிறான் அடாவாடாவானராதிபதி என்தகப்பன் ஸ்ரீராமலட்
சுமணனுக்குச் சேவகன் அவனுக்குத்துணைசுக்கிரீபன் அந்தச் சுக்கிரீப
ன்மகத்தானஎன்தகப்பன்வாலியினாலே ஓட்டப்பட்டுவனாந்தரத்திலிருக்க அ
ப்போது இராமலட்சுமணனை அனேகசிருமாறுபணை அதுகளையாவும்
திட்டப்படுத்தி கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டினமகானுபாவன அவரோ
னாதுதகப்பனென்றுகூற அனுமார் சந்தோஷித்திருதயமகிழ்ந்து புக
ழ்ந்து ஆசையினாலே உன்தாய்தகப்பனைபேர் கேட்டால் இப்படி பரிகாச
ஞ்செய்யலாமோ பொய்சொல்லலாமோ நான்தான் அந்த அனுமானை அறியே
ன் அவ்வனுமார் நித்தியபிரம்மசாரியாயிற்றே அவருக்குஸ்திரீஉண்டோ
பொய்சொல்லாமல் சொல்லுமென்று வினவ மச்சவல்லபன் சொல்லு
கிறான் வாராய்வானராதிபதியேயென்தகப்பன் அனுமார் இராமலட்சு
மணனுடனே சுக்கிரீபன் அங்கதன் நீலன் நளன் குமுதன் மசசந்தே
வாட்சன் முதலான பேருடனே சீதையைக்காணும்படி நாலு மூலைக்கும
வானரரை அனுப்புமபோது என்தகப்பன் தெற்குபாரிசத்திலேவந்து
சமுத்திரக்கரையிலேயிருந்து சீதை இலங்கையிலேயிருக்கிறாளென்று
அறிந்து அக்ஞைமிருந்தபடியாக ஆகாயத்திலேபறந்து சமுத்திரம நூ
றுயோசனை தாண்டியேகும்போது அந்தச்சமுத்திரத்திலேசெச்சை எ
ன்கிற இராட்சசி அனுமாருடையசாடல் நிழலைக்கண்டு பிடித்துக்கொ
ண்டுவிழுங்க என்தகப்பனாகிய அனுமார் அந்த இராட்சசியின்வாயிலேபுகுந்
து உள்ளேபோய வயிறனைக்கிழித்துக்கொண்டு போகிறபோது மகாவி
ளைப்பாக உடம்புவேர்வைவேர்க்க அந்தவேர்வையைப்பிழிந்துசமுத்திர
த்திலேபோட அந்தச்சமுத்திரத்திலே வாசஞ்செய்கிறமச்சி என்கிற
பெண்மச்சம வாயிலேவிழுந்து அந்தவேர்வையை மீனவிழுங்கினவுட
னே கர்ப்பந்தரித்துஎன்னைப்பெற்றாள் அந்தக்ஷணமே நானசமுத்திரக
கரையிலேகுளிர்நடுங்க உட்கார்ந்துகொண்டிருந்தேன் இருந்தாற்போ
லிருந்து ஒருதிவ்வியபுருஷன்வந்து என்னையெடுத்து மடியின்பேரிலே
வைத்துக்கொண்டுஉள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையிலுந்தடவிக்கொ
டுத்துஎன்னைமுகந்துகொண்டுமுத்தமிட்டுக்கொண்டார் அப்போதுநா
ன் திவ்வியபுருஷனைப்பார்த்துவாருமையா நீர் ஆனாயானபேரிலேவெ
குபிரீதியாக உற்றார்பெற்றார்போல யென்னைப்பட்சமோடு எடுத்து மு
த்தமிட்டுக்கொள்ளுவ தென்னவென்றுகேட்க அத்திவ்விய புருடன்
சொல்லுகிறான் ஓ ஓ குழந்தாய் நானுனக்குப்பாட்டனென்றுகூறிஎன
க்குப்பேருமிட்டார் நான்மச்சகத்தின்வயிற்றிலே பிறந்தபடியால்மச்ச
வல்லபனென்றுநாமதேயமிட்டார் இப்படியிருக்க நான்பாட்டனாகிய

வாயுபகவானைப்பார்த்து பாட்டா யென்தகப்பன் எங்கேயென்றுகேட்டேன் அவர் சொன்னது யாவருக்குமூத்தாய் உன்தகப்பன்பேர் ஆஞ்சநேயர்யென்றும் அனுமாரென்றுங்கூறி அவருக்கு அனேகவரங்கொடுத்து முப்பத்துமுக்கோடி தேவர்களாலும செயிக்கப்படாது (தூவு) அஸ்திரத்தினாலேயும் சாவில்லையென்றுகூற அப்போது நான் யென்தகப்பன் இப்போது எங்கேயென்றுகேட்டான் வாயுபகவானசொன்னது அதோ அனுமார்சீதையைக்கண்டுபேசி இலங்காபுரிபட்டணத்தைசுக்கொளுத்தினரொன்றார் வாரும்பாட்டா எனக்குவரந்தரவேண்டுமென்றுகேட்டேன் அவர் சும்மாவந்தாலாகாதென்று ஒருநாழிகை தன்னைக்குறித்து தவஞ்செய்யென்றுசொல்ல நான் அப்படியேதவஞ்செய்ய அவர்சந்தோஷப்பட்டு தவசை நிறுத்தியென்னவேணுமென்றுகேட்க நான்வரம் ஒன்றுயிருக்கவேண்டும சகலவாமும் அதிலே அடைந்திருக்கவேண்டும் என் தகப்பன்வரத்திலும் அதிகமாக இருக்கவேண்டுமென்றுகேட்டேன் நல்லதென்றுவரங்கொடுத்துப்போனா இப்படியாகவென்னுடையபூர்வோத்திரம கேட்டீரோ வானரசிரேஷ்டனேயென்றுசொன்னான்

இந்தவசனங்களையெல்லாம அனுமார்கேட்டுச் சந்தோஷித்து நப்போடும் விப்போடும் மெய்யென்று ஒத்துக்கொண்டு சரீரத்தை அநியாயமாய் மடிக்கப்பார்த்தோம் நமக்கும் புத்திரசிகாமணிகிடைத்தது நமது பாக்கியந்தான் என்றெண்ணி யோசனைபண்ணி ஆ ஆ புத்திரசிகாமணியே நான் நான் அனுமானென்று சொல்லமச்சவல்லபனானவன் உடனேபயந்துநடுநடுங்கி யொடுங்கி அணிந்து பணிந்து தகப்பனென்றெண்ணி நமஸ்காரம்பண்ணி ஆடிப்பாடி காலிலேயோடி விழுந்துஎழுந்துநிற்க அனுமார் மச்சவல்லபனையெடுத்து மூக்கிகொடுத்துமடிமேலே வைத்துக்கொண்டு உச்சிமோந்துமுகந்து சரீரமெல்லாந்தடவி அப்பாகுமாரா மச்சவல்லபா நானுன்னை யடித்தேன் மகாபாவியானேனென்றுமறுபடியுஞ்சொல்லுகிறார்.

கேளுமையா மச்சவல்லபா நானொருகாரியமாகவந்தேன் எனக்கு அந்தகாரியம சாதித்துத்தரவேண்டுமென்ன மச்சவல்லபன்சொல்லுகிறான் வாருமையா நீரென்னகாரியமாகவந்தீர் நானே அந்தகாரியத்தைமுடித்துக்கொடுக்கிறேன் சொல்லுமையாவென்றுவினவ அனுமார்சொல்லுகிறார் கேளுமப்பா மச்சவல்லபா திசைகண்டராவணனோடே இராமலட்சுமணனும வானரசேனைகளும கூடி சண்டைபண்ணி மூலபலத்தையும் அதஞ்செய்தபின்பு திசைகண்டராவணனானவன் இந்த மயில்ராவணனையழைப்பித்து இராமலட்சுமணனைக்கொண்டுபோய் உன்னுடையபாதாளஇலங்கையிலேவைத்துப்போடென்றான் அவ்வாறே மயில்ராவணன் இராத்திரிவந்து என்னை மோசம்செய்து இராமலட்சுமணனை எடுத்துவ

தான் அதன்பின் பூரான் கோபத்துடனே மயில்ராவணனைச் சங்கரிக்கிறே
னென்று பிரதிக்கினை செய்து நான் அவனைத் தேடிவந்தேன் அவ்விராமல
ட்சுமணரெங்கேயிருக்கிறார்கள் உளவுகள் உனக்குவதாகிலுந் தெரியும
ல்லவாசொல்லுமென்ன மச்சவல்லபனை சொல்லுகின்றனன் நம் மூன்
னம் குழந்தையாக யிருக்கிறபோது வாயுபகவான் எனக்குவரங்கொடுத்
துப்போனார் அப்போது நான் ஒருயோசனை செய்திருந்தேன் அதாவ
து இந்தப்பதினாலு லோகமும் சயிக்கவேண்டுமென்று கருதினோன் அ
ப்போதிந்த மயில்ராவணன் வேட்டைமார்க்கமாகப் புறப்பட்டுவொளிருக
கும் இடத்திலேவந்து என்னுடைய முகங்களையும் பராக்கிரமத்தையுங்கண்
டு மகிழ்ச்சிகொண்டு மயில்ராவணன் சாஷ்டாங்கமாகக் காலில்விழுந்து
பணிந்து துணிகரநவாம வேண்டுமென்று கேட்டான் நானவனைப்பா
ர்த்துச் சந்தோஷப்பட்டு இப்படிப்பட்ட இராஜாவானவன் சிறுபிள்ளை
யாகிய என்காலில்விழுந்து கேட்டானென்று மகிழ்ந்து புகழ்ந்து மயில்
ராவணனைப்பார்த்து உனக்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்டே
ன் மயில்ராவணன் சொன்னது வாரும்பிள்ளாய் மச்சவல்லபா நானாளுகி
ற பாதாள இலங்கையைக்காக்க வொருவருமில்லை நீயிருந்து காத்துக்
கொண்டுவரவேண்டுமென்று அழைத்துவந்து தன்னிடத்தில் வைத்து
க்கொண்டான் அன்றுமுதலின்றையவரையிலும் நான் காத்துவருகிறே
ன் இப்போதெப்படியும்மைவிடுவேன் நீர்தர்மசாஸ்திரமியாவு மறிவீரோ
உம்முடைய மனத்துக்குத்தக்கபடி நடைவுடையாவென்று வணங்கிச்
சொல்ல அனுமார் மச்சவல்லபனைப்பார்த்துச்சொல்லுகிறார்

சேனுமகுமாரகா ஆனால்நான்செய்யவேண்டியதென்ன அபசயப்
பட்டால் அந்த அபகீர்த்தி உனக்கில்லையா உன்னுடையதல்லவா என்று
இவர்பலமுறையாகச்சொல்ல மச்சவல்லபன் சொல்லுகிறான் வாரும்பி
தாவே நான் உயிரோடேயிருந்து மயில்ராவணனுக்குத்துரோகம்பண்ண
மாட்டேன் உமமைசெயித்து உலகத்திலே அபகீர்த்தியுமடையமாட்டே
ன் உமக்கு அந்தரங்கமான வார்த்தைகளைச்சொல்வது தருமமல்ல ஆனா
லும் உம்முடையவிவரத்தை அறிந்துசொல்லுகிறேன் நீர்வரும்போதுதா
மரைக்காலத்திலே இரண்டாயிரம் இராட்சசர்க ளிருந்தார்களே அவர்க
ளைக்கொன்றெறிந்துவந்தீரோ சொல்லுமையா வென்றுகேழ்க்க அந்த ஆ
யிரம் இராட்சசனையுங்கொன்றுவந்தேனென்று சொல்ல மச்சவல்லபன்
சொல்லுகிறான் ஆனால்ஜெயத்தையடைவீர் நான் உம்மைசும்மாவிடக்கூ
டாது ஒருசந்திரஞ்சொல்லுகிறேன் அதென்னவெனில் என்னைநடுமார்பி
ல்குத்துவீராகில்நான் மூர்ச்சையாய்விழுவேன் என்னுயிர்விலயாது தான்
அவ்விதஞ்செய்து அப்புறம் நீர் உள்ளேபோம் என்றுசொல்ல அனுமார் அ
ங்ஙனேயோசித்து சுவாமியைப்பூசித்து துயாப்பட அதைக்கண்ட மச்சவ

ல

ல்லபன் ஓ-ஓ-ஓ பிதாவே நான் இப்படிஇருந்தால்உள்ளேபோகமாட்டே
ன் நாழிகைஅதிகமாகுது இப்படியிருக்கக்கூடாது மூன்பின்யோசியாம
ல் உனதுபெலமெல்லாம்சேர்த்து ஓங்கிக்குத்துமையாவென்று தனது
மார்பைக்காட்டினிறக அப்போதுஅனுமார்மனவருத்தத்துடனே ஐந்து
விரலையு முஷ்டியாகப்பிடித்துமச்சவல்லபன் மார்பிலேகுத்தினா அந்
தக்குத்தினாலே மச்சவல்லபன் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான் அ
னுமார்தமதுகுமாரனுக்குவலித்துதேவென்றுமனவிசாரத்துடனே மூ
ர்ச்சையாய்விழுந்த மச்சவல்லவனைத்தடவிக்கொடுத்துச் சுகமாயிருக்கு
ம்படிஆசீர்வதித்து இராமசுவாமியைத்துதித்து பாதாளஇலங்கையை மி
தித்துஇராட்சசர்எங்கேயென்றுமதித்துஉள்ளேசென்றுஅகநனம மின்
றுமற்றோர்பக்கம்பிரவேசித்தார்

அப்படி போகிறபோது அவ்விடத்தில்முதல்கோட்டை செங்கல்
லினாலே சுட்டப்படடிருந்தது அதைப்பார்த்து அப்பால்போம்போது
காலாயிரம்லட்சம் இராட்சசர்கள் ஆயுதத்துடனே காவலிருக்கிறார்கள்
அவர்களை அனுமார்பார்த்துதேகம்வேர்த்து இவர்களை எவ்வாறு சங்கரி
ப்போமென்று கருதிதியங்கி மயங்கிசொல்லுகிறபோது அங்கேஒருமா
மானது பிரமாண்டமாகஇருக்கப்பார்த்து அந்தபெருமாததைவேரோடு
பிடுங்கிக்கொண்டு குபீலென்றுஇடிவிழுந்தாற போல்பயந்து அந்தசெங்
கற்கோட்டையின்வாசற்படியைவாலினால்படல்கட்டிமூடிமூத்திரிங்கை
போட்டுக்கொண்டுஉள்நுழைந்து இராட்சசர்களைப்பார்த்து கோபநகை
செய்துஅனுமாரானவர் மரத்தினாலே குணாயடிப்பதுபோலஇராட்சசர்க
ளை அடிக்கிறகாலத்தில்இராட்சசர்களெல்லாமகத்திகளையும் வாள்களையு
ம்உருவிப்புறப்பட்டு அனுமாரைக்கொல்லும்படியாக எதிர்த்து யுத்தங்க
ளைசெய்கிறார்கள் அதைக்கண்ட அனுமார்சற்றுமஞ்சாமல் அவ்விதஅரக்
கரையெல்லாம்நோக்கிஒருவரோ டொருவனாத்தாககியுத்தஞ் செய்கிற
போதுசத்தசமூத்திரமுழக்கம் போல்சக்கிராயுதமும் சுக்குமாங்கியும் க
ண்டகோடாலியும்தெண்டாயுதமும்அஸ்திரசஸ்திரமுங்கொண்டுசிலரா
கூதர்கள்சிலர்தண்டுவாள்வேல்-வில்-முதலிய ஆயுதங்களைக்கொண்டுநா
ற்புறத்திலுஞ்சூழ்ந்தார்கள்சிலமல்யுத்தத்திற்குநேர்ந்தார்கள்சேனைதி
கள்யானை அறுபத்துலட்சம்தேர்ஆயிரம்லட்சமஇராகூதர் நூறுயிரம்ல
ட்சம்இப்படிப்பட்டசேனைசங்கியங்களுடனேவந்தெதிர்த்தார்கள் அ
த்தருணத்தில் அனுமாரானவர் கையிலிருந்தவிருட்சத்தினால் நானாவித
மாகசாடினார் அத்தருணத்தில் இராட்சசர்கள் யாவரும் கால்மாடு
தலைமாடு தலைமாடு கால்மாடு கைவேறு மெய்வேறு தோள் வேறு
தாள்வேறு உடல் வேறாகச் சிதைந்து மடிந்தார்கள் ஆயுள்காலமு
டிந்தார்கள் நாக வாசற் குழியிற் படிந்தார்கள் இப்படி நிர் மூல
மாக அடித்து இராட்சசர்களைப் பிடித்துத் தரையிலறைந்து அனு

மார் வெற்றியித்திறந்து அமர்ந்து வீரமோடுதிரமாக அப்புறம்போம்போ
து அவன் ஆளப்பட்ட பித்தளைக்கோட்டையானது மகாகுண்டலசிகர
மோடு பகரமாகதோன்றிற்று அதிலே (அாது) இலட்சம் இராட்சசர்
கூட்டங்கள் நிரைநிரையாக இருப்பதைக்கண்டு களிப்புக்கொண்டு நம்
முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் தேவாதீனமிப்படியாகவிருந்ததுஇ
னி துயிலழுத்தோம் இலைபோலேதழைத்தோம் மூலைக்கொருவனுக்இரா
மல ஒன்றாகவிருந்து நன்றாகமுடிந்தது நாம்கொண்டகோட்பாடு தெ
டையவாராது இனியர்வனையுமுறுக்கி இறுக்கி நெருக்கி நொறுக்கிவி
டுவதேயோக்கியம இதுவேசிலாக்கியம் இராமர்கொடுத்த பாக்கியம் நல்
லவாக்கியமாகயெண்ணி மகிழ்ந்து புகழ்ந்து அண்ணூர்ந்து இறுமார்ந்து
புடைத்து ஒலித்து ஆரவாரித்து யுத்தத்துக்குப்பிரயத்தனமானார்.

அப்போதனுமாரானவர் சரீரத்தைபொங்கி விஸ்வரூபம்புரக்கி
அண்டகோளமவனாக்கும் பிரம்மாண்டமாகவளர்ந்து தளர்ந்து நிமிர்ந்
து இருகைகளையுங்குவிதறுத் தவித்துக் கூட்டி ஆபிரயங்காட்டி விரலை
விரித்து அரித்து கபில்குபிலென்றுபறந்து மெய்மறந்து அந்தராட்சச
ளையடித்து வயிறுலேகடித்து ஒருவரோடொருவனைத்தள்ளிச சிங்கம்
போலத்துள்ளி யாவனையுமவிடாமலும் ஆயுதமெடாமலும் தொடாம
லும் காயம்படாமலுமாக போர்புரிகிறபோது அங்கே இரண்டாயிரம்இ
ராட்சசர்கள் மடிந்தார்கள் இவ்வாறாக அனுமாரானவர் அடித்து மடித்
து விட்டுப்போகிறபோது செப்புக்கோட்டையானதுமாட மாளிகைகூ
டகோபுரம் அரண்மனையோடுதோன்றிற்று.

அந்தச் செப்புக்கோட்டையானதைப் பார்க்குமிடத்திலே (உல)
லட்சம் இராட்சசர் ஆவலோடு காவலாளிகள் சேவகஞ்செய்துக்கொ
ண்டு இருப்பதைப் பார்த்துவேர்த்து சீக்கிரமாகச்ச ாக்கிரதையோடு கு
பிலென்றுகுதித்து இராட்சசனொன்றுமதித்து இராமனைத்துதித்து அர
க்கனைமிதித்துக் கொன்று வென்றுநின்று இறுமார்ந்து அப்பாலேபோ
ம்போது வெண்கலக்கோட்டைதோன்றிற்று அதிலேகாவல்(உஅ) இல
ட்சம் இராட்சசரிருப்பதைப்பார்த்துக் கொல்லுவோமென்றுநேர்த்துச்
சீக்கிரமாக அந்தவெண்கலக்கோட்டையின்கதவைமூடிக்கொண்டுதாப்
பாளைப்போட்டு சாப்பாக ஒருவனை வெளியில்விடாமல் எல்லாரையும்
அதமாக அடித்து இடித்து நெறுக்கி இறுக்கி அவரவரெலும்புகளைப்
பொறுக்கிக் கடலிலேபோட்டுவிட்டார் அரக்கரெல்லாம் யமபுரஞ்சேர்
ந்தார்.

அனுமாரானவர் அப்பால் போகிற போது பொன்கோட்டை
தோன்றிற்று அங்ஙனம் (ஙக) லட்சம் இராட்சசர் இருக்கக்கண்டுமகி
ழ்ச்சிகொண்டு களித்து ஆநந்தக்கடலிற் குளித்து அங்கும்படியே

அற்ப்மாகயெண்ணி அதம்பண்ணி அப்பாலேநடக்கிறபோது பவளக்கோட்டைதோன்றிற்று அதிலே(அகூ)லட்சம் இராட்சசரிருப்பதை அறிந்து கையினாலேஎறிந்து அறைகிறபோது அகனை ஒருகோடிக்கம்பமானது நவரத்தினக்கசிதமாக நூறுயோசனைவிஸ்தாரமாக இருக்கஅதைப்பிடுங்கிக்கொண்டு அரக்கர்படையிலே விழுந்து அதம்பண்ணிவிட்டு அப்பால் புறப்பட்டுப்போகிறபோது சரீரமானதுசிறுக ஒருஅணுவளவாக எடுத்துக்கொண்டு கோட்டையின்மேலே துலாயெந்திரங்கட்டியிருப்பதைப்பார்த்து அங்கேயிருக்கிற இராட்சசனைக்கண்டு எண்ணியோசனைபண்ணி உள்ளேபோகிறபோது தங்கக்கோட்டை காவற்காரர் புறப்பட்டுவாரார்கள் பத்துலட்சம் இராட்சசர்கள் மேளம்தாளம் வெடி தடி கொடி தமுறுதப்பட்டை எக்காளம்முதலிய வாத்தியத்தினுடனே பாதாளலோகம் இடுஇடுஎன்ற திருவதைக்கண்டு பயங்கொண்டு அங்ஙனேயோசனைசெய்து என்னசெய்வோம் எங்கேபோயொளிப்போமென்று நாலுபக்கமுமிடம்பார்த்து மிடமில்லாமல் அந்தமுத்துக்கோட்டைக்கு உத்தரபாரிசத்திலே ஒருதோப்பானது சிறிது உத்தியானவனமும் சிறிது விருட்சாதிகளும் சில நந்தவனமுஞ்சோலையுஞ்சாலையுமிருப்பதைப்பார்த்து அந்தத்தோப்பிலே மறைந்திருக்கவேண்டுமென்றுபோய் ஒருமரத்திலே இலைமறைவிலே ஒளித்திருந்தார்.

அப்போது நகரிசோதனைக்குப் புறப்பட்ட இராட்சசர் மேலண்டைக்குப்போய்விட்டார் அனுமார் அந்தமரத்திலே இருந்தபடியாக நாலுதிக்கும்பார்த்து ஒருவருமில்லையென்று மனதிலேமதித்து கீழேயிறங்கி அந்தநந்தவனமிருக்கிற அழகைப்பார்த்து இதுயாருடையவனமோ இத்தனை அழகாகப்பொருந்தியிருக்கிறதென்று நினைத்து மனதில்களித்து நாலுபுறமும் சுத்திவரும்போது அவ்விடத்திலே ஒருமண்டபமானது மயிலிராவணன் பாதநாட்டியம்பார்க்க நடனஞ்செய்கிறமண்டபம் ஒருவராலும்அமையாத அழகோடுகட்டி இருப்பதை அனுமார்பார்த்து வெகுவேடிக்கைவிநோதமோடும் பார்த்துவந்தார் இதுயார்கட்டிவைத்தமண்டபமோ அல்லவென்றுமயிலிராவணன் சிங்காதனமண்டபமோ என்று அதிலேஉட்கார்ந்துக்கொண்டிருந்தார்.

இந்தகதை இப்படியிருக்க கேளும் கௌதமரிஷியே யென்று நாரதரிஷிசொல்லுகினார் அப்பால் அந்தப்புரத்திலே யிருந்த மயிலிராவணன் மாதங்கியுடனே கூடி சரசசல்லாபமாடி மன்மதன்போல நீடி குங்கும கதம்பஞ்சூடி சம்போகபாக்கியங்களை அனுபவித்து நித்திரை செய்துகொண் டிருந்தவன் திடீலென்று எழுந்து கண்விழித்து வெளியிலேவந்து எத்தனைநாழிகை ஆயிற்றென்று நட்சத்திரமவுச்சமானதைப்பார்த்து நாழிகை (உஉ) ஆயிவிட்டது இனி சும்மா

யிருக்கக்கூடாதென்று நினைத்து பாதாளவிலங்கைக்குப் பத்தினியாகிய பத்திரகாளிக்கு ராமலெட்சுமணனை பெலிகொடுக்கவேண்டுமே யென்றினம்பொழுதுவிடிய எட்டுநாழிகையல்லவே இருக்கிறது இதற்குள்ளே சுருக்காகஅபிஷேகத்துக்கு ஜலங்கொண்டுவரச்சொல்லவேண்டுமேயானா அனுப்பிவிப்போமென்று உடனே யோசனைசெய்து தன்னுடைய உடப்பிறந்தாளாகிய தூரதண்டிகையையழைத்து அடி தூரதண்டிகையேஇப்போது நீஎன்னுடைய உத்தியானவனத்துக்குப்போய்தண்ணீர் கொண்டுவாயென்றுச்சொல்லித்தங்கக்குடமெடுத்துக்கொடுத்து சீக்கிரங்கொண்டுவாபோடியென்று கட்டளையிட்டான்.

அந்தத்தூரதண்டியானவள் தானுந்தன்மகனும் (சுதை) வருஷம் விலங்கிலே அடைபட்டிருந்தோமே இப்போதென்னமோநம்மைக் கொல்லநினைத்துதண்ணீர்க்குப்போகச் சொல்லுகிறான் என்றுகருதி மயிலிராவணனைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாடா அப்பா மயிலிராவணா என்னை தண்ணீர்க்குப்போகச்சொல்லி என்னையும்என்மகனையும் விலங்குபோட்டுக் காவலாளிகளைக் காவல்வைத்தாயே இப்போது தண்ணீர் கொண்டுவந்தால் என்னை வெட்டவும என்மகனைவெட்டவும யோசனைசெய்துப்போகச்சொல்லுகிறாப்போலத் தோன்றுகின்றது அப்படிசெய்கிறது உண்மையானால் எங்களிருவரையும் இங்கேதானே வெட்டிப்போடப்பாவென்று வருந்திச்சொல்லுகிறாள் மயிலிராவணன் தூரதண்டிகையைப்பார்த்துச்சொல்லுகிறான் அடி தூரதண்டி அப்படி உங்களிரண்டுபேரையும் வெட்டுகிறதானால் எனக்கென்னபயம் இங்ஙனமே வெட்டமாட்டேனா வேறேஒருகாரியம் இருக்கிறது உங்களைவெட்டவில்லை அஞ்சாதேநீ தண்ணீர்க்குப் போடியென்றுசொல்ல தூரதண்டி சொல்லுகிறாள் அடா அண்ணே இந்த அர்த்தராத்திரியிலே தண்ணீரென்னகாரணத்துக்கென்று வினவ மயிலிராவணன் சொல்லுகிறான் வாடி தூரதண்டியே திசைகண்டராவணனுக்குச் சத்துருவான இராமலெட்சுமணனை நமதுபத்திரகாளிக்குப் பலிகொடுக்கவேணும் வெளியிலே ஒருவரோடுஞ்சொல்லாதேபோடியம்மாசுருக்கிலேதண்ணீர் கொண்டுவாடியம்மாவென்றுசொல்லதூரதண்டிமனதுகசிந்துநசிந்து ஆதெய்வமேதானென்னபாவஞ்செய்தேனோபூர்வத்தில்செய்தவினை இந்தசமயத்தில்இவ்வாறுநானுமென்மகனும்காலிலேவிலங்குமாட்டிக்கொண்டு புருஷனையும்பறிகொடுத்துஇப்படியிருக்கின்றேனே இந்தப்பாவம் அனுபவிப்பதல்லாமல்அந்ததருமபுருஷர்களான இராமலெட்சுமணனைப் பலிக்கொடுக்கும்போதுநாமஜலங்கொண்டு வருவதுதருமமாஐயையோபாவம வந்துவிதித்ததேயென்றுமயிலிராவணனைப்பார்த்துநான் தண்ணீர்க்குப் போகமாட்டேன் அண்ணாவென்றுசொல்லுகிறாள்அப்போதுமயிலிராவணன் கோபத்துடனேபார்த்து அடி தூரதண்டிகையேஇதை ஒருபோடே

சொல்லதேயென்றுநான்சொல்லுயும் நானுன்னைத்தண்ணிர்க்குப்போக
ச்சொன்னல்இராலெட்சுமணனை கூப்பிட்டழைக்கின்று என்னமடான்
று தனதுஉடையிலேயிருந்தகத்தியையுருவிஇதோவுன்னை வெட்டுகிறே
னென்று பயமுறுத்தினன் தூரதண்டிகைங்கி அயர்ந்து வியர்த்துஇதோ
நான்தண்ணிகொண்டுவருகிறேன் என்றுகூறித்தங்ககுடத்தையெடு
த்துக்கொண்டுபுறப்பட்டுப்போனள் அந்தத்தங்க கோட்டையைத்தா
ண்டி துலையெந்திரம்தாண்டிமயிலிராவணனுடைய உத்தியாவனத்துக்கு
வந்துவிட்டாள அந்தசமயத்திலே அனுமார்கண்டு பயங்கொண்டு அவ
ளவமே இருந்து சரேலென்று சரீரத்தை அணுவைப்போலேக்குறுக்கி
அந்தமண்டபத்திலிருந்தோடி ஒருமரத்தின்மேலே யேறிக்கொண்டு இ
லைமறைவிலேமறைந்திருந்தார்.

தூரதண்டிகையானவள் உத்தியானவனத்துக் கதவைதிறந்து உ
ள்ளேபுகுந்துகொண்டு தாப்பாளைபோட்டுவிட்டு உட்கார்ந்துக் கொண்
டு தன்னுடைய் விசனத்தினலே அழுகிறாள் ஆதெய்வமே என்னைப்ப
டைத்தக வுனை நானென்னசெய்வேன் இந்தப்பாதகமென்தலையிலே
விடிந்ததா இராமலட்சுமணனுடைய சீவன்போகமுடிந்ததோ அந்த
மகாபாதகனுக்கு துர்ப்புத்தி மனதிற்படிந்ததோ பார்த்தையா புண்ணி
யபுருஷரானவருக்கு இப்படிவருமோ எந்தஇராசியத்திலேசீவனபோ
கப் பிரமதேவன்எழுதினனே நானும் என்மகனும் இந்தசண்டாளனை
தினைடோளன் காவலிலேவிலங்குதரிக்க தெய்வம்விதித்ததோ இராம
லட்சுமணனுக்கு மிப்படிலபித்ததோ இதுயார் சபித்ததோநமக்கும் அ
வர்களுக்குமஒன்றாகஆச்சுதோஆயனெழுத்தும்போச்சுதோ ஆதெய்வ
மே பரமசிவமாகிய கைதவமேஎன்றுநொந்து துன்பவார்த்தைகளைதத
ந்து வாயில்வந்தபடியுளறி ஆபாதகவிபீஷணனுகிலும் இராம லட்சும
ணனைவந்து எடுத்துக்கொண்டுபோகலாகாதோஇல்லாவிட்டால்யாரோ
அனுமானென்கிற புண்ணியவான் கோட்டைபிடிக்காப்பாற்றினரோ அ
வருக்கு ஆகிலும் வழிதுறைசொல்லி அனுப்பலாகாதோ அடாவிபீஷ
ணா கெடுத்தாயே சத்துருக்கள் கண்ணிற் காட்டிக் கொடுத்தாயே
இராமலெட்சுமணன் அனியாயமாகப்போகிறார்களே என்றுபலவாறாக
அழுகிறாள் மண்ணில்விழுகிறாள் மறுபடியும்யழுகிறாள் சுவாமியைத்
தொழுகிறாள் பூமியை அறைவாள் இளைவாள் இராமனைநினைத்துத்து
ணிவாள் இது என்னவிதியென்பாள் தெய்வமே கதியென்பாள் இவ்
வாறுபலவாறாக மதிப்பதும் துதிப்பதும் அனுமார்க்கண்டு மகிழ்ச்
சிகொண்டுபூரித்து ஆரவாரித்து எண்ணி யோசனைபண்ணி இவளா
ரோ கன்னிகை இராமகாரியம் விஸ்வாசிக்கிறாள் அதிகமாகப் பூசிக்கி
றாள் மகிழுகிறாள் புகழுகிறாள் தெரியவில்லை கிட்டப்போனல் பயங்

தோடிப்போவானோ அறியோம் அல்லது மயிலிராவணன்தானே மா றனேடம்போட்டுக்கொண்டு இப்படிகபடஞ்செய்கிறானோ யாதொன்று ந்தெரியோம் என்றுநினைத்து சனைத்து அந்தமரத்தின்பேரிலிருந்து ஆ காயவாணிசொல்லுவதுபோலே அனுமார் சொல்லுகிறார்.

கேளு! பெண்ணே உன்மகனுக்குஒருவரும் திக்கில்லாமற்போன தென்ன ராமலட்சுமணருக்கும் அப்படிப்போனதென்ன செல்லெ ன்னை தூரதண்டிகைகேட்டு இதேது மனிதர்பேசுகிறகுரலாயிருக்கிறது மயிலிராவணன் ஒருவரோடே சொல்லாதேயென்று போகச்சொன்னா னே நாமின்சேவர்த்தாமே இப்படிஅழுதோமே அந்தமயிலிராவணன் வந்தானோ அல்லது யாரையாகிலுங்கூட்டி அனுப்பினானோ இதேதுபே ச்சுக்குரலாயிருக்கிறது யென்றுபயந்து நயந்து அழுகையைநிறுத்திஎழு ந்திருந்து குளத்திலேதண்ணீர்மெள்ள இறங்கினாள் அதை அனுமார்பா ர்த்து இனிசும்மாயிருக்கலாகாது இவளண்டைக்குப்போய பேசவேண் டுமென்று அந்தக்ஷணமே மரத்தைவிட்டிறங்கி தூரதண்டியி த்தி ல்போக மெதுவாக நடந்துபோய் குளத்தின் படிகட்டின்பேரில் நி ன்றுக்கொண்டு சொல்லுகிறார் வாரும் பெண்ணே மாதுசிரோம ணி இராமலட்சுமணருக்கும் உனக்கும் கதியில்லையென்றாயே அந்த விபீஷணனையும் நந்தித்தாயே அந்த மகானுபாவன் சொல்லியனுப் ப நான் இதோ வந்தேன் இராமலட்சும ணருக்கும் உனக்கும் உன்மகனுக்கும் அனுமந்தனாகியநான் கதியாக்கிகொடுக்கவந்தேன் அ ந்த இராமலட்சுமணரென்ற வழிபடுகடவுளர் எங்கேயிருக்கிறார்கள் அ றிந்தால்தயவுசெய்துசொல்லுயம்மாவென்று அனுமார் கேட்டருளினார் அப்போதுதூரதண்டிஅனுமாரைப்பார்த்து பயந்தெளிந்துசொல்லுகிறா ள்ஐயா அனுமாரே நீர் என்னருகில்வாருமென்று அழைக்க அனுமார் சந் தோஷித்துஅவளருகிற்போய்நிற்க தூரதண்டிசொல்லுகிறாள் அடாவா டா அப்பா அனுமாரே நீ அனுமாரென்று சொல்லுகிறாயேகுரங்குசாதி யல்லவாமனுஷனைப்போல நீபேசுகிறாயேஉன்னையெப்படி நம்புவே ன்என்றுசொல்ல அனுமார்சொல்லுகிறார் வாரும்பெண்ணே தூரதண்டி கையென்னும் ராக்ஷசஸ்திரீயே அப்படியேன்பயப்படுகிறாய் எனக்கு அறுபத்துநாலு பாஷையும் சகலசாஸ்திரமும் நீதிநூலும் சாதாரணமா ய்விளங்கும் எறும்புமுதலிய சிற்றறிவுயிர்களின் பாஷையும் தெரி யும் சந்தேகப்படவேண்டியதில்லை சும்மாசொல்லடியம்மாவென்று கே ழ்க்க தூரதண்டிசொல்லுகிறாள் வாரும் ஆஞ்சனேயா ஸ்ரீராமருடைய சகாயா அரவிந்தமாயா அருண்மிகுந்தயா அகளங்க உபாயா அஞ்சனுடை யநேயா அருணனாகிய வாயுவின்சேயா நான் சொல்லுவதைக்கேளும் பி ள்ளாய் புஜபலபராக்கிரமம் பண்ணுகிறபோது ஒருகையினாலே இராட் சதக்கூட்டங்களை யடித்தால் பதினெட்டு டக்கு ரோஹிணி தண்டு தனம

மாண்டுவிட்டதென்றார்களே அப்படிப்பட்ட புஜபலபராக்கிரமசாலியா ஐய நீ இப்படி குழந்தைபிள்ளைபோலிருந்தால் எனக்குச்சம்மதிப்படாது ஆனபடியினாலே உன்னுடைய விஸ்வரூபத்தை எனக்குக்காண்பிக்கவேணும் அதன்பின்பு நான்சகலமர்மங்களையுஞ் சொல்லுகிறேனென்றுசொல்ல அனுமார் தூரதண்டியைப்பார்த்து தாயே நீ அந்தசொரூபத்தைப்பார்த்தால் பயப்படுவாயேயென்றுசொல்ல அதற்குத் தூரதண்டிசொல்லுகிறாள்.

கேளும்ஆஞ்சனேயரேநீர் எவ்விதசொரூபமெடுத்துக்காட்டினாலும்பயப்படமாட்டேன் மயில்ராவணனுடையமாய்கைகளைக்கண்டு பயந்தெளிந்தவளான் முன்நீர்எவ்விதரூபமெடுத்தாலும்பயந்தோற்றமோ அரிததில்லை உம்முடையவிஸ்வரூபத்தையெடுத்துக காட்டுமையாவென்று தூரதண்டிசொல்ல அனுமார்பாரும்பெண்ணேயென்றுசொல்லி மேகமண்டலம வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம்அளாவும்படியாக வளர்ந்தார் தூரதண்டிபார்த்துபயந்து வியந்துநடுங்கிஎழுந்திருக்கிடுகிடுத்துஆஞ்சனேயனைப்பார்த்துச்சொல்லுகிறாள் அனுமாரே உம்முடையசொரூபத்தைப்பார்க்கத்தக்கவளல்லபோதுமையாவென்று ஆடிப்பாடி அவரைநாடிஅவர்பாதந்தேடிவிழுந்துஎழுந்து அணிந்தணிந்து அனுமாரென்றுதுணிந்துவிசாரந்தணிந்துசிரமேற்கரங்குவித்துதீர்க்கதண்டன்சமர்ப்பித்தாள் உடனே அனுமார் அந்தசொரூபத்தைவிட்டுயெப்போதும்போலேசுருங்கிதூரதண்டிகைபண்டையில்நெருங்கிவந்து மிகவும்பயப்படாதேயென்று தைரியஞ்சொல்லிபெண்ணே உன்காலிலே விலங்கேதுயென்னகாரணத்தினாலே உனக்கு விலங்குபோட்டார்கள் எங்கேதிருடினாய் அல்லதுயென்ன அடாத காரியஞ்செய்தாய் நீ என்ன அமங்கலிபோஉன்னைப்பார்த்தால்சகலர்பாணலக்ஷணமுலங்கிர்தையாயிருக்கிறாய் கழுத்திலேமங்கிலியத்தைக்காணேம் உன்புருஷன் இறக்கிறானோ இல்லையோஇராயலட்சுமணாள் உயிரோடுசும்மாயிருக்கிறார்களோ இல்லையோ உனக்கு இந்தவிலங்குவந்தகாரணார்த்தமென்ன சொல்லுமம்மாவென்றுகேட்டார்

இந்தவார்த்தையைக்கேட்ட தூரதண்டிகை அனுமாரைப் பார்த்து அன்போடு இனபோகம் ஆசித்துப் பூசித்து நேசித்து யோசித்து சொல்லுகிறாள் கேளுமையா அனுமாரே இந்த மயில் ராவணன்மகாபாவியான துஷ்டனவன் வெகு சண்டாளனான யென்னையும் யென்மகனையும விலங்கிலே போட்டான் நாங்கள் திருடவில்லை அவனில்லை துன்பஞ்செய்துக் கொள்ளவில்லை அவன்வார்த்தையைத் தள்ளவில்லை அந்தப்பாதகன் ஆங்காரத்தினாலேயென்புருஷனையுங்கொன்றுவிட்டுயென்பெண்ணையும் என்மகனையும் அநியாயமாக நாலாயிர வருஷகாலமாய்

(௩-ா) பாரம் எழுகினாலே மிகுதியோடு தருகியாகக் கையிலும் பெய்

யிலும் தோளிலும் காலிலும் விலங்குபூட்டிவிட்டானென்றுகூற அவ்வசனத்தைக்கேட்ட அனுமார்கல்லது பெண்ணே அந்தச்சண்டாளனிட்ட விலங்கெங்கேயென்றுவினவி ஆக்கரித்துப்பற்கடித்து மீசைதுடித்துக்கரத்தை மண்ணின்மீது அடித்து காலையுங்கையையும் பிடித்துவிலங்குகளைஒடித்துவிட்டார் தூரதண்டிகண்டு மனமகிழ்ச்சிகொண்டு சயங்துவியந்து அனுமானென்றுபயந்து அடர்ந்து கைகட்டிவாய்பொத்தி தூரதண்டி புன்னகையோடிருக்க அனுமார்பார்த்து வாராய்தூரதண்டிகையே உனக்கு இந்தவிலங்கு போட்டகாரணமென்ன உன் புருஷனுடையபுண்ணியவான்பெயரென்ன உன்மகன் விலங்கிலேகிடக்கிறானென்றழுதையே அந்தக்காரணமென்ன எல்லாச் சங்கதிகளையும் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று அனுமார்கூறினார்.

அந்தவசனத்தைக்கேட்ட தூரதண்டிசொல்லுகிறாள்கேளும்அனுமாரே என்பெயர் தூரதண்டி என்புருஷன்பெயர் காலதெத்தன் என் குமாரன்பெயர் நீலமேகன்கேட்டீரோ அனுமபூபா என்புருஷனைக் கொல்லவந்தகாரணம் மயிலிராவணன் எனக்கு அண்ணன் அவனிந்தப்பாதாளவிலங்கையை அரசாட்சிசெய்துக்கொண்டிருந்தவன் என்புருஷனையுந் தன்னோடேகூடவைத்துக்கொண்டு சகலகாருபாருவிசாரணைகளையும் விசாரித்துவரச்சொல்லி உத்தியோகக்கட்டளைதிட்டமாக இட்டிருந்தான் நானும் என்புருஷனும்சுகமாகச்சிறிதுகாலம் வாழ்ந்திருக்கும்போது எனக்குக்கர்ப்பந்தரித்துஒருபிள்ளையைப்பெற்றேன் அந்தப்பிள்ளைக்கு என்புருஷன் நீலமேகனென்றுபெயரிட்டார் அதன்பின்புமயிலிராவணன் மனைவிமாதங்கியென்பவளுடையவயிற்றிலே ஒருபெண்பிறந்தது அந்தப்பெண்ணுக்குரூபவதியென்று பெயரிட்டுநாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர்த்துவந்தான்

அப்படிவளர்த்துவந்த சிறிதுகாலத்திற்குப்பின் என்புருஷனானவன்மகனை எடுத்து முத்தங்கொடுத்து மடியிலேவைத்துக்கொண்டு கொலுக்கூடமண்டபத்திலேஇருந்தார் அப்போது மயிலிராவணனும்தன்னுடையகுமாரத்தியாகிய அதிரூபவதிக்குச்சகலஆபரணமுந்தரித்துதனது மடியின்மீது வைத்துக்கொண்டிருந்தான் இப்படியாக ஏகசிங்காதனத்தின்மீதிலே யிருக்கும்போது மயிலிராவணனானவன் என்புருஷனைப்பார்த்து வாரும்பிள்ளாய்காலதெத்தா உன்மகனுக்குஇந்த ரூபவதியென்கிற என்பெண்ணைக்கொடுத்துக்கலியாணம் பண்ணுவிக்கிறேனென்றுசொன்னான் அந்தக்ஷணமேஇடியிடித்ததுபோலஆகாயவாணிசொன்னது அடாவடா மயிலிராவணா இந்தரூபவதியையாருக்குக் கொடுத்து விவாகஞ்செய்துவைக்கிறாயோ அந்தப்புருஷன்பெயர்நீலமேகனாகும் அவனுக்கே இந்தப்பாதாளலங்கையும்முடிபொறுக்கும்முடிபொறுக்கும்முடிபொ

றுக்கும்என்றுமூக்காலும்சொல்லஅப்போது சபையிலிருந்தவர்களெல்லாம் ஆகியவந்தமோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள் உடனேமயிலிராவணன் திடீலென்றுதனது சிங்காதனத்தைவிட்டுக் கிழேகுதித்துகோபமதித்துஅந்தச்சபையைமதித்துத் துதித்துச்சொல்லுகிறான் கேளுங்கள்சபையோர்களே யான்விளையாட்டுக்குச்சொன்னதை நீலமேகனுக்குஸ்தாபிதமாக அந்தஆகாயவாணிவாகுமஉறுதிசெய்யலாமா நீலமேகனுக்குஎன்குமாரத்தியானரூபவதியைக்கொடுக்கிறேனென்று சுமமாசொன்னேனேயொழிய நிசமாகச்சொல்லவில்லையே எனக்குச்சரியான பலசாலியானவன்எவனோ அவனுக்கல்லவோகொடுப்பேன் இந்தசொற்பமுள்ள அற்பனானநீலமேகனுக்கு எனதுவிற்பனமுள்ள கற்புள்ளமங்கையைக்கொடுப்பேனோஇவ்வசனம்அடாதுஇனிவிட்டுவிடாமல்காலதெத்தனையும்அவன்பெண்சாதியையும்பிள்ளையையும்சொல்லாமல்விட்டுவிட்டால்பின்னுநமக்குக்கேடுவருமெனறெண்ணிஇதோ இந்தக்கத்தியினாலேவெட்டுகிறேனென்றுஎன்புருஷனைப்பிடித்துக்கொண்டான்அப்போதென்மகன் ஓட்டமாகஓடிவந்துஇப்படி செய்யாதேயென்று என்னோடுசொன்னான் அப்போது நான்என்மகனுகியநீலமேகனைவீட்டிலேபோட்டுக்கதவைமூடி ஒளித்துவைத்துவிட்டுப்புருஷனை அழைத்துவரமீண்டும்திரும்பிச்சென்றேன் அதற்குமுன்னமேகாலதத்தனுனஎன்புருஷனை வெட்டிப்போட்டு எனக்கெதிராக அந்தக்கத்தியையும்பிடித்துக்கொண்டுஓடிவந்து அடி தாரதண்டி உன்மகன் ஓடிவந்தானே அவனெங்கேயென்றுயென்தலைமயிரைச்சுருட்டி கீழேதள்ளி அவன்கையினாலேஓங்கிக்குத்தும்வேளையிலே நான் அப்பா உனக்கோ ஒப்பா அண்ணா எண்ணிரு கண்ணுடைய இருபதுகையாஆண்டவனே முடிகள்பூண்டவனே என்னையேனவெட்டுகிறுயென்று இரக்கமோடுவேண்டினேன் அவன்மனமிரங்கிபெருவிலங்காகிய ஒருவிலங்குள்காலில்பூட்டிவிட்டான(ஐது)பாரமுள்ள இந்தகுவினலேபண்ணினவிலங்குடனே என்மகனைநீலமேகன்காவதகூடத்திலேயிருக்கிறனென்று அடிவாள்முறைவாலனுக்கஆதியந்தமாகக்கூறிப்பின்னும்அனுமானேநீயன்பர்க்குதேவனுகவந்து(சது)வருஷகாலமாகத் தரித்திருந்தஇந்தப் பெருவிலங்கைமுறித்துஅகற்றித்துவிட்டீரோ வானரசேனுதிபதியே வழிபடுதெய்வக்கதியே மாயன்புகழுதியே மன்னர்மதிகருந்துதியே ஆஞ்சனேயா ஆயன்சகாயா அருமருந்துாயா அடியார்களுக்குநேயா அனுமந்தாவென் முன்வந்தாய் ஐயனே மெய்யனே தீரனே வீரனே சீலா அன்பருக்கனுகூலா சரணம் சரணமென்னையாண்டருளத் தருணம் தருணமென்றுபற்பலவாறுபுகழ்ந்துபுத்திமகிழ்ந்து அஞ்சலிசெய்துஇருகைகளையு நீட்டி திருமுகம் காட்டிஅபயாஸ்தந்தாவென்றுகேட்டாள்

அனுமார் சந்தோஷித்துத் தூரதண்டியைப்பார்த்து அவள்கையை
ப்பிடித்து உளவங்கையிலடித்து நன்மதியெடுத்து அபயங்கொடுத்துச்
சொல்லுகிறார் வாரும்பெண்மணே உனது சேதியெல்லாங்கேட்டுத் திரு
மனங்களித்தேன் ஆனந்தகடலிற்குளித்தேன் எனதுபராக்கிரமந்தெரி
யப்போகிறாய நாளை அந்தமயிலிராவணனை அதம்பண்ணிப்போடுகி
றேன் உன்குமாரனான நீலமேகனுக்கு அவனதுபாதாள விலங்கையாகி
ய இந்நகரத்துக்கு ஒருபெரியதுரையாகப் பட்டங்கட்டி அந்த ரூபவதி
யென்னுமாதை அவனுக்குமணஞ்செய்வித்துப்போலவுமன்றி நாடு நகர
முதலியவற்றைச் சீர்திருத்தி அரக்கர்படைகளை நீக்கிவிட்டுப்போவே
ன் அஞ்சாதேயென்றுபற்பலதைரியஞ்சொல்லினார் அனுமார்மற்றுஞ்சொ
ல்லுகிறார்கேளும்மாதே தூரதண்டி நமது வழிபடுதெய்வமான இராம
லட்சுமணரெங்கே யிருக்கிறார்கள்மயிலிராவணன் எங்கேயிருக்கிறான்
என்னசெய்கிறான் அவன்புஜபலசவுரியமென்ன பராக்கிரமவீரதீரமெ
ன்னவெல்லாமறிவாயேசொல்லவேண்டுமென்று வினவினார்வாரும்அனு
மாரே யென்னசொல்லப்போகிறேன் நிஷ்கள நிரஞ்சனநிர்மலநிர்விஷய
சுத்தசைதன்யவாகியும் பார்வதிசமேதனாகியும் அகிலபுவனரட்சக
னாகியும் ஆதியந்தமில்லாததாகியும் விளங்கியிருக்கப்பட்ட சாக்ஷாத்பக
வனாகியபரமேசுவரன் இடத்திலே மூவேழுதலைமுறைக்கும் அழியாதவ
ரம்பெற்றவன் மாயாவித்தைகள்கற்றவன் இராட்சசரீற்கொற்றவன் பு
ண்ணியமற்றவன் அவனை தேவராலும்மூவராலும்யாவராலும் சயிக்கப்
படாது இந்தமண்ணுலகத்திலும்விண்ணுலகத்திலும் ஒருவருமில்லை அ
வனைப்போலொத்தபராக்கிரமசாலிகள்யாருமில்லை நீர்சாக்கிரதையாகச்
சண்டை பண்ணி செயிக்கவேண்டுமென்று தூரதண்டிசொல்லினாள் அ
னுமார்சொல்லுகிறார் நல்லது அவன்சமர்த்தனாய் சொன்னாயல்லவோ ந
ல்லதாகட்டும் அவனைநானொருவனுமே ஏகாங்கிதவீரதீரகண்டனாகயுத்
தத்தில் மடித்துவிடுகிறேன் என்பலத்தை அறியப்போகிறாய் ஏதோ இ
தோ இருக்கிற தங்கக்கோட்டைவாசலிலே துலாயந்திர மொன்றிருக்கி
றதாம் அதிலேசிறிதுஇராட்சசரிருக்கிறாராம் அதென்னவயணமென்ன
வுச்சிதமவ்விதபலவான்; இருக்கிறான்விளாவிலேசொல்லென்ன தூர
தண்டிசொல்லுகிறாள்கேளும்வானரசிகாமணியே அதோபாரும் அந்தத்
தங்கக்கோட்டைவாசலிற்றுலாயந்திரங்கட்டியிருக்குது அதிலே மயிலிரா
வணனுக்குச்சத்துருவர் யாவர்வருவாரோ அவர் தலையைக்கண்டிப்பது
ம்துண்டிப்பதுமாகசிறைகோவிலிருப்பார்கள் அச்சிறைகோவில்மூன்
றுதாஞ்சாயுமாயின்இவன்சத்துருஇவன்மித்துருஇவன் இஷ்டன்இவ
ன் துஷ்டன் இவன்நேசன் இவன்விசுவாசன்என்று அறிந்துகொள்ளுவா
ர்கள் அவர்கள்சத்துருவென்றுகண்டுகொண்டாலதனைக்காவலாக விடு

க்கும்(உம்)"லட்சம்இராட்சசர்வந்துமூளைந்தயுத்தவாயுதம்புனைந்துசண்டைக்குநினைந்துகோபக்கனல்கனைந்து சினைந்துகதித்துக் கொதித்துக்கொதித்துமதித்துதுதித்துபிடித்துஅடித்துகசக்கிநசுக்கி சிதைத்துவதைத்துப்பதைத்து மண்ணிற்புதைத்துவிடுவார்களென்றுகூறினான்

பின்னும் அனுமாரானவர்சொல்லுகிறார்வாரும்பெண்ணேஇக்கோட்டைவாசலிலுள்ள அவரவரையானேதப்பாதுகொல்லுவேன் வெல்லுவேன் நீஎனக்கோருபகாரம் செய்யவேண்டுமென்னத் தூரதண்டி அனுமாருக்குச் சொல்லுகின்றனள் வீராதிரபராக்கிரம விற்பனசொற்பனமுள்ள அனுமானேஎன்னவாகுங்காரணார்த்தம்யாவை அவைகளைச்சொல்லுமையா அடியேன் சிரமேற்கொண்டுநடக்கப்பிரியமுற்றிருக்கிறேன் என்றுமயில்போலுஞ்சாயலும் அயில்போலுவிழியும் குயில்போலுமொழியும் அன்னத்தின்ஒயில்போலுநடையுமுடைய பெண்பாலாகிய தூரதண்டியென்று கூறத்தக்கமாது சிரோமணியே கேளுமாதர்க்கரசியேஅந்தத்தங்கக்கோட்டைவாசலுக் கப்பாலேஎன்னைக்கொண்டுபோய்விட்டால் நான் அத்தனைபேரையும் ஆலைபிலாடுங்கரும்பு எவ்வண்ணஞ் சிதையுமோ அவ்வண்ணம் போல யாவரையுநறித்துத்தகர்த்தடிகளஞ்செய்துவிடுவேன்யமபுரஞ்செலுத்திவிடுவேன் இந்தவுபகாரஞ்செய்தால்போதுமானதென்ன தூரதண்டிகேட்டு நடுக்கிலுடுக்கி ஆஞ்சநேயரோடுசொல்லுகிறாள் ஐயனே வானரத்தய்யனேயான் எவ்வாறுபோவேன்விலங்குமுறிபட்டுக் தறிபட்டும்போச்சேஇனிஎவ்வாறுசெல்லநியாயமென்னவுபாயம் நீர்செய்கதுசகாயம்-அங்ஙனம்போனால் அபாயம்வருமே என்னசெய்கிறதுஇதுவுமன்றி உம்மைஅவ்விடம் அழைத்துப்போனால்தராசுரனாகியநிறைகோல்சரியுமேஉடனே காரியம்கெட்டுப்போய்விடுமே சரிக்கட்டிப்போடுவாரோ இராமமூர்த்திதேவரோஇதற்கென்னசெய்கிறது யென்னாலாகாதென்றுவருத்தமடைந்துமனதுமிடைந்து சொல்லினள்,

அனுமார்நோக்கினைதத்திடமாக்கிக்கவலையென்பதைநீக்கி கலங்கமென்பதைப்போக்கியாதொருவிசேடஞ்சொற்றனர்சமீபத்திலுற்றனர்கேளும்பெண்ணேகூறியவாறேஅந்தத்தராசாகியநிறைகோல் சாயுமாகிலும்உன்னை எவனொருவன்கண்ணோக்கிப்பார்ப்பானாகில்உடனே கண்டிக்கவுந்தண்டிக்கவும்காத்துவருகிறேன்பயப்படாதேஇந்தவுபகாரம்பண்ணவேண்டுமென்றுஉறுதிகூற அம்மாசொல்லுகிறாள் ஆனாலுமெப்படிகொண்டுபோவேன் இவ்வளவுகாய்ப்பிரமாணரூபமோடிருக்கிறீரென்றுசொல்லஅனுமார்சொல்லுகிறார்வாரும்பெண்ணேஎன்றுடையவிசித்திரத்தைப்பாருமென்றுகூறிசந்தோஷமீறிச்சரீரத்தைஒருவிகாஸ்கைகீ

திரி இராட்சசனைக்கொல்லக்கருதி க்ஷணமாத்திரத்தில் சிறுதோவுரு வமைந்து தூரதண்டியைப்பார்த்து தண்ணீர்க்குடத்தையெடுத்து தலைமீ துவைத்துக்கொள்ளச்சொல்லி அந்தத்தண்ணீர்க்குடத்தின் மீதிலேமா னகொத்தையெடுத்து உள்ளேபுகைவைத்து அந்நீர்க்குடத்துட்பேட்டமா லைக்கொத்திலே சூட்சமாய்மறைந்திருந்தார் தூரதண்டி மகிழ்ந்து பாழ் ந்து அனுமாரிருக்கிற மாவிலைக்கொத்தினைப் பிடுங்கிக் குடத்தின்மீது வைத்து மெல்ல மெல்ல நடந்துசெல்ல தங்கக்கோட்டைவாசலிலே இ ருக்கிற இராட்சசனைப்பார்த்து எவ்வாறுபோவோம் என்ன அனர்த்த மாகும் என்று ஏங்கி வீங்கி வாடி கிலேசி ஒதுங்கி நடந்து தங்கக்கோ ட்டைகடந்து துலாயந்திரமான தராசு என்கிற நிறைகோலுக்கப்பா லேபோனாள் உடனே அந்த தராசுக்கோலானது தலைகீழ் தலைமேலா யிருக்க நெருக்க நெருக்கவிழுந்தன உடனே இராட்சசர் திடுக்கெ ன்று பயந்து நயந்து வியந்து அயர்ந்து அண்ணாந்து இறுமாந்து பார்க் குமளவில் சத்துருவைக்கண்டதில்லை தூரதண்டியைக் கண்டார்கள் கோபங் கொண்டார்கள் யானையோ ஒருவனை அழைத்து வருகின ள்போகிறதென்றது என்றுஐயுற்று அங்கேயிருந்த (அலிது) இலட்சம இராட்சசருக்கும் அதிகாரியானதலைவன் ரத்தாக்ஷன் என்பவனோடு முறையிட்டார்கள் ரத்தாக்ஷன் அதிசீக்கிரமாக வலதுபாரிசத்திலிரு ந்த கத்தியை உருவி கருவி தூரதண்டிக்குமுன்னே சென்று நின்று அடிவாடி தூரதண்டியென்னுந்திருடி எங்கேபோகிறாய் யாரை அழை த்துவந்தாய் சோதனைக்கொடு இதோ உன்னை வெட்டுகிறேன் குத்து கிறேன் கழுவேற்றுகிறேன் கள்ளமில்லாமல் உள்ளபடிசொல்லடி இங்கேநில்லடி என்று சொல்ல கிடுகிடென்று பயந்து அயர்ந்து நிற் கலுற்றாள்.

அனுமார் அச்சமயத்திலே மாவிலைக்கொத்தி லிருந்தவண்ணமா க ஒளித்தவர் மனதுகளித்து சிரசைநெளித்து நிடலென்று கோடை பிடி யிடித்ததுபோல் குமிறிதிமிறி ஆகாயம் பூமி பாதாளம்வரையில் ஏகசொரூபமான விசுவரூபமெடுத்து கீழ்குதித்து இராட்சசனொன் றுமறித்து கொதித்து கோபங்கதித்து அந்த இராட்சசன் உருவினகத் தியைப்பிடுங்கிக்கொண்டு அரக்கரோடு எதிர்த்து சண்டை செய்கிற போது அரக்கர்கள்கண்டு அவரவர்வில்லைவளைத்து நாணையிட்டு தூணி- தொடை - ஆவம்-தூட்டு - சிஞ்சினி -நாப்பு - நாரி-வடம் ஞாணுமுதலிய நாணேற்றி சாசம்-வாளி-கணை-பல்லம்-வண்டு-கதிரம்- கங்கடத்திரம்-அ த்திரம்-கோல் என்று பேர்பெற்ற அம்புகளையும்-விசிகப்-தூதை- பத்தி ரி-ஏவு-புங்கம்-தோணி-சாழி-தொடை-சிலீமுகம் என்று நாமங்களைப் பெற்ற பாணங்களையும் சரலேக சரலேக உரலேகமாக வில்லிற்புகவை த்து குணத்தொனிபண்ணி ஆகாயம் பூமி அண்டகடாகம் எண்டிசை யும் வெடிக்கும்படியாககார்மழைப்போலப் பொழிந்தார்கள் அனுமார்

அதுகளைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு இடதுகைக் கேடயத்தினாலே வில
க்கி வலதுகைக் கேடயத்தினாலே ஓங்கி பளீல்பளீல் என்று அடிக்கிற
போது அடிபாவனது கோடைகாலத்திலே இடிஇடித்ததுபோல தடல்
தடல்என்று கெம்பகைகலங்கும்படி இடித்துப் அடித்துப் புடைத்து வா
லைத்துடைத்துத் தலைமாடு கால்மாடு கால்மாடு தலைமாடாகவெட்டியுச
கைகளைத்தட்டி பிணமலைபோலக்குவித்து தாகம் தாகம் என்று சிலர்த
விக்க அனுமாராணவர் சற்றுமிளையாது சளையாது யானைக்கூட்டத்தி
லே போய்விழுந்த வீரசிங்கம்போல ஒருமணிநேரம் முன்னும் பின்னு
ம் பாரமல் சாடுகிறபோது சிலர் ஏங்கினார்கள் பலர் தூங்கினார்கள் சிலர்
ஆத்துமத்தைவிட்டு நீங்கினார்கள் - சிலர் வேலாயுதத்தைத் தாங்கினார்
கள் சிலர் பரமண்டலத்தில் ஓங்கினார்கள் சிலர் ஆயுதங்களைக் கையில்
வாங்கினார்கள் சிலர் மூர்ச்சைபட்டுத் தேங்கினார்கள் சிலர் இறந்தார்கள்
சிலர் மெய்மறந்தார்கள் அவரவர் மனதுதியங்கி- மயங்கிக்கதறுவார்கள்
சிலர் பதறுவார்கள் குதத்துயிராக வுகுறுவார்கள் சிலர் சிற்றுயிரோடு சித
றுவார்கள இப்படி நானாவிதமாக அனுமார் நிர்த்தூளிசெய்துவிட்டார்.

அந்த அரக்கர்படையிலே பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மன்
னர் மண்டலீகர் யானைத்தலைவர் - சேனைததலைவர் - குதிரைத்தலைவர் ஒ
ட்டகத்தலைவர் - படைத்தலைவர் - யூகத்தலைவர்- தண்டத்தலைவர்-முதனி
ய இராட்சசர் படைகளெல்லாம்-ஈட்டி-பாங்கு-சாகை-பாலா-எறியம்பு
பொறியம்பு-தறியம்பு-செறியம்பு-வில்லுகள்-சக்கு- சகரை - கதாகட்க-
கோதண்டம-பிண்டி-பாலம்-கொடுமரம-தொடுமரம்-படுமரம- விடுமரம்
வடுமரம்-மழும்படை-கொழுப்படை-எழுப்படை-வேலாயுதம்- சூலாயு
தம்-அஸ்திரம-சஸ்திரம்-வச்சிராயுதம்-குந்தம்-தொந்தம்-தந்தம்-கூன்வா
ள்-மீன்வாள்-உடைவாள்-கடைவாள்-ஈர்வாள் கூர்வாள்-குறுந்தடி-பெரு
ந்தடி-இவ்வாறுநானாவித ஆயுதங்களையெடுத்து முழங்கடுத்து இராட்சச
ரெல்லாம் பற்களை நறநறவென்றுகடித்து மீசைதுடித்து அனுமாரோடு
கைக்கலக்கிறகாலத்தில் அந்த ஆஞ்சனேயப்பெருமான் சீக்கிரமாக
சாகசிரமதையோடு ஆக்கிரமித்து பராக்கிரமங்காட்டி வியாக்கிரமம்போ
லச்சீறி கோபமீறி அவனை இவனடிக்க இவனை அவனடிக்க அவன்மா
ர்பில் இவன்குத்த இவன்மார்பில் அவன்குத்த அவன்தோளில் இவன்
குத்த இவன்தோளில் அவன்குத்த வலம் இடமாக இடம் வலமாககிறு
கிறு கிறு கிறு கிறு கிறு வென்று நின்று சென்று சுழன்று அழன்று உ
ழன்று தழன்று விழுன்று குழன்று சுழன்று ஒருவருக்கொருவர் சரிச
மானமாக சண்டைசெய்து வந்தார்கள்.

இப்படி அவர்கள் சண்டைசெய்கிறதை ஆகாயத்திலுள்ள தேவர்
கள் யாவரும்பார்த்து ஆச்சரியப்பட்டு ஆதிகாலத்திலே சாக்ஷாத் பி

ஈமசைதன்னியாராயும் தந்தைக்குபதேசம் வந்தித்த குருவாயும் இருக்கப்பட்ட கந்தன் கடம்பன் காங்கேயன் வேலுடைக்கடவுள் தேவாசேனாபதி மயிலேறுசேவகன் கோழிக்கொடியோன் சரவணன் சேகதன் குறிஞ்சிவேந்தன் வள்ளிகாந்தன் என்றுசொல்லத்தக்க சிவசுப்பிரமணியக்கடவுளாகி எதிர்த்த சூரபத்மாவும் அவனுடைய புத்திரமித்திர களத்திர சதந்திராதி தானை யானை சேனை எவ்வாறு அழிந்தவோ அவ்வாறு சிவசுப்பிரமணியக்கடவுள்போல இந்த அனுமாரானவர் ஒருவராகவேயிருந்து அந்தத்தங்கக்கோட்டை வாசலிற் காவலாயிருந்த மயில்ராவணனுடைய இராட்சசப்படைகளைப் பெருவிருட்சத்தினாலே அச்சவேர் நச்சவேர் சிறுவேர்பெருவேர் பக்கவேர் பழுவேர் ஜல்லிவேர்மூலவேர் அடிவேர் முடிவேர் தனிவேர் துனிவேர் இப்படி சொல்லத்தக்க வேர்களைக்களைந்து மரத்தை வெட்டித்தள்ளுவதுபோல அரக்கர்படைகளைத்தலைகாட்டவொட்டாமல் முறித்து தலைகளைத்தறித்து இமைப்பொழுதிலே படுசூரணம்பண்ணினார் அகன்றி ஒருகற்பனை சொல்லுகிறேன் அதாவது வானத்தில் மாலைப்பொழுதில் செவ்வானம் இருக்கிறது அதை ஆகாயவாணி பூமிதேவியைநோக்கி அடிமண்ணுக்கரசியே என்னைப்பார்நான் சிவப்புப்புடவை கட்டிக்கொண்டேனென்று சிலகாலைக்கு முன்னே சொல்லியிருந்தாள் அவ்வார்த்தையை வெகுநாளாய் மனதில் வைத்திருந்த இந்தப் பூமிதேவியும் இன்றுயுத்தகளத்திலே ரத்தவெள்ளம் ஓடினதை பூமாதேவியைக்கண்டு ஆகாயவாணியைநோக்கிச் சொல்லுகிறாள் அடிவிண்ணுக்கரசியே நீ சிவப்புப்புடவையை கட்டிக்கொண்டதுபோல நானுங்கட்டிக்கொண்டேன் பாரடிபாரடி என்று சொல்லுமாப்போலே அனுமார் போர்செய்தனர் இதுபுராணிகர்கூற்று அதாவது இக்கதையெழுதினவர்கருத்தாம்.

அனுமார்சொல்லுகிறார் கேளும் பெண்ணே தூரதண்டிகையே இப்போது நடந்த யுத்தகளரியைப் பார்த்தனையா எமது பராக்கிரமம் வீரதீரசூரத்துவத்தை யென்றுசொல்ல தூரதண்டிசந்தோஷித்து அனுமாருக்கு வலம்இடமாக இடம்வலமாகவந்து வணக்கந்தந்து மனதன்புகூர்ந்து ஆர்ந்துசொல்லுகிறாள் ஓ-ஓ-ஓ- அனுமாரே நீர்வல்லவர் யாவருக்குநல்லவர் உம்மைப்போல் பராக்கிரமசாலி உலகத்திலில்லை யென்று துதித்தாள் நெஞ்சில்மதித்தாள் நீர்க்குமிழிபோலக்குதித்தாள் இவரே அதிவீரரென்று கட்டளைவிதித்தாள் எரிகிற வெண்ணெய்யில் விழுந்த அதிரசம்போலக்கொதித்தாள் மதித்தாள் புகழ்ந்தாள் மயில்ராவணனை அவன்கெட்டான் போவென்று இகழ்ந்தாள் அச்சமயநோக்கி ஆஞ்சநேயர் சொல்லுகின்றனர் மாதர்க்கரசியே கடசராஜன் வீடெங்கே கேடிங்கேவந்தது என்றுகூற ஐயா அனுமந்தரய்யா சிரஞ்சீவிமெய்யா சொல்லுகிறேன் இதோயிருக்கின்றதே அதுகடகன்வீடு அதற்கப்பால்

விட்சிமுகன்வீடு அதற்க்கப்புறம் பத்திரகாளிபம்மன் வீடாகியகோயில் அதைப்போலழகுடையது ஈரேழுலகத்திலும இல்லையென்று சொல்லினான் அதை அனுமார்கேட்டு அப்படியாயென்று சொல்லிப்போட்டு கடகன்வாசலிலேசென்று அங்குநின்று கொல்லுவோமென்று தனது அழகியவாலை உள்ளே நுழைய பஞ்சுபோற் குழைய விட்டனர்.

அக்கணம் கடகனும் அவன்பெண்சாதியும் மன்மதனும் இரதியும்போல பஞ்சணைமீது சரசசல்லாப வுலாச விலாச குலாச அயனிசெய்து நித்திரைசெய்துகொண் டிருக்கிற சமயத்தில் அனுமாரானவர் வாலால் இருவரையும் மடவிறுககட்டிச் சுருட்டி உருட்டிப் புரட்டித் திரட்டித தெருவிலிழுக்க கடகன்கண்டு பயங்கொண்டு சிரமேற்கரக்குவித்து ஆண்டவனே நான் முன்னமேவந்து உமது அழகியவாலுக்குனது பற்களைப்பலிகொடுத்து புறமுதுகாட்டி ஓடிவந்துவிட்ட என்னை வளையா இழுக்குறீர் உமது வார்த்தைக்கு வரவில்லை அதோ அந்த மகாபாவியாயும எங்களரசனுகவு மிருக்கிற மயிலிராவணனைக்கொல்லுமையா சரணம்சரணம் தற்காத்துவிட்டுவிடுமென்று வணங்கி இணங்கிச் சொல்ல அனுமார்மனதிரங்கி புருஷனையும் பெண்சாதியையும விட்டுவிட்டார் அதன்பின்பு விட்சிமுகன்வீட்டிலும் அவ்வாறு தமது வாலைப்புகவிட்டு அந்த அசுரனையும மடவிறுகசசுருட்டிக்கட்டி இழுத்து கர கர கர கர வென்று சுழற்றி சிலத்திலேமோதி அடித்துவிட்டார் அவன் யமபுரம் போய்ச்சேர்ந்தான்.

அப்பால் மந்திரிபிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் அணித்தலைவர் முதலியபேர்களையும் அவ்வண்ணமே தமதுவாலை ஒழுங்காகப்புகுப்படிசெய்து அந்தப்பத்துவீட்டையும் இடிவிழுந்த மாதனைப்போல அக்கமபண்ணியாவரையும கொன்று நசுக்கி நசுக்கித் தீயிற்பொசுக்கிய தூளனம்போல்செய்து தூரதண்டிகையைநோக்கிச் சொல்லுகின்றனர் பார்த்தையா மாதுசிரோன்மணியே எனது பராக்கிரமத்தை யென்று சொல்ல அதற்கவள் சொல்லுகிறாள் வாரும வானரசிரோன்மணியே என்மகனானவன் அந்த வீட்டில் விலங்குடனே இருக்கிறான் தயவுசெய்து அவன்விலங்கைத் தறித்துவிடுமென்று நமஸ்கரித்தாள் அனுமார் அதைக்கேட்டு நானிந்தப் பாதாள இலங்கைக்குப் பட்டங்கட்டி துரைத்துவராசனைவக்க இருக்கும்போது இன்னமயிலங்கா உன்மனங் கலங்கா நீலமேகத்துங்கா பாதாள இலங்கா புரந்தரா துரந்தரா தீரதரா வரந்தரா என்று கூறுமாப்போலக்கூறி அவனிருக்கிற வீட்டின் கதவை நுழுக்கி உள்ளேபோய் விலங்குகளை நறுக்கிவிட நுழைந்தார் நீலமேகன்பார்த்து இவனென்னே புதிதாயத்தோன்றுது நம்மைக் கொல்லவந்தவனென்று கருதி விருகி மூலையில் நடுநடுங்கி ஒளிந்தான் அனுமார் அவனைப் பார்த்து அடா நீலமேகா வெளியிலே புறப்

பட்டாவென்று சொல்லக்கேட்டுத் திரும்பவும் கதவுமூலையிலொளித்தான் அநுமாரிட்டேபோய் விழப்போமாயி லவன் மிகவும் பயந்து சாமுத்திரம்பெய்துக்கொண்டு சிவனைப்போக்குவானென்று கருதி அரதண்டியைபணிந்து பெண்ணே உன்மகன் என்னைக்கண்டு பயந்துகொண்டு மூலையிலேபதுங்குகிறான் நீவந்து அழையுமென்ன தூரதண்டி அவ்வாறே காவற்கூடத்திலேசென்று நீலமேகனைப்பார்த்து அடா நீலமேகா என்மூலையிலேபதுங்குகிறாய் வெளியிலேவாடா குமாரனேவென்றழைக்க அவன் பயந்தெளிந்து தாயாரிடத்தில்வந்து வாடிதாயே உன்காலிலேயிருந்த விலங்கெங்கே யாவர் முறித்தார்கள் யாதரித்தார்கள் சொல்லுமம்மாவென்று நயத்தோடும் பயத்தோடும்கேட்கத் தாய்சொல்லுகின்றனள்.

அப்பா குமாரா நீலமேகா நான் இக்கவானரசிரோன்மணியான அனுமார்காலிலேவிழுந்தேன் இவர்தயவுசெய்து என் விலங்கை வாங்கிவிட்டார் என்று மகனையும் அனுமாருடைய காலிலேவிழுந்து கும்பிடச்செய்து அடாபயப்படாதே இவர் இரட்சிக்கவந்த ஆண்டவனடா என்றுகூறி அனுமானைநோக்கி எங்களை இரட்சியும் ஐயாவென்றுசொல்லினள் ஆஞ்சநேயர் களிப்புற்று உங்களிருவரையும் இரட்சிக்கவும் மயிலிராவணனைப் பட்சிக்கவும்வந்து தோன்றினேன் நீலமேகனுக்குப்பட்டங்கட்டி அந்தரூபவதியையு மணஞ்செய்துவிட்டுப்போகிறேனிதோ அபயாஸ்தம்பிடி பிடியென்று தூரதண்டிகையிலேபோட நீலமேகன்கூட சந்தோஷமெய்தினான் அனுமார் நீலமேகனைக்கிட்ட அழைத்து அப்பா இந்த இராமலட்சுமணனை இங்கிருக்காநின்ற பத்திரகாளிகோயிலுக்குப் பலியிடப்போகிறானா மந்தமகாகாளிகோயிலெங்கேயிருக்கிறது காண்பியுமென்றுகூற நீலமேகன்சொல்லுகிறான் சேனர்ஆஞ்சனேய அந்தபத்திரகாளிகோயிலிலே அவர்களிருவரும் இருக்கிறார்கள் அந்தக்கோயிற்கோபுரமானது மகாஉன்னதமாயிருக்கும் அதோபார்த்தீரா தோன்றுது அதிலே இராமலட்சுமணனிருக்கிறார்களென்றும் கூறிப்பின்னுப்சொல்லுகிறான் ஐயா அவர்களைப்போய்நீர்பார்த்தவுடனே நீர் இராமலட்சுமணனகப்பட்டார்களென்றுசந்தோஷித்து இனிமயில்ராவணனையெப்படிபோனாலென்ன நீலமேகன் தூரதண்டி இவர்களெப்படிபோனாலென்ன நமக்கு இராமலட்சுமணன் அகப்பட்டுவிட்டானென்றுகளிப்பெய்தி சும்மாபோய்விட்டாலெப்படி விலங்குதறிக்குவிட்டு எங்களை பரதேசியாக்கிவிட்டுப்போனாலெப்படி அப்புறம் மயில்ராவணன் எங்களிரண்டுபேரையும்வெட்டிப்போடுவானே அனுமந்தா ஆனபடியினாலே எனக்கு வெகுபயமாயிருக்கிறது சுவாமி நானொருயோசனைசொல்லுகிறேன் கோபம்செய்துக்கொள்ள வேண்டாம் நீர் பட்டங் கட்டுகிறேனென்றீரே

எனக்குப்பட்டமும்வேண்டாம் இதோஇந்தமயிலிராவணனைமுன்னேசங்காரமபண்ணிவிட்டு அப்பால் இராமலட்சுமணரையெடுத்துக்கொண்டு உமக்குச்சரிப்போனவனுக்கு இந்தப்பாதாளவிலங்கையைப் பட்டங்கட்டிவிட்டு அப்பால்நீர்போகலாமென்றுகூறினன்.

அப்பால் அனுமார்சொல்லுகிறார் தம்பிநீலமேகா நீ இப்படிசம்சயப்படவேண்டாம நானுனக்கு அபயாஸ்தங்கொடுத்து தப்புவேனோ தப்பத்தக்கதில்லை இந்தாஉனக்கு நம்பிக்கைசொல்லுகிறேன் இதோயிருக்கிறஆகாயவாணி பூமிதேவிசாட்சியாக நானுனக்குதப்பாமல் பட்டமுங்கட்டி விவாகஞ்செய்து பின்புஉன்னிடத்தில் விடைபெற்றுக்கொண்டு போகிறேனென்றுகூறநீலமேகனும் தூரதண்டியும்தைரியத்துடனேயிருந்து பின்னும்சொல்லுகிறார்கள் வாருமஆஞ்சநேயா எங்களுக்குமயிலிராவணனுடையகெடி இப்படிசொல்லத்தகததாகவிருக்கின்றது அனுமந்தசுவாமியென்றுகூறிவிட்டு இனிமேல்சுகமாக பத்திரகாளிகோயிலுக்குப்போமபோதும் நாங்களுங்கூடவருகிறோமென்றுகூற அனுமார் இருவரையும்பார்த்து நீங்களிரண்டுபேரும என்கூடவரவேண்டாம ஏனென்றால் யுத்தகளத்திலே நான்சண்டைசெய்யும்போது பயப்படுவீர்களானபடியினால் இந்தமண்டபத்தில்தானே பதிரமோடிருங்கள் என்றுகூறினர் நீலமேகனும்தூரதண்டியும் அனுமாரைநோக்கிச்சொல்லுகிறார் கேளும்அனுமந்தா நீபத்திரகாளிகோயிலுக்குப்போயிருக்கிறசமயத்திலே மயிலிராவணன் ஆள்களை அனுப்பி யெங்களைப்பிடித்து அடித்துவெட்டிப்போட்டால்எப்படிஎங்களுக்குஆதரவில்லையேநீர்போய்விட்டால் இவ்விடத்தில்நாங்களெப்படி இருப்பதுயென்றுசொல்லினார்கள்.

அந்தவார்த்தைகளை அனுமார்கேட்டு இருவரையுமபார்த்துச்சொல்லுகிறார் வாரும்பிள்ளாய் நீலமேகா அவ்வாறே இங்கெவராகிலும் வந்து உங்களைப்பிடிக்கவந்தால் என்னைநினைத்துக்கூப்பிடுங்கள் நான்வந்து அதம்பண்ணிப்போடுகிறேனென்றார் ஆனால் அவ்வாறே நல்லதுபோமென்று சொன்னார்கள் அனுமார் விடைபெற்றுக்கொண்டு அதிசீக்கிரமாகப் பத்திரகாளிகோயிலுக்கு வந்தார் அங்ஙனம் அம்மகாகாளிகோயிற்கதவுசாத்தப்பட்டிருப்பதைப் பார்த்து ஐந்துவிரலுங்குவித்து இறுகக் கெட்டியாகப்பிடித்து ஓங்கி ஒருகுத்துக்குத்தினர் அங்கிருந்த பதினாயிரங்குலவண்டி யிழுக்கத்தக்கதான கற்கதவானது பொடிப்பொடியாகப்போய்விட்டது படுசூரணமாய்விட்டது உடனேஉள்ளேபிரவேசித்தார் அங்கிருக்கிற அதிசயத்தைநச்சொல்லுகிறேன் வினவாகக்கேட்டருளுங்களென்று நாரதர்சௌனகமருஷிக்குச்சொல்லுகிறார் அந்தமகாகாளிகோயிலிலே ஆயிரக்கால்மண்டபம அபிஷேகமண்டபம் எண்ணெயாடுமண்டபம் பளிங்குமண்டபம் முத்துமண்டபம் இரத்தினமண்டபம்

பொன்மண்டபம் வெள்ளிமண்டபம் தங்கமண்டபம் கங்கணமண்டபம் வசந்தமண்டபம் உசந்தமண்டபம நீராடுமண்டபம்சுவாமியோடுபோராடுமண்டபம் வண்ணமண்டபம நிண்ணமண்டபம் கன்மண்டபம் கன்மண்டபம் மாணிக்கமண்டபம் மரகதமண்டபம் கோமேதகமண்டபம் வச்சிரமண்டபம பச்சைமண்டபம் புஷ்பமண்டபம் வயிரமண்டபம் தாளமண்டபம் பதுமமண்டபம் புன்னைமண்டபம் வதுவைமண்டபம் பிரகாரங்கள் யாகசாலைகள் தூஸ்தம்பம் கொடிக்கம்பம இப்படி நானாவித அதிசயத்தைப்பார்த்து வேர்த்து ஆர்த்து புன்சிரிப்பெய்து இராமலட்சுமணனை நாடி ஓடி தேடி மனதுவாடி மூலஸ்தானக்கதவைமூடி இருப்பதால் கோபமீடி உடனே தமதுகையினால்சாடி உடைத்துவிட்டார் அப்படிஉடைத்துப்பார்க்குமளவில் அங்ஙனம் சண்டி சாமுண்டி யாமளை மாகாளி கௌரி சூலி மாலினி எண்டோளி சிலி சண்டிகை தேவி வீரி மாதரி கங்காளி வேதாளி உமைமாதங்கி தாருகற்செற்றதையல் பைரவி சிவை ஆரணிநாரணி வல்லணங்கு ஐயமூக்கண்ணி மதுபதி வாளியூர்தி மாயையோகினி இடாகினி வலவை சூர்மகள் மாயவளான்று முப்பத்துமூன்று பெயர்படைத்த பத்திரகாளியானவள் யானைக்கொம்புபோல நீண்டபல்லும்சன்னபின்னல் சடையும்மருப்படையும் புலித்தோலுடையும் அகோரசொரூபமாகவிருந்தாள் சந்தமினி வஞ்சப்பெண்முதலியபேர்கள் ஊழியம்பண்ணுகின்றதையும் பார்த்து கிட்டசென்று அவளருகில்வைத்திருக்கிற பெட்டியைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு திறந்துபார்க்க மகிழ்வெய்தி இப்படியாசெய்தி என்றுகருதி அந்தப்பெட்டியை மெல்ல அசையாமலெடுத்து மேல்மூடியைத்திறந்துபார்த்து இராமலட்சுமணன் நிர்ச்சேஷ்டையாக மயில்ராவணன்மந்திரித்த கட்டினாலும் மாயாசூரணத்தினாலும் கால்கை அசையாதிருப்பதைப்பார்த்து அருகில்சென்று அந்த இருவர்உடம்பெல்லாம் தடவிப்பார்த்து தட்டிஎழுப்பலாகாதென்றுகருதி இராமலட்சுமணன்மயக்கந்தெளிந்துவிழித்துப்பார்க்கவேண்டுமென்று அனுமார்தோத்திரம்பண்ணுகிறார்.

ஓ அகிலாண்டகோடி-பிர்மாண்டநாயகா அனாதரட்சகா-ஆபத்பாந்தவா-க்ஷீராப்திநாதா-சீதாசமேதா - பக்தவச்சலா-பரந்தாமா-பன்னகசயனா-பதுமநாபா-பங்கயப்பாதா- ஆதிவராகா-அச்சுதா-கோவிந்தா-கோபாலா-இராமச்சந்திரா-சோமசுந்தரா- என்றுதுதித்தார் மதித்தார் கித்தினாயோ ஏனழுபங்காளா இருபுபத்தோளா இலக்குமிபணாளா எண்வகைக்குணாளா என்று கூப்பிடும்போது அங்ஙனே சற்று இராமசுந்தரக்கடவுள்குவளைக்கண்விழித்து பவளவாய்திறந்துசொல்லுகிறார் வாரும் அனுமாரே நாம்எங்கேவந்தோம்இதேதுபிள்ளாய்அனுமந்தா கோயிலுங்கோபுரமு மண்டபமாயிருக்கிறதே இதுஎவ்விடம் இதுயாருடையதேசம்

இதுசென்மைஸ்தலம் இங்குயேன்வந்தோம் விவரமாகச்சொல்லுமென்று
கேட்க அனுமார்சொல்லுகிறார் ஸ்ரீராமசந்திரமூர்த்தியேசர்க குருவே
துஷ்டனாமயில்ராவணன்பாவி என்னாலகோட்டையை யாதொருஉபாயம்ப
ண்ணி மாத்திரமந்திரமெடுத்துவந்துவிட்டான் அதனாலே நானும்மை
ச்சேர்ந்து அழைத்துப்போகவந்தேனென்றுசொல்லினார் இவைகளை
யெல்லாங்கேட்ட இராமமூர்த்திகண்திறந்தவர் மறுபடியும் மயில்ராவ
ணன் அபிமந்திரத் திரோசசாடனத்தின்மாய்கையினாலே இவர்களகண்
களைத்திறக்கப்படாமல் மூடிக்கொண்டு மறுபடியும நித்திரைசெய்யலா
னார்கள அதை அனுமாபார்த்து விசாரப்பட்டு இனிகாலசுமமாயிருக்க
ப்படாதென்று எண்ணித தீர்க்கயோசனைபண்ணி இப்போதுநாழிகை
பதினைந்தாச்சுது இனிதாமதஞ்செய்தால் கெடுதிநேரும் இராமலட்சும
ணனை இவ்விடத்தில்வைக்ககூடாதுமுன்செய்ததுபோல் இப்போ
து மயில்ராவணன்மதிமயக்கித் தியக்கி மோசமபண்ணுவான் இவர்க
ளை ஒருவிடத்திலே பத்திரப்படுத்திவிட்டுப் பின்பு இராட்சசர்களோடு
சண்டைபண்ணவேண்டுமென்று நினைத்துத் திடமென்று இராமலட்சு
மணனை மூன்றுபிரதட்சணம்பண்ணி நமஸ்கரித்துக்கும்பிட்டுப் பெட்
டியைமூடி இருகையினாலும் அசையாமலெடுத்து அந்தமயில்ராவணன்
பட்டணத்தைவிட்டு எண்பதுகோட்டைகளையுந்தாண்டி அப்பால்போ
ய் அங்கேயிருந்தகமலமென்று ஒருமலையிருக்கின்றது அந்தமலையினு
ள்ளே ஒருமண்டபமிருக்கின்றது அம்மண்டபத்தினுள்ளே ஒருபெரிய
குகையிருக்கின்றது அந்தக்குகையிலே இராமலட்சுமணனைக் கொண்
டுபோய்வைத்து பூமியைப்பார்த்து அனுமார்சொல்லுகிறார் கேளும்மா
தே பூமாதேவி உன்னுடையபுருஷனவர் இதோயிருக்கிறார் இவர்மயி
ல்ராவணன்கையிலே அகப்பட்டபடியினாலே நானெடுத்துவந்தேன் உ
னதுமாப்பிள்ளை இப்படியிருக்கலாமா உன்தங்கைஇலங்கையில் அசோ
கவனத்திலிருக்கிறாள் இனிமேல் இராமலட்சுமணனபோய் இராவணச
ம்மாரஞ்செய்து உன்தங்கையைவிடுவிக்கப்போகிறார்கள் ஆனபடியால்
நான் மயில்ராவணனுடனே யுத்தம்பண்ணி அந்தச்சண்டாளனைக்கொ
ன்று பின்புவந்து இராமலட்சுமணனையெடுத்துக்கொண்டுபோகிறேன்
அந்தமட்டும நீ வைத்திருந்துகாப்பாற்றியென்கையில் ஒப்பிக்கவேண்
டுமென்றுசொல்ல பூமிதேவி அனுமானைப்பார்த்து வாரும்ஆஞ்சனேய
ப்பெருமானே இவ்விடத்தில்வையும்பத்திரமாகப்பார்த்துகாக்கிறேனென்
றுசொல்லும்போல பூமியானது பளீலென்றுவெடித்தது அனுமார்
புகுந்து அந்தவெடிப்புக்குகையிலே வைத்துவிட்டுப் பத்திரமென்று
சொல்லி மயில்ராவணன்பட்டணத்திற்குவந்துவிட்டார் உடனே பூமிதே
வியும் நாமிப்படியிருந்தால் கெடுதிநேரிடும் இராமலட்சுமணனைக் கா

ண்பித்துக்கொடுக்கலாகாதென்று வெடிப்புக்குகைகளை மூடிக்கொண்டான் இந்தக்கதை இவ்வாறிருந்தது.

அங்கே கடகன் என்கிற இராட்சசனும் அவன் பெண்சாதியும் அனுமார்வாலிற் கட்டுப்பட்டு சரணம்பண்ணி விடுவித்துக்கொண்டுவீடுவந்து சேர்ந்து மறுபடியும் பெண்சாதியும் தானுமாக மனமத்திரீடை நடாத்திவருகிறபோது கடகனைப்பார்த்துச்சொல்லுகிறாள் வாரும் பிராணநாயகா அறிவுக்குறைவா நீர் மயில்ராவணனுடைய உப்புஞ் சோறுந்தின்று அவனுக்கு இரண்டகந் தேடலாமா சத்துராதியான குரங்குக்குப்பயந்து ஓடலாமா இனி உமது அரசனிடத்தில் நாடலாம வீரமில்லாத நீர் எவனிடத்தில் சேர்ந்து கூடலாமா (அன்னமிட்டவன் பெண்சாதியைக் கன்னமிட்டவனுபோல்) நீர்செய்துவிட்டீர் அல்லாமலும் நீர் அவனோடேபோய் சொல்லாமலுமிருப்பது தருமசாஸ்திரநெறிக்குத்தகுதியல்லவென்று தன்பெண்பால் நற்புத்திவிளக்கக் கூறினாள் கடகன் கேட்டு இதோபார்டி போய்ச் சொல்லுகிறேனென்று வீடுவிட்டுப்புறப்பட்டுச் சீக்கிரமாகத்தோட்டத்துவழியிலே அனுமாருக்குத் தெரியாதவாறாகத் திரும்பிப்பார்த்துக்கொண்டு மயில்ராவணனுடைய ஆசாரவாசலில் நுழைந்தான் அவ்விடத்தில்பன்னீராயிரக்கோடி இராட்சசர்கள சத்துருபயமில்லாமல் ஆயுதங்களைத் தலைக்குயரமாகவைத்து நித்திரைபண்ணுகிறார்கள் அவர்களைக் கடகன்கண்டு கையினாலேதட்டி என்ன தூக்கம் தூங்குகிறீர்கள் மயில்ராவணனுடனே இந்தச்செய்தியைச சொல்லுங்கள் என்று சகலமானபேருக்குஞ் சொல்லி அசாகனென்பவனை அழைத்து மயில்ராவணனுக்கு இந்தச் சங்கதியைச்சொல்லென்று கடகன் சொல்லியனுப்ப அப்போதந்தச் சேதியை அவசரக்காரனான அசாகன் மயில்ராவணனுக்குச் சொல்லும்படி உள்ளேபோனான்.

அப்போது மயில்ராவணனும் அவன் பெண்சாதியும் சப்பிரகூடமஞ்சத்திலே சா அமளிநடத்தும்போது பெண்சாதிநாயகனை நோக்கி ஆண்டவரே உமது மார்பழகுபோல் உலகத்தில் ஒருவருக்குமில்லையென்றாள் நாயகன் சொல்லுகிறான் பெண்ணே உனதுசிலீமுகம்போல உலகத்தில் ஒருவருக்குமில்லையென்று கட்டியணைத்து மடியிற்சேர்ந்து தழுவி சரசசல்லாப உல்லாச அமளிநடாத்தி இருக்கிறசமயத்தில் மயில்ராவணன்காதிலே நாராசங்காய்ச்சி விட்டதுபோலும் பச்சைமரத்திலே வயிரலாணி கடாவினாற்போலும் அசாகனென்பவன்சொல்ல மயில்ராவணன்கேட்டு கிருஷ்ணசர்ப்பம்போலச் சீறிசீக்கிரமாக வெழுந்து கொலுக்கூடத்தில் வந்துட்கார்ந்து அப்பா கடகா வாரும அனுமானென்றவனே துலாயந்திரத்திலிருந்த பூதபதியான இராட்சசர் எப்படி அனுமானாவிடுவார்கள் அவர்களெங்கே அழைத்துவா அவர்களை ஒரே வெட்டாக வெட்டி விடுகிறேனென்றான் கடகன் சொல்லுகிறான்

வாரும் எங்களரசனே வெற்றிமுரசனே இலங்கைக்கதிபதியே நீர்வெ
ட்டுகிறபரியந்த மிருந்தாலல்லவோ அவர்களை அனுமாரென்னுங்குரங்கு
அடித்துக்கொன்றுவிட்டதென்றான் மயில்ராவணன் வாசிமுகன்முத
லிய மந்திரிகளைக்கூப்பிட்டு யோசனைசெய்யவேண்டுமென்று சொல்ல
கடகன் கூறுகின்றான் ஐயா நானொருத்தன் தவிர வாசிமுகன்முதலிய
பேர்களும் இறந்தார்களென்றுசொல்ல மயில்ராவணன் அப்படியாவெ
ன்றுகருவி வாளையுருவி மந்திரிகளிடம்வருவி சற்றுவெருவி இனிமேல்
நடக்கத்தக்கதான காரியமென்னவென்று கேட்டு கடகனைப்பார்த்துச்
சொல்லுகிறான்.

கேளுமபிள்ளாய்கடகா என்தங்கையான தூரதண்டியைத் தண்
ணீர்க்குப்போக அனுப்பினேன் அந்தப்பாவி அழைத்துவந்தாற்போற்
காணவில்லை இல்லாவிட்டால் அனுமாரின்கேலறத்திறமுண்டா நல்ல
து எல்லாவற்றிலும் அந்தத்தூரதண்டியையும் நீலமேகனையும் போட்
டடைத்துவைத்த காவற்கிடங்கிலே இருக்கிறார்களோ இல்லையோ அ
தைச்சற்றேபார்த்து வாவென்றனுப்பினான் கடகன் அதிசீக்கிரமாவோ
அந்தகாவற்கூடத்தைப்பார்த்தான் அப்படிபார்க்கும்போது கதவுபி
ராணமாய்ப் போயிருப்பதையும் விலங்குதுளாயிருப்பதையும் பார்த்
துச்சீக்கிரமாக ஓடிவந்து மயில்ராவணனுக்கு நமஸ்காரஞ்செய்து சொ
லுகிறான் கேளுமையாசுவாமி உனதுகாவற்கூடசாலை பாழாகப்போ
ற்று விலங்குமுறிந்து கிடக்கிறது நீலமேகன் தூரதண்டி இருவரும்
அவ்விடத்தி லில்லையென்றுசொன்னான் அதைக்கேட்ட மயில்ராவண
ன் ஆ-வென்று சீக்கிரமாக ஆக்கிரகித்துப் பராக்கிரமமீறி வியாக்கிர
ம்போலச்சீறி கடகனைக்கண்டு அந்த இருவரையும் இப்போதேவெட்
டிப்போட்டுவாவென்று கடகனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தா
மெழுந்திருந்து இராமலட்சுமணனைப் பத்திரகாளிகோயிலிலே வை
த்தோமேயென்று அந்தப்பெட்டியைப் பார்க்கவந்தான் அங்கே பெட்
டியில்லாதபடியினால் மயங்கித்தியங்கி என்னசெய்கிறதென்று ஆலோசி
த்துக்கொண்டிருந்தான்.

இவனிப்படியிருக்க கடகன் அதிசீக்கிரமாகப் பட்டாகத்தியையு
ங்கொண்டு நீலமேகனையும் தூரதண்டியையும் வெட்டவேண்டி அ
வர்களெங்கே யிருக்கிறார்களென்று கோட்டைகளைத்தாண்டி ஓடிமூலை
மூலைதேடி இராஜமார்க்கத்துவீதியிலே வரும்போது அவனுக்கெதிரே
அனுமார்வரக்கண்டு பயங்கொண்டு கடகன் கிடுகிடுவென்று
நடுங்கி யொடுங்கி இனியெப்படி தப்பித்தோடுகிறதென்று அதிகவிசா
ரத்துடனே பட்டாகத்தியைத் தெருவிலேயெறிந்துவிட்டு ஒருசந்திலே
நுழைந்து குட்டிச்சுவர்களின் வெளிகளைத்தாண்டி விழுந்து எழுந்து
தமூலையையும்பார்த்து அனுமார்கண்ணி லகப்பட்டுப்போகிறோ
மென்று பயந்து அயர்ந்து போரிற்புறமுதுகு காட்டியோடுவதுபோல

வோடி மயில்ராவணனைத்தேடி அரண்மனைவந்து சேர்ந் தான் அங்கே
யில்ராவணன கோயிலுக்கு சென்றுபார்க்க கதவு இடிந்து முடிந்து ம
ண்ணாய்ப்படிந்து படுசூரணமானதைப்பார்த்து இதேது மோசமவந்த
து அதிசயமாயிருக்கிறது பெட்டியையு அனுமாரென்னுங்குரங்குஎடுத்த
துக்கொண்டு போய்விட்டது.

இனியென்னசெய்வோம் பத்திரகாளியும் அவன் கூப்பிட்ட விட
த்திற்குப் போனளோவென்று சந்தேகித்து அந்தமகாகாளிமுகத்தைப்
பாத்தான் பார்த்தவிடத்திலே பத்திரகாளிக்கு அகமகாணிமுகமகோ
ணி விசனமடைந் திருப்பதைப்பார்த்துச் சரிசரிதான் பத்திரகாளியும்
அனுமாரோடுபோய்விட்டாளென்று எல்லணி யோசனைபண்ணி இனி
அரண்மனைக்குப் போகவேண்டுமே அனுமாராவன் எவ்விடத்திலாவ
து ஒளித்திருந்துவந்து வழிமறித்துக்கொண்டு அதபப்ண்ணுவானே
வென்று நான்குமூலையையும்பார்த்து வாயுவேகமனோவேகமாயப் பறந்
து அரண்மனைக்கு ஓடிவந்துவிட்டான் மயில்ராவணன கடகனைப்பார்
த்துச்சொல்லுகிறான் அடாவாடா கடகா நீபோனகாரியம எப்படி யி
ருந்ததோ அப்படியே நான்போனகாரியமு மிருந்ததென்று சொல்லி உ
டனே மயில்ராவணன் ஆவசாக்காரனை அழைத்துச்சொல்லுகிறான்.

அப்பா வேவுகாரர்களே நீங்கள் துரிதமாகப்போய் அந்ததூரண்
டி நீலமேகன் இருவரும் எஙகேயிருக்கிறார்கள் அதிசீக்கிரமாகப் பார்
த்து வாருங்களென்று சொல்லியனுப்ப அவர்களவ்வாறே அரசன்சொ
ற்படி பாதாளவிலங்கை (௬௩) தெருவீதியும் தேடிவரும்போது நீலமே
கனும் தூரதண்டியும் அனுமாரும பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்து
விட்டு பயந்து நடுநடுங்கிக்கொண்டு ஓடி மயில்ராவணன் சபையிலேவ
ந்துசேர்ந்து சொல்லுகிறார்கள் வாரும் பாதாளவிலங்கேஸ்வரா கேளும
அதோ அனுமாரும் நீலமேகனும் தூரதண்டியும பேசிககொண்டு வெ
கு அன்னியோன்னியமா யிருக்கிறார்களென்று சொன்னார்கள் அப்போ
து மயில்ராவணன் வெகுகோபததுடனே ஆராயிரம் ராட்சசப்படை
களைக்கூட்டி நீலமேகன் தூரதண்டி யிரண்டுபேரையும பின்கட்டாகக்
கட்டி யிழுத்துவாருங்களென்று சொன்னான் அப்படிசொல்லிய அரசன்
சொல்லைத்தவறாது அந்த ஆயிரம்பேருப் ஏககாலத்தில் கடல்பொங்கிய
வாறுபோலத் திரண்டுருண்டு அவரவராயுதங்களையெடுத்து அணிந்து வி
ல்லுகளைச்வுகயிற்றுங்கி அம்புறாத்தூணியை முதுகிலேமாட்டி ஆயுதபா
ணிகளாகி அந்த ஆராயிரம்பேரும் தெருவீதிவரும்போது அனுமார்
ஒருமூலையிலொளித்திருந்தார் இராட்சசர்கள் வந்துவிட்டார்கள நீல
மேகனும தூரதண்டியையும் இந்த ராட்சசர்கள் என்னசெய்யபோகிறா
ர்கள் பார்ப்போமென் றிருமாநிருக்க உடனே அரக்கர்வந்து இரண்டு

பேயையும்பிடிக்க அருகில்சென்று அடிவாடிகள்ளி தூரதண்டி அட நீலமேகா சத்துருவைக்கொண்டு வந்து நமது கோட்டைக்குள் விட்டுவிட்டீர்களாவென்று அதட்டி உறுவி சருவி வெருவி முகங்கருகருகி கோபம்பெருகி கடுகிப்பிடியுங்கள் தலையைவெட்டுங்கள் இவ்வாறு நானாவிதவார்த்தையாடினார்கள் இதுகளைக்கேட்ட நீலமேகனும் தூரதண்டியும் இடிகேட்டதுப் பயமொய்த்து அஞ்சி மனந்துஞ்சி அலறி ஆஞ்சனேயா அநுமந்தராயா ஆபத்பாந்தவா அச்சுதனேடுசேர்க்கலா சத்துருக்களிடத்தில் காட்டிக்கொடுத்துவிட்டீரோ இப்படியுஞ்செய்லலாமா வானரமா மருமலர்ததாமா வடிவுறுசோமா கெடிபெறுராமா காக்கக்கடவீர் காக்கக்கடவீர் ஏழையங்களை யென்னையாளாவென்று முறையிட அவ்வார்த்தைகளை அனுமார்கேட்டு அதிசீக்கிரமாக ஆகாயத்திலே யெழும்பிக்குதித்தென்று அரக்கர்படைமேலவிழுந்து யானைக்கூட்டத்திலே ஒரு சிறிய சிங்கமபுகுந்தவாறுபோல ஆறுயிரம் ராட்சசசேனைகளையும் ஒவ்வொருவராகக் கால்களைப்பிடித்துக் காகாவென்றுசுழற்றியாகாயத்தைநோக்க மண்ணிற்றுக்க தேவர்களபார்க்கத் தனதுவலுஞ்சத்திர்க்க யாவரும்சசங்கிசுங்கி யமபுரஞ்சேர்ந்தார்கள்.

மாண்ட அரக்கர்களி லொருவன் பிழைத்து மயில்ராவணனிடத்தோடி அனாந்து-ஓ-ஓ-வென்று இரைந்து கனைந்து சொல்லுகிறான் ஆண்டவனே மகுடாபிஷேகம்பூண்டவனே இலங்காதிபதியே இன்றுஆறாயிரம்பேர்போனோமே அத்தனைபேரையும் அனுமார் சமிப்படுத்திவிட்டானென்றுகூற மயில்ராவணன் தீர்க்காலோசனைசெய்து அதிககோபத்துடன் சகலானுவங்களையுங்கூட்டி கடகனைநோக்கி அடாவடாகடகா உக்கிரசேனனை அனுப்பி ஆயிரங்கோடிகுதிரைவீரர் இரண்டாயிரங்கோடி யானைவீரர் ஒட்டகவீரர்களையும் அவரவராயுதங்களுடனேவருமபடி ஆக்ஞாபி, (உத) இரதங்களைப்பூட்டு, போர்க்களத்தில்நாட்டுமென்றுசொல்லியனுப்ப கடகன் அப்படியேயல்லதென்று ஓட்டமாயோடி அநந்தசேனாதிபதிகளுக்குச் சொல்லி மயில்ராவணன்பக்கத்தில்வந்துசேர்ந்தான் உடனேயாவரும் யுத்தகோலத்துடனே வந்தார்கள். மயில்ராவணன் தனதுதேஹா சிங்காரித்துக்கொண்டுவரச்சொல்லி ஆயுதபாணியாகித் தேரின்மேலேறினான் அவனதுசேனாதிபதிகளாகிய உக்கிரசேனன்-தசவீரன்-நசவீமன்-காலதெட்சகன்-விந்தியசம்மன்-வக்கிரன்-சக்கரன்-இருமாலி-அக்கினிகேது-காமகேது-வீரகாலன்-கடகாட்சசன்-அகம்பன்-நிகும்பன்-மந்தரன்முதலான சுத்தவீரர்புடைசூழச் சத்துருக்கள்தாழ முத்துக்குடைகள்கவிய மாற்றலர்காங்கள் சிரமேற்குவிய சிங்கக்கொடிபறக்க மயில்ராவணனுடனவன்சகலசேனைகளும்புடைசூழும்படி பாளயம்விட்டிறங்கினான்.

இப்படியிருப்பதை அனுமார்பார்த்து மகாகோபத்துடனே விஸ்வரூபமெடுத்துக்கொண்டும் இராட்சசக்கூட்டத்திலே வந்துவிழுந்து தாறுமாறாய்த்துறுகைடிக்க அப்போது இராட்சசர்களெல்லா அனுமாரைச்சுற்றிக்கொண்டு ஈட்டி எறியம்பு பாலாமுதலிய ஆயுதங்களை எறிந்தார்கள் இருபதினாயிரங்கோடி தேரின்பேரிலேயிருக்கிற மந்திரிபிரதானி சேனாதிபதிகள் தங்கள் தங்கள் வில்லுகளைவளைத்து ஆயுதங்களைத்தொட்டு அனுமார்பேரிலே சரவருஷம்பொழிந்தார்கள் ஆயிரங்கோடி புரவிமேலிருக்கிறவர்கள் ஆயிரங்கோடிபாணம்வருஷித்தார்கள் நூறுகோடிமதயானைகளும் இருப்புலக்கைகளைத் துதிக்கையிற்பிடித்துக் காகாவென்று சுழற்றிவிட்டெறிய ஒருவெள்ளம் இராட்சசர்கள் சகலஆயுதத்தினாலேயும் அடிக்க அப்போது அனுமாரானவர்பார்த்து தனதுவாலே விஸ்தீரணமாய்வளைத்து வால்கோட்டையாகத் தன்னைச்சுற்றிலுங் கட்டிக்கொண்டு அக்கோட்டைக்குள்ளே சட்டதிட்டமாய் காலைமடித்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார் அப்போது சகலராட்சசர்களும் ரதகஜதுரகபதாதிகளும் ஏககாலத்தில் அனுமாருடைய வால்கோட்டையின்பேரில் முப்பத்திரண்டாயுதங்களையும் பிரயோகஞ்செய்து சின்னபின்னமாயடிக்க அனுமாரானவர்யோசனைசெய்து நாம் இப்படி உட்கார்ந்திருந்தால் பத்துநாளாகிலும் இவ்வண்ணமே இராட்சசர்கள் ஒன்றுக்குமஞ்சாமல் சண்டைசெய்துகொண்டிருப்பார்கள் ஆகையால் எழுந்திருந்து சண்டைபண்ணவேண்டுமென்று தனதுவாலே பிரம்மாண்டமாய்வளைத்து இராட்சதர்களை வாலினாலும்காலினாலும் கையாலும் மெய்யாலும் பல்லாலும் கல்லாலும் அடித்தும்கடித்தும்உதிரத்தைக்குடித்தும்ஆத்துமத்தைமுடித்தும் காடிகள்புலிகள் யாவற்றையும்அதமாக்கிப் பொடிப்பொடியாயொடித்தும் தும்சப்படுத்தி பிரளயகாலத்திலிருத்திரனைப்போல ஆஞ்சனேயரடிக்க சகலசேனையும் அடிபட்டு மூலைக்குமூலையோடுவதைக்கண்ட சதாசிங்கன் ஓடுகிறபேரைத்தடுத்து ஆஞ்சனேயனைக்கொல்லுகிறேன் யானவனைவெல்லுகிறேன் நீங்கள்பயப்படாமலிருந்து வேடிக்கைபாருங்களென்றுஞ்சொல்ல ஆஞ்சனேயர்பேரில் சகலஜனங்களும்வந்து அநேகபாணங்களைப் பொழிந்தார்கள்.

அப்போது ஆஞ்சனேயர் தனதுவாலே சதாசிங்கனுடைய இரண்டுகாலின்கீழ்புகவிட்டு சுற்றிக்கொண்டு இழுத்துக்கீழேபோட்டு நடுமார்பில்மிதித்தார் மிதித்தமாத்திரத்தில் அந்தசதாசிங்கன் நாலுநாக்கும்பிதுங்கி நாலுகையும் ஒடிந்து கண்கள்வெளியிலேபிதுங்கி குடல்கள்நசுங்கி எலும்புகள்முறிந்து யமபுரத்தையடைந்தான் அப்போதுவிந்தியசிம்மனென்னவன் மனமடைந்து அடா ஆஞ்சனேயா அனுமந்தராயா நில்லு நில்லு சதாசிம்மனை அடித்துமாய்த்துவிட்டோமென்றுகர்வங்கொள்ளா

தே வீணாகத்துள்ளாதே துள்ளினமாடுபோதிசமக்குமா கன் ஜூன்சண்
டைக்குவாடா உன்னை இப்போதேசங்கரிக்கிறேனென்று ஆண்மைகூ
ற அப்போது அனுமார் விக்கிரமசிம்மன்பேரில் எதிர்த்தார் விக்கிரமசிம்ம
ன் வில்லைவளைத்து அனேகபாணங்களை பிரயோகஞ்செய்தான் அந்தபா
ணங்கள் ஆஞ்சனேயர்பேரில் பட்டமாத்திரத்தில் அதிககோபத்துட
னே துரிதமாயோடி தேரின்பேரிலிருக்கிற விக்கிரமசிம்மனைப்பிடித்துத
மதுகையினால்நோக்கியறைய விக்கிரமசிம்மன் மூர்ச்சையாய் தேரின்பே
ரிலிருந்து கீழேவிழுந்து விரைவாயெழுந்து ஓட்டம்பிடித்தான் அவனு
டையதைக்கண்ட கடகரோமனென்கிறவன் ஆஞ்சனேயரோடெதிர்த்து
யுத்தஞ்செய்ய அவனையும்தன்னுடையகையினாலறைந்தார் அந்த அறை
யினால கடகரோமன் இரத்தங்களைக்கக்கிக்கொண்டு கீழேவிழுந்து யமபு
ரத்தையடைந்தான்.

பின்பு நான்காம்வீட்டிலேபிரவேசிக்க அவ்விடத்தில்காலதக்ஷ
ணவன் அதிசீக்கிரமாய் வில்லிலேபாணங்களைப்பூட்டி பிரயோகஞ்செய்
தான் அப்போது ஆஞ்சனேயர் அனேகஆயுதங்களால் யுத்தஞ்செய்து அவ
னையு தமதுவாலை கீழ்புகவிட்டு தேரின்பேரிலிருக்கிற காலதக்ஷனைசுற்
றியிழுத்து ஆகாசத்திலேதூக்கி கரகரவென்றுசுழற்றி நிலத்திலேயடிக்
க அவனுமயமபுரத்தையடைந்தான் அதைக்கண்டு ஐந்தாம்வீட்டிலிருக்
கிற உக்கிரசேனன் வக்கிரசேனன் இவ்விரண்டுபேரும் கண்களில்நீப்
பொறிபறக்கக்கோபித்து வில்லைவளைத்துக்குழைத்தொனிசெய்தார்கள்
அப்போது அதிசீக்கிரமாயெழும்பி குதித்தொன்று உக்கிரசேனனுடைய
தேரின்பேரிலொருகாலும் வக்கிரசேனனுடைய தேரின்பேரிலொருகா
லுமாகவைத்து வீராவேசத்துடன் மிதித்துக்கொண்டு இருவர்கழுத்தை
யும் இரண்டுகையினாலேபிடித்து அங்குமிங்குமசையாமல் அழுத்திரா
க்ஷதாள்யாவரும்பார்த்துப்பிதுர்கலங்க அவ்விருவர்கழுத்தையும் இறுக்
கிப்பிடித்து இரத்தம்வீறிட விழிகளைக் கக்கிக்கொண்டுவிழ அடித்து
அம்சப்படுத்தி யாவரையும் யமபுரஞ்சேர்ப்பித்து பின்பு ஆறாம்வீட்டில்
போசகடகனனவன் ஆஞ்சனேயனைப்பார்த்து கடுமொழி பயமுற்றிரு
க்க ஆஞ்சனேயர்கடகன்பேரில்விழுந்து ஓரறையறைந்து யமபுரஞ்சேர்
ப்பித்து பின்பு ஏழாம்வீட்டில்போகிறபோது தீரசிம்மனனவன் ஆஞ்
சனேயனைப்பார்த்து அட்டகாசஞ்செய்து அடாவானரா உனக்குவா
யிருக்குதென்றல்லவோ கர்வமடைந்திருக்கிறாய் இதோபார் உன்னைப்
போலநாவானது அதிகபெரிதாயிருக்கின்றது இந்தநாவினாலே உன்னை
க்கட்டிப்பிடித்து விழுங்கிவிடுகிறேனென்று ஆண்மைகூறி இருவரும்
மல்யுத்தஞ்செய்ய அப்போது ஆஞ்சனேயர்பின்னிடைய தீரசிம்மனன
வன் ஆஞ்சனேயனைப்பிடிக்கவேண்டுமென்று தனதுநாவை அதிகப்ப
டுத்த ஆஞ்சனேயர் அதிசீக்கிரமாயெழும்பி அந்தநாவை தன்னுடைய
கையாலே ஐந்துசுற்றுசுற்றியிழுத்துகரகரவென்று ஆகாயத்திலேசுழற்ற

ரசிம்மன் காலானது அடிக்கட்டோடே அறுந்துவிழுந்து யமபதிக்குப்போய்ச்சேர்ந்தான்.

பின்பு ஆஞ்சனேயர் எட்டாம்வீட்டில்போகிறபோது சம்புமாலியானவன் அதிககோபத்துடனே ஆஞ்சனேயர்பேரில் பாணப்பிரயோகஞ்செய்ய ஆஞ்சனேயர் அறிந்து தனதுவாலைகீழேவிட்டு சம்புமாலிக்குதெரியாமல் பின்பக்கமாய்வாலைவிட்டு அவனுடையகழுத்தைசுற்றி இழுத்து அழுத்திப்பிடிக்க சம்புமாலியானவன் காலையுதைத்துக்கொண்டு இரண்டுவிழியும்பிதுங்கப் பூமியில்விழுந்து காலன்பதியையடைந்தான் அதைவிட்டுப்போகிறபோது அக்கினிகேதுவென்பவன் அநேகபாணங்களினாலே துன்பப்படுத்த ஆஞ்சனேயர் தனதுவாலினால் அவன்கழுத்தையிறுக்கிப்பிடித்து யமபுரஞ்சேரும்படிசெய்துவிட்டு அப்பால்போகிறபோது ஆஞ்சனேயரோடெதிர்த்துயுத்தஞ்செய்ய திருவாகமில்லாமல் மூலைக்குமூலையாய்விழுந்து அலைச்சல்பட்டுவந்த இராக்ஷதாள் மயில்ராவணனண்டையிலே போயுரைக்க மயில்ராவணன் தனக்குள்ளே யோசனைசெய்து ஓ இராக்ஷதர்களே மாதங்கிசொன்னபடியே ஆச்சுது பார்த்தையா இதென்ன அதிசயம் முன் ஆகாயவாணிநீலமேகன் இந்தப் பாதாளவிலங்கையைப் பட்டங்கட்டிக்கொள்வானென்றுளே அவளுடையதிருவாக்குக் கெதிர்வாக்கில்லாமல் முடியுமாப்போற்றோனுதென்று மனதில்நினைத்து விசாரத்துடனே தன்மனதுதாளாமல் கோபம் பெருகினவனாகி இராட்சசர்களைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ இராட்சதர்களேவாருங்கள் உங்களாலாவதாயிற்பாருங்கள் மூலைக்குமூலையேன் ஓடுகிறீர்கள் நானிருக்கச்சே உங்களுக்கு என்னபயம நானே அந்த அனுமந்தனைசங்காரஞ்செய்வேன் என்னுடையமாய்கையினாலே அவனை அதம்பண்ணுவேன் அவனாலேஎன்னுடையமாய்கையைக்கண்டுபிடிக்கக்கூடுமோ அல்லது அவன்புத்தி அதில்காடுமோ நாடாது ஒருசமயமகண்டுபிடித்தாலும் என்னுடையசீவனிருக்குமிடம் அவனுக்குத்தெரியுமோ அவனுக்குஎன்னைச்சங்கரிக்கும்படியானவல்லமையுண்டோ இல்லை நானே அந்த அனுமந்தனைக்கொல்லுகிறேன் வீரப்படையைவெல்லுகிறேன் இதோபார் என்னுடைய விரணயாகர்த்தைச்செய்து கைபிரளயகாலபூதத்தை அழைத்துக்கொண்டுபோய் அவனை அதம்பண்ணுகிறேனென்று பாக்கிரமங்கூறி இராக்ஷதாளைப்பார்த்து ஆஞ்சனேயர்பேரில் ரதத்தைவிடச்சொல்ல அப்போதுசாரதியானவன் ஆஞ்சனேயர்பேரில்ரதத்தையேவ ஆஞ்சனேயர்சகலராக்ஷதாளுமசசமென்றுநினைத்து விந்தியசிம்மன்-கடகரோமன்-காலராக்ஷன்-உக்கிரசேனன்-வக்கிரஞசன்-கடகமுகன் - திரகடச்சிம்மன்-சம்புமாலி-அக்கினிகேது-முதலானசேனாதிபதிகளை அரஞ்செய்து இனியாவன்சண்டைக்குவரு

வானென்று யோசனைசெய்து இடுப்பில் இரண்டுகைகளையும் ஊன்றிக்
கொண்டு இருமாந்து கோரமுகத்தோடு கண்களில் நெருப்புப்பொறிக
ளபறக்க உறுப்பிப்பார்த்திருக்கும்போது அங்கனம் ஒருரதம்வரக்கண்
டு இதுயாருடையரதம் இவன் எந்தசேனாபதி யாவனோவென்று நோக்
கிப் பார்த்துக்கொண்டிருக்க அந்தரதத்தில் திவ்வியபுரங்கள்பூட்டியிரு
க்க இருபுறத்திலும்இராக்ஷதாள்சூழ்ந்துநிற்க வச்சிரத்தினாற்செய்தவெ
ள்ளைக்குடையானது பிடிக்க நாகெஜமேளமடிக்க வீரர்கள பலபல்லெ
ன்றுகுதிக்க துரைகள்தடதடவென்று பூமியில்நடக்க இருபுறத்திலுஞ்
சாமரைவீச சகலஜெனங்களும்கோஷ்டமிட்டுவர இப்படிநானாவித அல
ங்காரத்துடனே பாணங்கள்சொரிய மகா ஆயுதபாணியாய் வருவதைக்
கண்டு ஆஞ்சனேயர்பார்த்துச்சொல்லுகிறார்,

அடாவாடா மயிலிராவணா உன்னுடைய இராட்சதாளும் நீயுமாக
குதித்தாலும் உன்னையும்அவர்களையும்விடுவேனோ வில்லுவில்லென்று
கர்ஜித்துச்சொல்லிக்கொண்டுவருகையில் மயிலிராவணன் கோபங்கொ
ண்டு அநேகபாணங்களைப்பிரயோகஞ்செய்ய ஆஞ்சனேயர்கோபத்துட
னே மயிலிராவணனுடைய பாணங்களைக்கொஞ்சமாகிலும்சட்டைபண்
ணாமல் மனதில்யாதொன்றுமெண்ணாமல் பாணத்தின்பேரில் விழுந்து
ஓடிவர மயிலிராவணன் அனுமந்தர்வருவதைப்பார்த்து மகாதபஞ்செய்
துபெற்ற வரப்பிரசாதமான அக்கினியாஸ்திரத்தைத்தொடுத்துவிட அ
துவும் அக்கினிச்சுவாலையா யெரிந்துகொண்டுவர அனுமார் அக்கினியா
ஸ்திரத்தைவாலாலேசுழற்றியடிக்க அப்போது அக்கினியாஸ்திரம் பூமி
யிலேவிழுந்தெரிந்துபோய்விட்டது மயிலிராவணன் அக்கினியாஸ்திரம்
வியர்த்தமாய்ப்போனதுகண்டு மகாகோபத்துடனே ரவுத்திராஸ்திரத்
தையெடுத்துப் பிரயோகம்பண்ணினான் அவ்வஸ்திரமானது விடுபட்டு
அனுமாரைச்சுழற்றிவந்து பூமியில்விழுந்துபோக மயிலிராவணன்கண்
டு நாம் சகலஅஸ்திரமும் பிரயோகஞ்செய்துபலனென்ன இனியாதொ
ரஸ்திரமுமில்லையேயென்று மனந்திகில்கொண்டு மகாவிசாரத்துடனே
யோசனைசெய்து அடா நாம் என்னகாரியம்செய்தோம் மாதாசிசொன்
னவார்த்தை நிலைநின்றது அவ்வார்த்தையைக் கேளாமற்போனோமே ஆ
தெய்வமே இனிமேல் எவ்வாறுஜெயிப்போம் நானேன் வீணாகநிலைக
கண்டராவணனுடனே பிரதிக்கினைசெய்து உறுதிகூறிவந்தோமே என்
று மனச்சஞ்சலமாய் கணதுவில்லைதேரின்பேரிலேவைத்து யுத்தம்செ
ய்யாமலிருக்கிற மயிலிராவணனைப்பார்த்து ஆஞ்சனேயர் அதிகவுக்கிர
த்துடனே ஆகாயத்திலேயெழும்பி அவனுடைய தேரின்பேரிலே குதி
த்து துவம்சப்படுத்தும்போது அவன்தேரைவிட்டுக் கீழேகுதித்து அ
ப்பால்நிற்க ஆஞ்சனேயர் இரதமானது பொடிபொடியாய்ப் போன
வுடனே மயிலிராவணன் நிற்கப்பார்த்து அப்போது அனுமார் ஐந்து

விரலையுமடக்கி அவனுடைய மார்பிலேகுத்த மயில்ராவணன் மூர்ச்சையாய் காதிலும் மூக்கிலும் இரத்தங்களைக்கக்கி அலறிக்கொண்டு பூமியிலே விழுந்தான்.

உடனே யெழுந்திருந்து மகாகோபத்துடனே தன்னுடையதபாணத்தைச்சுழற்றி ஆஞ்சிநேயர்பேரில் எறிய அவர்மூர்ச்சையடைந்து சீக்கிரத்தில் பந்தடித்தாற்போலே பதறிக்கிளம்பி அட்டகாசஞ்செய்து மயில்ராவணனைப்பார்த்து அடாவில்லு வில்லு திருடாவென்று சொல்லிக்கொண்டு தனதுவாலை கீழேவிட்டு அவனுடைய இரண்டுகால்யுமசுற்றியிழுத்து ஆகாயமார்க்கத்திலேதூக்கி கரகரவென்று சுழற்றிபூமியிலே அடிக்க மயில்ராவணன் பூமியிலே அறைப்பட்டு நூறுசுக்கலாய்த்தெறித்து மார்க்கண்டங்கள் ஒன்றுதுண்டாய் மூலைக்கொருபக்கமாய்த்தெறித்து உருத்தெரியாமல்போக அனுமார் சந்தோஷத்துடனே நாம் பண்ணினபிரதிக்கினை முடிந்ததென்று ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினுக்குந் ஸ்தானமாகத்திரும்பி ஸ்தோத்திரஞ்செய்ய அப்போது மயில்ராவணன் முன்போலுருவாகி ஐந்துவிரலையு முஷ்டியாகப்பிடித்து ஆஞ்சிநேயர் பின்புறத்தில்வந்து அவர்முதுகில் ஓங்கிக்குத்தினான் அவர்திரும்பிப்பார்த்தார் மயில்ராவணன் நிற்பதுகண்டு இந்தகாரணம் இவனைச்சங்காரம்பண்ணினேனே இவனோர் மயில்ராவணன்போலத் தோன்றுகிறது இன்னம் இவனைப்போல இரண்டு மூன்று பேருண்டோவென்று ஐயுற்று யோசனைசெய்துகொண்டிருக்கும்போது அவன் அட்டகாசம்பண்ணி அருகில்நின்றுகொண்டு அனுமானைப்பார்த்து அடாவானராவென்றுசொல்லி நிற்கிறவனை ஆஞ்சிநேயர் சற்றேனும் திரும்பிப்பாராமல் ஐந்துவிரலால் முஷ்டிக்குத்தாகக்குத்தி அதஞ்செய்து மறுபடியும் எழுந்திருந்து யுத்தஞ்செய்தபின்னும் மயில்ராவணனை சாகஅடித்து அஷ்டதிக்கிலும் மார்க்கண்டங்களை சக்கைசக்கையாய்ப் பேர்த்தெறிய அக்கண்டங்கள் முன்னூறுயோசனைக்கப்பால் போய்விழுந்தன அப்போது ஆஞ்சிநேயர் மயில்ராவணனைக் கொன்றுபோட்டோமென்று சந்தோஷத்துடனே இராமமூர்த்தியை நினைத்து ஸ்தோத்திரஞ் செய்யும்போது மயில்ராவணனும் முன்னூறுயோசனைக்கப்பால் விழுந்துகிடந்த மார்க்கண்டங்கள் ஒன்றாகசேர்ந்து முன்போலுருவாகி வில்லாவில் ஓடிவந்தான்.

அப்போது ஆஞ்சநேயனைப்பார்த்து அடா அனுமந்தா நீயென்னுடைக்கு வருவாயாவென்று கேட்க அனுமார் மயில்ராவணனைப்பார்த்து இதென்ன ஆச்சரியம் இறந்துபோனவன் அடிக்கடிபிழைத்துவருகிறான் இவ்விசயம் யாதொன்றிலுங் கண்டதில்லை இதென்ன ஆச்சரியம் ஆச்சரியமென்று யோசனைசெய்து இதென்னகாரணமோ அல்லதுஅலரமோ அல்லதுவல்லமையோ நாம என்னசெய்யலாம் அந்த பாதகனான விபீஷணன் மயில்ராவணனுடைய வல்லமை யிப்படிப்பட்டதென்று சொ

ல்லாமற்போனானே இனிமேல் இவனையெப்படிகொல்லுகிறது இவன் இவ்வண்ணமாய் செத்துச்செத்தும் பிறப்பானேயானால் நான் யெப்படிசெயிப்பேன் என்பிரதிக்கினை யெவ்வாறு முடியும நீலமேகனுக்கு என்னுல்பட்டம் கட்டமுடியுமோ ஆ-ஆ-தெய்வமே இப்படிவல்லமையான மயில்ராவணனுடைய மாயங்களுக்கு நான் பாத்திரனல்ல ஓ இராமலட்சுமணரே! உங்கள் காரியார்த்தமாய்வந்த யெனக்கு இந்த அபஜெயமவரலாமோ தேவர்களே நீங்களாவது இவனிறம்வகது இவனதுவரம் இப்படிப்பட்டதென்று எனக்கு சொல்லலாகாதா என்னசெய்வேனென்று விசாரப்பட்டுக்கொண்டு மனத்திடப்பட்டு இனிமேல் நமக்குமர்மம் ஆர் சொல்லப்போகிறார்கள் நீலமேகன் தூரதண்டி இவர்களிடத்திற்குப்போய் இந்த மர்மம் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று மனதிலுக்தேசித்துக்கொண்டு மயில்ராவணனைப்பார்த்து அதிககோபத்துடனே தனதுவாலைகீழேவிட்டு அவனுடைய கால்முதல் கழுத்துவரையில் பிரிசுற்றினாற்போலச் சுற்றியிழுத்து ஆகாயத்திலே கர கர வென்றுசுழற்றி பம்பரம்போல விசையாயெறிந்துவிட்டு அங்கிருந்தபடியே நீலமேகன் தூரதண்டி இவர்களருகில் போகவேண்டுமென்று மகாசந்தோஷத்துடனிருந்தார் இக்ஷணம் இப்படியிருக்கதூரதண்டி நீலமேகனைப்பார்த்துச்சொல்லுகிறாள் அடாவாடா குமாரகா சண்டாளனான மயில்ராவணனுடனே ஆஞ்சநேயர்யுத்தஞ்செய்து எங்ஙனம் மூர்ச்சையாய்விழுந்திருக்கிறாரோ தெரியாது அந்தமயில்ராவணனை நூறுதாம்சதைசதை சதையாய்ப்பேர்த்தெறிந்தாலும் மறுபடியும்ஒன்றோடொன்றுருப்படுத்திக்கொண்டுமறுபடியும் சண்டைபண்ணவருவானே அவனைக்கொல்லும்விவரம்ஆஞ்சனேயருக்குத்தெரியாது ஆகையால் நீ இங்கேயிருநான் அவனைக்கண்டு மயில்ராவணனைக் கொல்லுகிறதற்கு தந்திரம்சொல்லி வருகிறேனென்று நீலமேகனை யவ்விடம்விட்டுவிட்டுப்பிரயாணமாயவந்து பார்க்க அப்போதுமயில்ராவணனும் அனுமாரும் ஒருவீட்டிலிருந்து சண்டைபண்ணுகிறதைக் கண்டு ஆஞ்சனேய ரிடத்திற்போய் யாதொருசங்கதியுஞ் சொல்லமுடியாமல பயந்து அந்தவீட்டிலேநின்றுக்கொண்டிருந்தாள்.

அப்போது ஆஞ்சனேயர் தூரதண்டிவந்ததைப்பார்த்துச் சந்தோஷமடைந்தார் அவள் எதிர்சென்று இத்தருணம் இருவருடைந்திருக்கிறபடியால் சைகையாய் ஆஞ்சனேயனைப்பார்த்துசுவாமி அனுமாரே உட்காருமையாவென்று சொல்லி தாங்கள் ஒளித்திருந்தவிடத்திலே நீலமேகனைவிட்டுப்போட்டு உமதண்டைக்குவரவேண்டுமென்று வந்தேன் என்றுசொல்ல அப்போது ஆஞ்சனேயர் தூரதண்டியைப்பார்த்து வாரும் பெண்ணே தூரதண்டி என்னசொல்லச்சொல்லுகிறாய் அந்த மயில்ராவணனுடனே பலபலயுத்தப்பண்ணி சித்திரவதை பண்ணினாலும்

மறுபடியும் எழுந்திருந்து சண்டைக்குவருகிறான் இவ்வண்ணம் செத்துசெத்துப்பிழைப்பது இவ்வுலகிலுண்டோ ஆ இதென்ன ஆச்சரியம் அவனுடைய பிர்த்தாந்தமென்ன அவனுடைய பெலா பெலந்தானென்ன நீயாதாகிலும் அறிவாயா நீ அறிந்தாயானால் தெரிந்தவளாயிற் சொல்லென்றுகேட்க தூதன்டி ஆஞ்சனேயனைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாரும் வானரசிரோன்மணி யான் தெரிந்தவளாயிற் சொல்லுகிறேனகேளும் முற்காலத்தில் நானும் என்கணவனும் சுகமாய் வாழ்ந்திருக்குங்காலத்தில் ஒருநாரியார் தத்தமாம எங்கள்வீட்டில் விருந்துண்ணவந்தான் அவனுக்கும் சகலபிரஜைகளுக்கும் சட்சுவையோடு அன்னம்பாலிக்க சகலரும்போசனமுண்டு கைகாலசுத்திசெய்து தாம்பூலந்தரித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்குந்தருணத்தில் மயில்ராவணனுனவன் தனதுயுயிர் இலயிருக்கப்பட்ட ஸ்தானத்தை கபடில்லாமற்சொன்னான் அந்தவிவரம் யாதென்று கேட்பீரானால் யான் சொல்லுகிறேன் கேளும், ராவணனென்றுல் அநேகதவங்கள்செய்து சகல வரங்களும் பெற்றதுமன்றி மறுபடியும் பிர்ம்மாவைநோக்கி அநேககாலம் தபசுபண்ணினான்.

அந்ததவமானது சத்தியலோகத்தைத் தனலாயெரிக்க அப்போது பிர்மா சரஸ்வதிசமேதராய் மயில்ராவணன் அருகில்வந்து உன்தபசை நிறுத்து உனக்குவேண்டும் வரத்தைக்கேள்என்று ஆக்கியாபிக்க மயில்ராவணனனவன் பிர்மாவைப்பார்த்துச் சொல்லுகிறான் வாரும் பிர்மதேவ நீர்வரங்கொடுப்பது மெய்யானால் சொல்லுகிறேன் கேளும நீர் எனக்கு சகல அஸ்திரங்களும் கொடுத்திருக்கிறீர்கள் இனியெனக்கு யாதொன்றுந் தேவையில்லை நீர்கொடுத்த அஸ்திரத்தினாலே யான் யுத்தஞ்செய்துசெயத்தை அடைவேன் அந்த அஸ்திரம் வியர்த்தமானால் என்னை வெட்டிப்பிளந்தாலும் என்னுயிர் என்னைவிட்டு நீங்காமலும் வெட்டுப்பட்டு துணுக்கை துணுக்கையானாலும் மறுபடியும் ஒன்றோடொன்று சரீரத்தோடு சேர்ந்து உயிராகவேண்டும் எப்போதும் சண்டைக்கிளையாமல் வெற்றியைக் கொடுக்கவேண்டும் அவ்வண்ணமாய் வரங்கொடுத்தால் மகாவுத்தமம் அப்படிக்கொடுப்பீரானால் உம்முடைய கீர்த்தியானது உலகெங்கும் பிரகாசித்திருக்குமென்று பிலாபித்துச் சொல்ல பிர்மாவானவர் பார்த்துச்சொல்லுகிறார் வாரும்பிள்ளாய் இலங்கைமன்னே நீசொல்லாதுசொன்னாய் இவ்வார்த்தைக் கேட்டாயே உயிர் போய்விட்டால் பஞ்சபிராணனும் போய் விடுமே மறுபடியும் எவ்வாறு உன்பிராணன்வரும் பஞ்சபிராணன் இருந்தாலல்லவோ ஜீவன் வருமென்ன அப்போ மயில்ராவணனனவன் சொல்லுகிறான் வாரும் வரங்கொடுக்கும் பிர்மாவே பஞ்சபூதமிருந்தா லொழியஜீவன்வாராதென்றீரே யான்சொல்லுகிறேன் கேளும் என்னுடைய பஞ்ச பூதம் ஐந்துவண்டாயுருக்கொண்டு என்னுடைய பாதாளவிலழு

வைகயிலே மூவாயிரம் யோசனைககப்பால் விந்தியாசல பர்வதமென்றிரு
க்கின்றது அப்பர்வதத்தில் ஐந்துகுகையிருக்கிறது அந்தஐந்துகுகையி
லும என்னுடைய பஞ்சபூதங்கள் ஐந்துவண்டாயுருக கொண்டிருகக
வேண்டும இவ்வண்ணமாய் வரங்கொடுமென்று சொல்ல பிர்மமா யோ
சனை பண்ணி இவனுக்குஇப்படிவரங்கொடுத்தால் உலகமெல்லாம அத
ம்பண்ணுவான் என்றுமனதிலுதமித்து மயிலிராவணனைப்பார்த்துச்
சொல்லுகிறார்.

வாரும் பிள்ளாய் மயிலிராவணா உன் இஷ்டப்படி வரங்கொடுத்தேனு
ன் யாராகிலும் உனனோடெதிர்த்து யுத்தமசெய்து உன்னையடித்துக்
கொன்று அந்தவிந்தியாசல பர்வதத்திலிருக்கிற வண்டை நசுக்கிக்சக்கி
சென்றுவிட்டால் அப்போது உன்சீவன் போய்விடும் என்றுகூற ம
யிலிராவணன் பிர்மாவைப்பார்த்துச்சொல்லுகிறான் வாரும் பிர்மசிருஷ
டியே அவ்வண்ணம் என்னையும் அடித்துயிதித்துக்கொண்டு அந்தவிந்
தியாசல பர்வதத்திலிருக்கிற வண்டுகளைந்தையுங் கொன்றால் அப்போ
து என்சீவன்போகும அதில்லொருவண்டு தப்பிப்போனாலு நான் சாகத்
தக்கதில்லையென்று வரக்கொடுமென்றுசொல்ல பிர்மாவானவர் அவன்
கோரியவாறே வரங்கொடுத்து சத்தியலோகத்துக்குப்போனரென்று
என்னுடனும என்கணவனுகிய காலநேத்ததனிடத்திலும் சந்தோஷத்
துடனே சொல்லியிருந்தான் ஆகையால் ஆஞ்சநேயரே அவனுக்கு இ
த்தனைகர்வமும் அகங்காரபுஜபலங்களும் உண்டாகின அவனுடைய வி
ர்த்தாந்தம் இப்படிபட்டது அவனையெவ்விதமாய் சங்காரஞ்செய்யவே
ணடுமோ அவ்விதமாய் சங்காரம்பண்ணும பிள்ளாய் யென்று சொல்ல
ஆஞ்சநேயர் ஆ-ஆ இவ்வளவுதந்திரமாயிருக்குதென்று மனதிலேயோ
சனைசெய்துக்கொண்டு உடனே அதிகவேகமாய் அவ்விடத்திலிருந்து
ரணகளம்வந்து குதித்தார்.

அப்போது மயிலிராவணன் ஆஞ்சநேயனைப்பார்த்து அடாவடா
வானரா நீயெங்கேபோனாய் நானுன்னைவிடுவேனோ யமபுரத்துக்கனுப்
புவேன் நீகெட்டியாய்நம்பு இதுபரியந்தம் எங்குவொளித்திருந்தாய் எ
ன்னுயிர்போக்க உன்னாலாமோ இதோபார் நானொருமாய் கைபண்ணு
கிறேன் உன்கண்ணுக்குப் புலப்படாமலிருக்கிறேன் என்னுடைய மா
ய்கையைப்பாரும் வல்லவனென்று மனதிற்சந்தேகந் தீருமென்று ஆ
ணவமாகூறி அக்கணமே கண்கட்டுமாந்திரஞ்செய்து ஆஞ்சநேயர் கண்
ணைக்கட்டி அவரதுகண்ணுக்குத் தெரியாமல்நின்று அநேக விசேஷங்
கள்சொல்ல ஆஞ்சநேயர் மயிலிராவணனைப்பார்த்து அடாதிருடாவா
டா இராட்சசப்பதரே நீ இப்படிப்பட்ட மாய்கையுடைந் திரு
க்கிறாய் இந்திரசித்தனென்பவன் எவ்வாறு போனான் அவ்வாறு
உன்னை நான் அதம்பண்ணுகிறேன் உன்மாய்கையைவிட்டு என்

முன்னேநில்லடா என்கேள்விக்கு உத்தரவுசொல்லடாவென்று ஆஞ்சனேயர் மயிலிராவணனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

வாடா இராட்சச அதமா இவ்வுடல் உனக்குச்சதமா உன்விர்த்தாந்தமெல்லாமறிந்தேன் உன்மாயைகளையுந்தெரிந்தேன் உன்னையும் என் வாலுக்குப்பலிகொடுக்கிறேன் மாய்கைசெய்யாதே என்னைநீவையாதே என்முன்னில்லடா என்னைசண்டையில்வெல்லடா ஏன்கெட்டுப்போகிறாய் அந்தப்பாவியான திசைகண்டராவணன் சீதாதேவியைத் திருடிகொண்டுவந்தான் அந்தத்திருடனை ஸ்ரீராமமூர்த்தி கோதண்டத்தினாலே அதம்பண்ணப்போகிறார் நாளையதினம்சூரியவுதயத்திற்கு நீயும ருடனேந் திருடனாய்க்கட்டிண்டு ஸ்ரீராமலட்சுமணனைக் கொண்டுவந்து திருட்டுத்தனமாய் வைத்தவுன்னை நான்லேசாகவிடுகிறதில்லை நீ யென்னசெய்வாய் அஷ்டமத்துச்சனியன் புட்டத்துத் துணியையுமுரியும் என்பதுபோலாயின அதற்காரென் செய்வார்கள் ஆகாசவாணிவாக்கு தப்புமோ உன்செய்கை யாவருக்குமொப்புமோ சூரியவுதயத்துக்குள உன்பாதாளவிலங்கையை நீலமேகனுக்கு பட்டங்கட்டுகிறேன் உன்சீவனை இக்கணமேயமபுரத்திற்கு அனுப்புகிறேன் உன்விர்த்தாந்தம உன் மாய்கை இவற்றை நாமறிவேன்யென்று பிரதிக்கினைகூறி மயிலிராவணனைப்பிடிக்க பிரதக்ஷணம் அப்பிரதக்ஷணமாய் சுற்றிசுற்றி வலகுபார்த்திருக்கிறபோது மயிலிராவணன் திடுக்கிட்டு இந்தவசனங்களைக்கேட்டு இவ்வண்ணம இவன் அறிந்துசொன்னது தாரதண்டியால் அறிந்திருக்கவேண்டும் இல்லாவிட்டால் இவனறியத்திராணியுள்ளவனோ வென்று யோசனைசெய்து பயந்து இனிமேல்நாம்இவன்கையில்அகப்படப்போகாது அகப்பட்டால் இவன்நம்முயிரை மடித்துவிடுவான் ஆகையால் எவ்விதத்திலும் தப்பித்துக்கொண்டோடிப்போகவேண்டுமென்று நினைத்து சமயம்பார்த்துக்கொண்டேயிருந்தான் அந்த சமயத்தில்ஆஞ்சனேயர் மயிலிராவணனைக்கட்டிப்பிடித்துபூமியிலறைந்து கொல்லுவோமென்று யோசனைபண்ணிஸ்ரீராமமூர்த்தியைநினைத்து அதிக கோபத்துடனே இனிமேல நாம தாமதம் செய்யக்கூடாது தாமதஞ்செய்தால்இந்தப்பாதகன்ஓடிப்போவான் இப்போது இருபத்துநான்கு நாழிகையாச்சுதென்றறிந்து உடனே அக்கிருந்தபடியே ஆகாயத்திலெழும்பி மயிலிராவணனுடைய தேரின்மீதுகுதித்தார் அவன திடுக்கிட்டுபயந்து நடுநடுங்கி இனிமேல் இவனோடெதிர்க்கக்கூடாதென்று அந்தரத்தியானமாய் ஒருவர்கண்ணுக்குந் தெரியாமல்மாய்கையாய்மறைந்தோடிப்போனான் அப்போது அனுமார்தேரிலிருந்துகீழேகுதித்துப்பார்த்து மயிலிராவணனைக்காணாமல் அவன் எங்கோடிப்போனானோ என்னமாய்கை செய்தானோ எங்கேஒளித்தானோ தெரியவில்லையென்று நான்குமூலையும் சுத்திப்பார்த்து எங்கும்

காரணத்தால் விசாரப்பட்டுக்கொண்டிருக்கும்போது மயில்ராவணன் அதிசீக்கிரமாய் அனுமார்வந்துவிடுவாரோ அவர்கையால் பிடித்துக்கொள்ளுவாரோவென்று மனதில் திகிலடைந்திருக்கும் பின்திரும்பிப்பார்த்துக்கொண்டு ஓடிப்போய்த்தன்கக்கோட்டைக்கும் மூக்குக்கோட்டைக்கும் நடுவில் ஒரு உத்தியாவனமிருக்கின்றது அந்த உத்தியாவனத்தோப்பில் ஆலவிருக்ஷம் பிரம்மாண்டமாய் வளர்ந்து கெப்புக்கிளையுமாய் தழைத்திருக்கிறது அந்தமரத்தின்கீழ் ஒருவழிபோகின்றது அந்தப்பாதாளத்தில் ஒருவெளியிருக்கின்றது அந்தவெளியிலேபோய் பதுங்கியிருந்தான்.

அப்போது ராட்சசபிராமணர்யாவரும் மயில்ராவணன் ஓடிப்போனதைப்பார்த்து ஆலமரத்தின்கீழே வீரனையாகப்பயனைப்போனவன்போலே காணுகிறது ஆகையால் நாமும் போகவேண்டுமென்று அதிசீக்கிரமாக மாயாசொரூபமெடுத்து ஒருவர்கண்ணுக்கும் தெரியாமல் யாகத்துக்குவேண்டுவனகொண்டுவந்து யாகசாலையை முஸ்தீது செய்து ஒன்பதுகோணமாய் ஓமகுண்டம்வெட்டி மயில்ராவணன் உட்கார்ந்திருந்து ஆர்த்திபண்ணுகிறதற்கு மூக்கோணமாய் மேடைபோட்டு சுடலைக்குபோம் நெருப்பெடுத்துவந்து தலைமண்டைபெட்டியில் எருமைக்கடாவின் இரத்தம்சொரிந்து ஓமகுண்டத்தைச்சுற்றிலும் அந்தத்தலையோட்டையிட்டு எருமைக்கிடாவின் எலும்புகளிருடே ஓமகுண்டத்துக்கு நான்குபக்கத்திலும் தர்ப்பாசனம்போட்டாற்போல் அஸ்திகளைப்பரப்பி பனைமரங்கொண்டுவந்து துஜஸ்தம்பம் நட்டி அதில் ஒருசர்ப்பத்தைக்கட்டினார்கள் பின்னும் ஒருசர்ப்பத்தைக்கொண்டுவந்து ஓமகுண்டத்தினடுவில் உயரவாய் தலைகீழாகக்கட்டி அக்கினிசுவாலையாக எழுப்பி அந்த திரிகோணமேடையில ஒரு தலைமண்டையோடு கவிழ்த்து அவ்வோட்டின்பேரில் மயில்ராவணன் தனதுவலதுகாலை யூன்றி இடதுகாலைக்கழுத்தில்மாட்டி இரத்தசந்தனம் அணிந்துகொண்டு உதிரநிறமான புஷ்பமாலைகளை கழுத்திலும் சிரசிலும்தரித்துக்கொண்டு இரத்தவஸ்திரம் உடுத்திக்கொண்டு இடக்கரத்தில் ஜெபமாலையேந்தி வலக்கரத்தினால் ஆச்சியாகுதிமுதலான நவதானிய சமுத்துக்களை ஆவாகனம் பண்ணி அந்த யூகஸ்தம்பத்திலே கட்டியிருக்கப்பட்ட சர்ப்பத்தை அறுத்து நெய்யிற்றோய்த்து பூரணாகுதிகொடுத்தான் கொடுத்தவுடனே அந்த அக்கினிகுண்டத்திலிருந்து பிர்ம்மாண்டமாய் ஒருபூதம்புறப்பட்டு மயில்ராவணனைப்பார்த்துச்சொல்லுகின்றது.

வாருமையா பாதாளவிலங்கைக் கரசனாகிய மயில்ராவணா என்னை யாதுகாரியமாய் இந்தயாகஞ்செய்து அழைப்பித்தீர் அந்தகாரியத்தைச்சொல்லும் நான் செய்துவருகிறேனென்று கூற அப்போது மயில்ராவணன் அப்பூதத்தைப்பார்த்து ஓ பூதமே என்சத்துருவாகிய ஆஞ்சனேயனைச் சங்காரஞ்செய்து வருவாயென்ன அப்பூதம் பிரா

யகால்ருத்திரனைப்போல சந்தித்து மயிலிராவணனைப்பார்த்து மகாவ
ல்லமையுள்ள பாதாளயிலங்கைக்கரசே நீர்கூறியவாறே ஆஞ்சனேய
னை அதம்பண்ணிவருகிறேன் அவன் எப்படிப்பட்டவனோ அடங்கா
ன்னனோயாதோதெரியாது சகலத்துக்கும் நீயேதுணை இந்தவேளைவி
ளை விடாமலெசெய்துகொண்டிவா நான்சீக்கிரமாகப்போய் செயித்துவ
ருகிறேன் நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று உறுதிப்படி
கூறிபின்பு அந்தயாகசாலையைவிட்டு இரணபூமியில்வந்து ஆஞ்சனேய
ரிருக்கிறதைக்கண்டு சமீபத்தில்வருவதை அனுமார்பார்த்து பிரமித்து
இதென்னடா வென்று அதிககோபத்துடனே எழுந்திருந்து அந்தப்பி
ரளயகால பூதத்தைப்பார்த்துச் சொல்லுகிறார் வாடாராட்சசமாயா நீ
யென்னமாய்கையாய்வந்தாலும் காண்பப்படுவேனோ வென்று அதிக
கோபத்துடனே ஐந்துவிரலையு முஷ்டியாகப்பிடித்து பூதத்தைகுத்தவரு
ம்போது அந்தப்பிரளயகாலாக்கினி பூதமானது ஆவென்றுவாயைத்திற
ந்து கூவென்று அட்டகாசஞ்செய்து வாயிலிருந்து அக்கினிச்சுவாலை
யானது குபீல்குபீலென்று புறப்பட கண்டு ஆஞ்சனேயனென்பவர் நீர்
தானோ உன்னை இப்போதே பஸ்மீகாமாக எரித்துப்போடுகிறேனென்
று ஆஞ்சனேயருக் கெதிரில்நின்று ஆவென்று வாயைத்திறந்தது திறந்
தவுடனே அவர்பேரில் அக்கினிச்சுவாலைசூழ்ந்து பறறிக்கொண்டெரிய
யிவர் அக்கினிக்குப் பயந்து நடுங்கி ஒடுங்கி மூர்ச்சையடைந்து சோபங்
தெளிந்து ஆ இதென்னகாரணமென்று ஆச்சரியப்பட்டு கோபத்துட
னே அந்தப்பூதத்தின் மார்பில் ஒருகுத்துவிட்டார் அந்தக்குத்தினால் பி
ரளயகாலபூதமானது மார்புபிளந்து மூர்ச்சையாய் பூமியில்விழுந்து எழு
ந்து கோபமீறி ஆஞ்சனேயரைப்பார்த்துச் சமீபத்தில் ஓடிவந்து நாலு
விசை மூன்று விசைவிடாமல் அக்கினிசுவாலையாய் சொலிக்கும்படியூ
த அப்போது அவருக்கு தேகமெல்லாம் அனலாய்ப்பற்றிபெரிய எறி
ந்தவிடமெல்லாம் துடைக்கத்துடைக்க எரிச்சல்யாறாமல் வேதனையா
யிருந்தது அப்போது அனுமார் வருத்தமடைந்து சீதாதேவியையும்
ஸ்ரீராமலட்சுமணனையும் நினைத்து பலவாறாய்த்தொழுது கண்ணீர்விட்ட
ழுதுமன்றி அக்கினிபகவானை நினைத்து உன்னிமித்தியமில்லவா இரா
வணசம்ஹாரம் பண்ணுகிறேன் சகலதேவதைகளும் நீர் உபகாரார்த்த
மாய வந்தாரல்லவா அப்படியிருக்க நீ என்னை யெப்படித்தகிக்கலாம்
நீர் அப்படிசெய்வது உமக்குதர்மமா என்று தோத்திரஞ்செய்தார்.

அப்போது அக்கினிபகவான் சில்லென்று தணிந்திருந்தார் அப்
போது ஆஞ்சனேயருக்குக் கோபம் பிறந்து ஆயுத முஷ்டிகளாலே
பூதத்தைக்குத்தினார் அந்தக்குத்தினாலே பூதமானது மூர்ச்சையடை
ந்திருக்க அப்போது ஆஞ்சனேயர் ஸ்தூல சரீரத்துடனே அவ்விட

ம்விட்டு அப்பாலே நீக்கிப்போய் அடங்கிக் கிளம்பி தூரதண்டியருகில்வந்து குதித்து அவளைப்பார்த்து ஆஞ்சனேயர்சொல்லுகிறார் வாரும பெண்ணே தூரதண்டி நான் உன்னோடு பேசிக்கொண்டிருந்து இவ்விடம்விட்டுப்போனேனே அத்தருணத்தில் மயில்ராவணன் எனகையோ மாய்கையாய் மறைந்துபோய்விட்டான் அதன்பின்பு எங்கிருந்துவந்ததோ இப்பிரளயகால பூதமானது அனலாயெரிக்கின்றதே என்றதுகூடினவனையில யுத்தஞ்செய்தேன் யாதொரு காரியமும் முடியவில்லையே இப்பூதம எக்காரணத்தால்வந்ததோ தவசினால்வந்ததோ அல்லது இராவணனுடைய மாய்கையினால்வந்ததோ யாதுந்தெரியேனென்று தூரதண்டியைக்கேட்க அப்பெண்ணானவள் யானென்று மறியேனென்று சொல்ல ஆஞ்சனேயர் சொல்லுகிறார் ஓ தர்மதேவதைகளே யான்சொல்லுவதைக் கேளுங்கள் வைகுந்தவாசராகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவே ராமமூர்த்தியாய் அவதாரஞ்செய்து சத்தியசந்தனாயிருக்கிறதும சீதாபிராட்டியும் மகாபதிவிரதையாயும நான் அந்த ஸ்ரீராமலட்சுமணனுடைய பாதாரவிந்தங்களைச் சேவித்துக்கொண்டிருப்பதும் மெய்யானால் இப்போதனலாயெரிக்கிற பூதத்தைக்கொல்லும்விதம எனக்குச்சொல்லவேண்டுமென்று சொன்னார் அப்போது தர்மதேவதைகள் நடுங்கி ஆகாயத்திலிருந்து ஆஞ்சனேயனைப்பார்த்துச் சொல்லுகிறார்கள் வாரும அனுமந்த சிகாமணியே இப்போது வந்தபூதம் மயில்ராவணனனுப்பிய பூதம ஆனபடியால் இப்பூதத்தைச் சயிக்கமுடியாது உனக்கோர் மார்மஞ் சொல்லுகிறோம் கேள் அதோதோற்றப்பட்ட தங்கக்கோட்டைக்கும வெள்ளிக்கோட்டைக்கும் நடுவில் ஒருதோப்பிருக்கின்றது அத்தோப்பில் ஒருஆலவிருட்சம பிரமாண்டமாயிருக்கின்றது அம்மரத்தடியில் ஒரு வழிபோகின்றது அதில் ஐந்துகுகை யிருக்கின்றது அவ்விடத்திற்குப்போனால் ஒருயாகசாலை யிருக்கின்றது அச்சாலையில் அந்தமயில்ராவணனென்பவன் வீரயாகமென்கிற ஓர்யாகத்தை அதர்வணவேத தோத்திரமாய்ச்செய்கிறான் அந்தயாகம்பண்ணச்சே ஓமகுண்டத்திலிருந்து புறப்பட்டுவந்தது அவன் இன்னமும்யாகஞ்செய்துக் கொண்டேயிருக்கிறான் அவன்யாகத்தை முடிக்குமுன் நீர் அதிசீக்கிரத்திற்போய் விக்கினஞ்செய்தால் இப்பூதத்துக்குப்பலன் ஒழிக்கிறோம் அப்பால் பூதஞ்சொல்லாமலேயோடும் யமபுரத்தைநாடும் அவ்விடத்தில் தானேசங்காரம்பண்ணலாமென்று தருமதேவதைகள் கூறினார்.

அதைக்கேட்டவுடனே ஆஞ்சனேயர் ஆகாயத்திலிளம்பி அந்தஸ்தானத்தைநோக்கி பறந்துபோகும்போது அப்பூதமான தசோடதுடனே ஆஞ்சனேயனைப்பார்த்து அடாகுரங்கே நீஎங்கேபோகிறாய் நில்லு நில்லென்று சொல்லிக் கொண்டு பின்றொடர்ந்து துரத்திக் கொண்டுபோக ஆஞ்சனேயர் பூதத்தைப்பார்த்து நீ கெட்டாய்கெட்டாயெ

ன்று அதிவேகமாய் ஆலமரத்தருகில்வந்து இறங்கினார் அவ்விருட்சத்
தின்கீழ் மயில்ராவணனுடைய ஆக்கினையினாலே மனிதரூபமாக இராட்
சதபிராமணாள் காவலாகவும் நானாமூலையும்பார்த்துக்கொண்டு யாகஞ்
செய்திருந்தவர்கள் ஆஞ்சனேயனைக் கண்டவுடனே உட்புகுந்துதிட்டி
வாசற்கதவைக் கெட்டியாகத் திடமென்று பூட்டிக்கொண்டார்கள் உட
னேமாய்கையால் அம்மரத்தின்பட்டையானது கீழ்விழுந்து வழிதெரி
யவொட்டாமல் மூடிக்கொண்டது ஆஞ்சனேயர் அம்மரத்தின்சத்தத்
தைக்கேட்டு சீக்கிரத்தில் ஒருவன் இவ்வழியைமூடிக்கொண்டு உள்ளே
ஒளித்துக்கொண்டான் இது தர்மதேவதைகளகூறிய ஆலமரமாகையா
ல இம்மரத்தை அடியோட்டே பிடுங்கிப்போடுவோமென்று இரண்டுகை
யினாலும் ஆலமரத்தைப்பிடித்து அசைத்துஅசைத்துப்பிடுங்க அப்போ
அந்தமகாப்பிரளயகாலபூதமானது மரத்தைப்பிடுங்கிக்கொண்டிருக்கிற
ஆஞ்சனேயருடையமுதுகிலேகுத்த அவர்திரும்பிப்பார்த்து அப்பிரள
யகாலபூதத்தை வாலினாலேசுற்றியிழுத்து கட்டிக்கொண்டுமரத்தைவே
ரோடேபிடுங்கி அப்பாலெறிய அக்கணங்குகைதோன்றி பாதாளமாகப்
போக அந்தப்பாதாளவழியாக ஆஞ்சனேயர் பூதத்தையும் வாலிற்கட்டி
னபடிகீழிறங்கி யாகசாலையைப்பார்த்தவிடத்தில் மயில்ராவணன் ஓ
மம்பண்ணிக்கொண்டிருக்கிறதைக்கண்டு ஐந்துவிரலையுமடக்கி நோக்
கிகுத்தினார் அதனால்மயில்ராவணன் மூர்ச்சையாய்கீழேவிழுந்தான் பி
ன்பு ஆஞ்சனேயர் அங்கிருந்த ஓமபாத்திரங்களையெல்லாம் அதமாக்கிஉ
டைத்து யாககுண்டத்தைமிதித்து விக்கினஞ்செய்ய மயில்ராவணன்மூ
ர்ச்சைதெளிந்து அனுமானிருந்து கிடுகிடுவென்றுநடுங்கி நாமதப்பிப்போ
கவேண்டுமென்று மாய்கையாயோடிப்போனான் அப்போது ஆஞ்சனே
யர் யாகசாலையாவையும் அதம்செய்து தன்வாலில் கட்டுண்ட பூதத்தை
ககரவென்றுசுழற்றி பூமியிலேஅடித்தார் அப்போது அந்தப்பூதமான
து அந்தர்த்தியானமாய்க்குதித்து ஆகாயத்திலேபோய் அனுமானைப்பா
ர்த்துச்சொல்லுகின்றது வாருமையா அனுமந்தரே இராமகாரியதுரந்தரா
கேளும் அந்தமகாமாயாவியான மயில்ராவணனாலே உமதிடத்தில்சண்டை
தொடுத்தேன் போய்வருகிறேன்சுவாமி அந்த மயில்ராவணனானவன்
மாய்கையாய் ஓடிப்போய்விட்டான் அவனைத்தேடிப்பிடித்துச் சம்மாரஞ்
செய்யும் இந்தயாகத்தைவிக்கினஞ்செய்தீரே உம்மைப்போல்வல்லமை
யானவன் இவ்வுலகத்திலுண்டோ சுவாமி இராமமூர்த்திதூதா நீ இந்
தமயில்ராவணனைச்செயித்து கீர்த்தியடையக்கடவாயென்று பூதமான
துவரங்கொடுத்துப்போய்விட்டது.

அப்போது ஆஞ்சனேயர் அந்த விசேஷத்தைக்கேட்டு அந்த
கெடுஞன மயில்ராவணன் எங்குபோனானோவென்று திரும்பிப்பா

ர்த்தார் மயிலிராவணன்காணாமலிருக்க அதிககோபங்கொண்டு அடாஇருட்டா நீ எங்கேபோனாலும் நான் உன்னைவிடுவேனோவென்று பராக்கிரமங்கூறி ஆகாயவாணி பூமிதேவி இவ்விருவர்சாட்சியாக அருணோதயத்துக்குமுன்னே அந்த அரக்கனாகிய மயிலிராவணனைக் கொல்லாமற்போனால் இப்பாதாளலங்கைப் பட்டணத்திலே நான் அக்கினிப்பிரவேசமாகக்கடவேனென்று சபதங்கூறி அங்கிருந்தபடி ஆஞ்சனேயர்வெளியேபுறப்பட்டு பாதாளலங்கைப்பட்டணம் நானூறுதெருவாச்சுகிதேளந்தமூலையிலொளித்திருக்கிறானோவென்று எங்குந்தேடிக்கொண்டிருக்க அத்தருணத்தில்மயிலிராவணன் ஆஞ்சநேயர்கண்ணுக்குப்புலப்படாமல் அவர்சொன்னவிசேஷங்களையெல்லாங்கேட்டுப் பயமுற்று நடுநடுங்கிநாமெங்கேபோய்ப்பிழைப்போம் அவன் நம்மைவிடுகிறதாகத்தோற்றவில்லையேயென்றுயோசனைசெய்து முத்துக்கோட்டைக்கு வடபுறத்தில் ஒரு வெளியானவிடத்தைப்பார்த்து அவ்விடத்திலேபோய் தன்னுடையமாய்கையினாலே தனதுசரீரத்தை ஒருவெள்ளிமலையாக்கி அந்தவெள்ளிமலையில் சிலவிருட்சசாதிகளும் மண்டபங்களும் மாடமாளிகைகூடகோபுரங்களும் தடாகங்களுமாகக் கொடிமுடியோடே வெள்ளியங்கிரிக்குச்சமானமாய் விழுந்துகிடந்தான்.

அப்போது அனுமாரானவர் மயங்கித்தியங்கி இலங்கைபட்டணத்து நானூறுதெருவிலுந்தேடி மயிலிராவணனைக்காணாமல் தூதசண்டியருகில்வந்து வாராய்பெண்ணே தூதசண்டி அந்தபூதத்தையும் மத்திமயிலிராவணனுடையயெக்கியத்தையும் விக்கினஞ்செய்து அவனைத்தேடிப்பார்க்கையில் எங்கேயோமறைந்துபோய்விட்டான் அவனெங்குற்றானோ அவனிருக்குமிடம் உனக்குத்தெரிந்திருக்குமாவென்று தூதசண்டியைக்கேட்க அவள் அனுமானைப்பார்த்துச்சொல்லுகிறாள் வாரும்சுவாமி ஆஞ்சனேயசிகாமணி அந்த மயிலிராவணனுடைய மாய்கையை உம்மாலேயறியக்கூடுமோ யாராகிலும் அறியக்கூடாதே அப்படியிருக்க அவன்மாய்கையை என்னாலறியவல்லமையுண்டோ அவனெவ்வாறாயினனோ என்னென்னரூபம் எடுத்திருக்கிறானோ ஆனால்சொல்லுகிறேன்கேளும் ஐயாவே அவனெங்கேயாகிலும் மாயாசொரூபமாயாவது செடியாயாவது மரக்கனாயாவது பிரமிக்கும்படியுற்பத்தியாகிப் புதிதாய்த்தோன்றச்செய்வான் அதைப்பார்க்கவாரும் அச்சுரூபமாயிருப்பானென்றுசொல்ல அனுமார்கேட்டு தூதசண்டியைப்பார்த்துச் சொல்லுகிறார் கேளும்பெண்ணே தூதசண்டி புதியதும் பழையதும் உனக்குத்தெரியுமல்லவா நான் முன்னேபோகிறேன் நீயென்பின்னால்வா எனக்குத்தெரியும் தெரியாமைக்கு நீ தூண்டுகோலாயிருவென்று ஆக்கியாபிக்க தூதசண்டியானவள் நல்லதென்றுசம்மதித்து அவருடன்புறப்பட்டு இலங்கைப்பட்டணம்கா

நாற்றெருவீதியும்தேடி கோட்டைகள் சுற்றும் ஓடி ஓரிடத்திலுங்கா
ணாமல் மனஞ்வாடி மூத்துக்கோட்டைச்சமீபமாக தேடிவரச்சே அங்க
ணாக வெள்ளிபங்கிரியைகண்டு ஆஞ்சனேயர் இதுமுன்னிருந்ததோ
யில்லையோவென்று சந்தேகப்பட்டு அப்பால் நடக்கிறபோது தூரதண்
டியானவள் அந்தவெள்ளியங்கிரியைப்பார்த்து இதேதுபுதிதாயிருக்கி
றது மயிலிராவணனுடைய மாய்கையோவென்று [illegible] ஆ
ஞ்சனேயர் அங்ஙனே யிலோடி அவருக்குசூக்ஷமாய வெள்ளிமலையைக
கட்டி இதுபுதிதாயிருக்கிறதென்று சொல்லவே அவள்வாக்கைக்கொ
ண்டு ஆஞ்சனேயர் ஐந்துவிரலையும்மூடகி மகாகோபத்துடனே அந்த
வெள்ளியங்கிரியைநோக்கி நதாககிகுத்த அக்குத்தானது மலையிம்பட்
டு சுக்கல்சுக்கலாய்ததெறித்துபடுசூரணமாய்ப்போக அந்தமயிலிராவண
னானவன் அந்தவெள்ளியங்கிரியிலிருந்து கிணறுவெட்டப் பூதம்புறப்ப
ட்டதுபோல் வெளியிற்புறப்பட்டு அனுமானைப்பார்த்து புன்னகை
கொண்டு சொல்லுகிறான் அடாவாடா அனுமந்தாபா அமரர்களையான
ன்னுடையமாய்கைகளை உன்னால் கண்டுபிடிக்கக்கூடுமோ நான் உன்
கையிலகப்படுவேனோ அல்லதுநீ யாருக்குவந்தாலஉனைவிடுவேனோ
என்னுடை மாயகைகளைப்பாரென்று அவன் அவர்கண்ணுக்குப்புலப்ப
டாமல் அந்தரத்தியானமாய் ஓடிப்போனான் ஆஞ்சனேயர்மயிலிராவண
ன் மாய்கையாய்ப்போனதைப்பார்த்து அடடா இவன்திருடன் இவனைக்க
ண்டவுடன் பிடியாமறபோனேனே இன்னம் என்னமாய்கை செய்வா
னோ எவ்வித மாய்க்கண்டு பிடிப்பேன் என்று அங்கலாபித்து மறுப
டியும இலங்கைப்பட்டணம் வந்து நனாவ தெருக்களிலும் தேடியெ
ங்குங்காணாமல் கடுத்தெருவில்நடந்து தேடிக்கொண்டு போகிறபோ
து மயிலிராவணனானவன் தன்னுடைய உதகியாவனத்திற்குப்போ
ய் உட்கார்ந்துக்கொண்டு மகாவிசாரத்துடனே இனிமேல்என்னசெ
ய்யப் போகிறோமென்று துக்காக்கிரந்தனாய் வெளியே புறப்பட்டு
நாம அனுமாருடன் சண்டைசெய்யலாமென்றால் நம்மால் முடியா
து மாய்கையாயிருப் போமென்றால் நம்முடைய மாயகைக்கு உட்
படுகிறவனல்ல - நாம் இங்கிருந்தால் எவ்விதத்திலும் நம்மைக்கண்
டுபிடித்து நம்உயிரைமடித்துப் போடுவான் ஆகையால் நாம் இப்
போதே திசைகண்டராவணனிடத் திற்போய் இவ்விடத்தில்நடந்த
சமாச்சாரமெல்லாம்ஆகியோடந்தமாகதெரியப்படுத்தி அவனையழைத்
துக்கொண்டுவந்து சண்டைக்கேவினால்நலமாயிருக்கும் இல்லாவிட்டா
லநாமிப்படி ஒளித்திருப்போமானால் எவ்விதத்திலும் கண்டுபிடித்து
யமபதிசேருமபடி முடிப்பதற்கோர் சந்தேகமில்லை பொழுதுவிடி
யுந்தருணமாயிற்று அனுமான் அக்கினிப்பிரவேசமானவன் அதறகப்பால்
எப்போதும்போல்இலங்கைப்பட்டணத்திலே திசைகண்டராவணன்

சுகமேயிருப்பான் நாமுஞ்சுகமாய்ப் பாதாளவிலங்கையைப் பரிபால னஞ்செய்துக்கொண்டிருப்போமென்று யோசனைசெய்து நிலமென்று புறப்பட்டு இசைகண்டராவணனை அழைத்துவருவோமென்று அதிசீக் கிரமாய் மாயாரூபமெடுத்து ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமல் தாமரைக் குளத்தில் நூல்வழியைப்பார்த்து தமருபோட்டாம்போல் அடைத்துக் கிடக்க அப்போது மயிலிராவணன் தாமரை நூற நல்வழியைத்தட் டிமட்டியிடித்து பிடித்துநோக்கிக் குத்தினான் அவன் என்னசெய்த போதிலும் வழிவிடப்படாமல் அடைபட்டிருக்கப்பார்த்து ஆனால் நான் வரச்சே தக்கசக்கிரமலத்திலே யிருக்கிற ஆயிரக்கோடிராக்ஷசரையும பத்திரமாயிருமென்றுசொல்லிவந்தோமே அவர்கள்தான் இப்படிகாவலு டனபத்திரமாயடைத்துக்கொண்டிருக்கிறார்களோ யாதோதெரிய வில்லையென்று மனதிலுத்தேசித்துராட்சதாளப்பேர்சொல்லி அடாரததாக்ஷா அடாகடோரமாஅடாசம்புமாலிஎன்றவரவர்கள்நாமதேயத்தைச் சொல் லிக்கூப்பிட அப்போது வாயுதேவன் மயிலிராவணன் கூப்பிடுகிறானென்ற றிந்து நீஆரடாவென்றுகேட்க அப்போது மயிலிராவணன்கேட்டு ஆரடா அரவமம்பேசுகிறதுகுரல்வேறாயிருக்கின்றது அங்கே ஆயிரக்கோடியிரா க்ஷதாளிருந்தார்களே அவர்கள் இருக்கிறார்களா உன்பேச்சுக்குரல்வேறா யிருக்கின்றது உன்பேரென்னவென்றுகேட்க அப்போ வாயுபகவான்கே ட்டு ஆரடா இங்கேவந்துகூப்பிடுவதென்றுகூற மயிலிராவணன் கேட் டு நான்தான் பாதாளவிலங்கைக்கரசன் இவ்விடம் ஆரிருக்கின்றது வழி விடடாவென்றுசொல்ல வாயுபகவான் மயிலிராவணனைப்பார்த்து அடா இலங்கைமன்னா நீதானா கூப்பிடுவது நான்தான் வாயுபகவான் அனுமார் கட்டளைப்படிக்கு நானிங்குவழிகாத்திருக்கிறேன் யாரையும்விடப்போ காதென்று சொல்ல மயிலிராவணன் வாயுபகவானைப்பார்த்துச் சொல் லுகிறான் ஓ வாயுபகவானே உன்குமாரனும் நானும் அநேகநேரம் சண் டைபண்ணினோம் அப்போது அனுமாருக்குக் கோபம்வந்துப்பலபல வி தமாய்தாறுமாறுபடித்து அசுமப்பண்ண வந்தார்அப்போது நான் என்னு டையமாய்கையினாலே அவனென்னசெய்தபோதிலும அதற்குஅஞ்சா மல்அவனுடனென்பேரில் சண்டைககுமிஞ்சாமல் ஆச்சரியமாய்தப்பித்து க்கொண்டேன் ஆகையால் ஆஞ்சநேயா மகாவல்லமைசாலியென்றுநான் வெகுவாய் மெச்சிக்கொண்டேன் என்னை அவருமமெச்சிக்கொண்டார் நாங்கள்ஒருவருக்கொருவர்சந்தோஷப்பட்டு உன்னுடைய குமாரனுக்கு பாதாளலங்கையைப்பட்டங்கட்டிவைத்தேன் நான்வெளியேபோகவே ண்டும் எனக்குநீவழிவிடும்பிள்ளாஎன்றுசொல்லவாயுபகவான் கேட்டுத னக்குள்ளேஓஹோனேசெய்துமனந்துணிந்துசலமுமறிந்துக்கொண்டுமயி லிராவணனைப்பார்த்துப்புன்சிரிப்புக்கொண்டு அடாராக்ஷதப்பலேநானுன்

னுடைய மாய்கைக்கு அகப்படுவேனோ ஆஞ்சனேயர் உத்தரவில்லாமல்
உம்மைப்போகவிடுவேனோ பயித்தியக்காராபோபோவென்று பலவாறு
சொல்ல மயில்ராவணன் வாயுபகவானைப்பார்த்து நீவழிவிடுகிறாயோ
இல்லையோ, நான் வேறேவழிபண்ணிக்கொண்டு போவேனென்றுசொல்
ல அப்போவாய்வுபகவான் யோசனைசெய்து இந்தமயில்ராவணன் மாயா
விளேகி வேறேவழிபண்ணிக்கொண்டு போனாலும்போவான் நமக்கு
இந்த வில்லங்கம்வேண்டாம் முன்னமே ஆஞ்சநேயரானவர் நம்மோடு
சொல்லிப்போனாரோயாவாகிலும்பலவந்தம்பண்ணினால்என்னைநினை எ
ன்றுசொன்னாரே ஆகையால் அனுமாரை அழைப்போமென்று மனதில்
நினைத்துக்கொண்டு மயில்ராவணனைப்பார்த்துச்சொல்லுகிறான் அடா
விகடா ராக்ஷதப்பயலே நான்வழிவிடவுத்தரவில்லை நீ அவருக்குப்பட்
டங்கட்டிவைத்தேனென்றும் உன்னை அவர்வெளியிலேபோகச் சொன்
னாரென்றுஞ்சொன்னாயே அதுமெய்யானால் நீ அந்த அனுமாரை அழை
த்துவந்து எனக்குச்சொல்லுவாயானால் அதன்பிறகு உனக்குநான் வழி
விடுவேன் அழைக்காவிட்டால் இப்போதே அந்தஅனுமாரைநானே அ
ழைப்பிக்கிறேனென்றுபிரதிக்கினைகூறி ஆஞ்சனேயரைநினைத்து ஓ இரா
மகாரிய துரந்தரா அனுமந்தா வாருமையா மயில்ராவணன்வந்து என்னை
வழிவிடச்சொல்லுகிறான்வாரும்வாருமென்று ஆஞ்சநேயரைக் கூப்பிடு
ம்போது அவர்இலங்கைப்பட்டணம் நாலுதெருக்களுந்தேடி எங்கிலு
ங்காணாமல் விசாரத்துடனே மூக்குக்கோட்டைமேலேறி நான்குமூலை
யும்ஆராய்ந்துபார்த்துகண்ணுக்குப்புலப்படாமல் அங்கேஉட்கார்ந்துக்
கொண்டு தலைமேல்கையைவைத்து விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறவே
ளையிலே வாய்வுபகவான் அழைக்க ஆஞ்சனேயர்திடுக்கென்றெழுந்திரு
ந்துவாய்வேகமனோவேகமாயோடி வரும்போது மயில்ராவணன் ஆஞ்ச
நேயனைப்பார்த்து நடுநடுங்கி நம்முடையமாய்கை வெளுத்துமறைந்துபோ
வோமென்று இருந்தாற்போலேயிருந்து ஒருமதயானையாய் நான்குகொ
ம்புடனேஸ்தூலசரீரமெடுத்து அதிவேகமாய்ஓடலுற்றான் அப்போது அ
னுமார் வாய்வுபகவான் அருகில்வந்து ஓவாய்வுபகவானே நீர்யாதுகாரிய
மாக என்னை அழைத்தீரென்றுகேட்க வாய்வுபகவான்ஆஞ்சநேயருக்குச்
சொல்லுகிறார்.

வாரும்அனுமாரே இவ்விடம்மயில்ராவணன்வந்து உமக்குப் பட்
டங்கட்டிவைத்தேனென்றும் உம்மைவிட்டுவிடச்சொன்னாரென்றும் இவ்வி
தமாய்கூறினான் நான்வழிவிடுகிறதில்லையென்றேன் அப்போ மயில்ராவ
ணன் என்னைப்பார்த்து நீவழிவிடாவிட்டால்நான் வேறேகள்ளவழி செய்
துகொண்டுபோவேனென்றான் நான் அவ்வசனம்கேட்டு உம்மைநினைத்
தேனென்ன அனுமார் ஓவாய்வுபகவானே இப்படிதானல்லவோ என்னுடை

யவால்கோட்டையைப்பார்த்து என்னை ஏமாற்றிவிட்டுப்போனான் அவனுடையமாய்கைஉமக்குத்தெரியுமேபிரமாதிகள்வந்துவழிவிடச்சொன்னாலும்விடாதேஜாக்கிறதையாயிருமென்று ஆக்கியாபித்து அனுமார் மயில்ராவணன் எங்கேயொளித்திருக்கிறானோவென்று தேடிகொண்டு வரும்போது ஒருமதயானைநான்குகொம்புடனே ஓடப்பார்த்து அப்போது துராத்ண்டியானவள் உபாயமாய்ஒருவிரலாலேயானையை அனுமாருக்குக்காட்ட்அவர் அந்தயானையை அதிகவேகமாய்த்துரத்திக்கொண்டுஓடியும் வந்துஐந்துவிரலையும் மூஷ்டியாகப்பிடித்துயானையினுடைய மத்தகத்தின்பேரில்குத்த அவ்வானையான துமத்தகம்பிளந்து விரிட்டுக் கொண்டுசாக அந்தயானைக்குள்ளிருந்துமயில்ராவணன்வெளியேபுறப்பட்டுஆஞ்சநேயனைப்பார்த்துசிரித்து வாரும்ஆஞ்சநேயா நான் உன்கையிலகப்படுவேனோஎன்னுடையபராக்கிரமத்தைப்பாருமென்று மாய்கையினால் ஒருரதத்தைசகலஆயுதங்களோடும்மகாவுன்னதமாயும்க்ஷணநேரத்துக்குள் உண்டுபண்ணி அனுமானைப்பார்த்து இலங்கைமன்னன் சொல்லுகிறான்

அடா வானரா இதுபரியந்தம் மாய்கையாயிருந்தேன் இனிமேல் நான்மாய்கையைவிட்டு ரதாரூடனாய்வந்தேன் நான்உன்னைவிடத்சக்கதில்லை இப்போது என்னுடையபாணப்பிரயோக வேகத்தைப்பாரும் என்று மயில்ராவணனானவன் பரப்பிர்மசொரூபியாகிய ஸ்ரீசிவபெருமானைத்தியித்துபெரியோரைமதித்து அவரோகியென்றெண்ணி இர்க்காலோசனை பண்ணிதன் வில்லை குணத்தொனிசெய்து நாணேறிட்டு துதுகில்கட்டியிருக்கிற அம்புபுட்டியில்சரத்தை விடுத்துச் சிலசரங்களையெடுத்துமனதில்தானே தூபதீப நைவேத்தியஞ்செய்து மந்திரோபதேசத்தோடு வில்லில்தொடுத்துவிட்டான் அந்தபாணம்வானத்திலெழும்பி தேவர்களநடுங்கமின்னல்-இடி-மழைகளோடுகூடியமேகங்களையும்-கற்றையும் பர்வதங்களையும்இன்னுமதிகவியப்படையத்தக்க விநோதங்களையுங் காண்பித்தனன் பின்பு ஆஞ்சநேயா அந்தாணக்களத்திலிருக்கிற வில்லுகளிலொன்றையெடுத்துநாணேறிட்டு ஒருகணையையெடுத்துத் தூபதீப நைவேத்தியமுதலியவற்றைச்செய்துவில்லிற்பூட்டி மந்திரோப தேசத்தோடு தொடுத்தார் அக்கணை-க-ம-ஈ-த-மத-ஈத-மஈத-கோடி-சதகோடி-சங்கம்-மகாசங்கம என்னும்கணக்குக் அதிகப்பட்டு காகங்களைப்போலச்சீறிவானத்தைமூடிற்று சகலசனங்களுநம வேடிக்கைபார்கக நாடிற்று பின்னும்ஆஞ்சநேயர்கஜாஸ்திரத்தையெடுத்து விடுத்தார்

அது கண்டு மயில்ராவணன் அக்கசாஸ்திரத்துக்கு வயிரியாகிய கேசரியாஸ்திரத்தை விட்டு அதனைமறுக்க ஆஞ்சநேயர் சர்ப்பாஸ்திரத்தை யெடுத்து விடுத்தார் உடனே இலங்கைமன்னன் அதற்கு வைரியாகிய கருடாஸ்திரத்தை விட்டுமறுக்க அனுமார் அக்கினி யாஸ்திரத்

தை யெடுத்துவிடுத்தார் அவ்வஸ்திரத்துக்கு வயிரீயாகிய வருணாஸ்திரத்தை விட்டுமறுத்தான் பின்னும் இருளாஸ்திரத்தை யெடுத்துவிடுத்தார் உடனே சூரியாஸ்திரத்தைவிட்டுத் தடுத்தான் மறுபடியும் அசுராஸ்திரத்தையெடுத்துப் பிரயோகஞ்செய்தார் அதையுங்கந்தர்வாஸ்திரத்தைவிட்டு மறுத்தான் இதன்றிஇன்னும் அநேகதேவதாஸ்திரங்களை விடுத்தார் அவைகளையும் பாவியாகியமயில்ராவணன் முறைமுறையே கண்டித்துவந்தான் இதனைக்கண்டதேவர்களும் யாவர்களும் மகிழ்ந்தார்கள் ஆஞ்சனேயரைப் பலவாறுபுகழ்ந்தார்கள் இப்படி ஒருவர்க்கொருவர் அஸ்திரங்களைத் தோர்வையில்லாமல் பொழிந்தார்கள அநேகர் உயிர்விட்டொழிந்தார்கள் சிலரைசக்கியாணமாய்ப்பிழிந்தார் போர்க்களமெல்லாம் இரத்தம்பரவியோடின கழுகுகள்வந்துகூடின களிப்புடனாடின கணங்கள் ஆனந்தங்கொண்டுபாடின இப்படி சண்டப்ரசண்டமாய்யுத்தம் நடத்தினார்கள் இவ்விதமாய்நடந்தும் மயில்ராவணனானவன் சண்டைக்கிளையாமல் சகலரும் வியப்புறும்படி வில்லைவளைத்து நாணியேறிட்டு விற்குணத்தொணிசெய்து திவ்வியபாணங்களைத்தொடுத்துச் சிங்கநாதஞ்செய்தான் சோனைமழைப்போலச் சரமாரிபெய்தான் ஆஞ்சனேயர் அவன்தொடுத்துவிட்ட பாணங்களையெல்லாம் அறுத்துவிட்டு அநேகபாணங்களைத் தொடுத்து இராமமூர்த்தியையடுத்து இவரே நமது கடவுளென்றுஎண்ணி யோசனைபண்ணி அடா மயில்ராவணா நான் இலேசானவனென்றெண்ணாதே உன்மதில் யோசனைப்பண்ணாதே நானே அநேகயுத்தத்தில்கைதேர்ந்தவன் ராமமூர்த்தியோடுசேர்ந்தவன் பெரியோரனுக்கிரகம்பெற்றவன் ஆகையால்நீ ஜாக்கிரதையாயிரு இதோபாணந்தொடுக்கிறேன் பாரென்றுசொல்லி அஸ்திரசஸ்திரத்தை யெடுத்துவில்லிற்றொடுத்து சோனைமாரிபெய்வதுபோல சரமாரிபெய்தார்.

அதை மயில்ராவணன் கண்டு அஸ்திரங்களையெல்லாம் நடுப்பட்டாதிரிபிற் கண்ட துண்டமாய்ச்செய்து க-ம-ா-து அளவுக்கதிகப்படும பாணத்தையெடுத்துத் தொடுத்து வில்லைநறுக்கி நாணியையறுத்துமார்பைபிளந்து உடல்முழுதும் ரத்தமயக்கமாக்கினான் ஆஞ்சனேயர் ஸ்மரணைதப்பி வில்லின்மேலும் மற்ற ஆயுதங்களின்மேலுஞ் செல்லுங்கருத்தைவிட்டு சோர்ந்தார்ப்போலிருந்து களைதெளிந்தெழுந்திருந்து அடடா இவன்குருத்துரோகி இவனைச்சித்திரவதைசெய்து கொல்லவேண்டும் மரணாவஸ்தைக்குச் சரியான அவஸ்தையை இவனுக்குண்டாக்கவேண்டும் ஒருவேளை ஓடிப்போனாலும்போவான் இவனைவிடக்கூடாதென்றுகருதி அங்குள்ள வேறொரு வில்லையெடுத்துவளைத்துப் மணலைவாரி இறைத்தாற்போலப் பாணங்களைத்தொடுத்து அவன்தேகம் அசையவொட்டாமல் சரக்கூடம்போட்டார் மயில்ராவணன் அதிககோபங்கொண்டு போர்முகத்துக்குரிய கார்முகத்தைவளைத்து நாணேறிட்

டு தேவாஞ்ச குணத்தொனிசெய்து பிறைமுகபாணங்களில் சிலபாணங்களைத்தொடுத்து தன்தேரை மூடியிருக்கிற பாணங்களை அறுத்துச்சிலபாணங்களை ஆஞ்சனேயர்மீது தூண்டினான்.

அனுமார் அந்தபாணங்களை ஒன்றையாகிலும் விடாமலறுத்து மூன்று திவ்வியாஸ்திரங்களையெடுத்துத்தொடுத்தார் அந்தபாணங்கள் மயிலிராவணனுடைய சிரோகத்தை ரத்தமயமாகசெய்தது உடனே மயிலிராவணன் கோபமீறி பற்களைநறநறவென்று கடித்து மீசைபடபடவென்றுதுடிக்க அட்டகாசஞ்செய்து அளவற்ற கணைகளைத்தொடுத்தான் அக்கணைகளால் ஆஞ்சனேயர் மனவருத்தமடைவாரென்றுயாவரும் சொல்லிக்கொண்டிருக்கையில் ஆஞ்சனேயர் அந்தபாணங்களையெல்லாம் நடுவதுபாதியிற் கண்டித்து இவனேனும் இக்கோரவனைக்குமா போராடுகிறதென்று அட்டகாசஞ்செய்து வில்லினிடமாகச் சிலபாணங்களையேவி மயிலிராவணனுடைய தேரைச் சக்கைசக்கையாகப்பேர்த்து குடையையொடித்து கொடியையறுத்துத்தள்ளி சிலபாணங்களைவிடுத்து குதிரையைச்சல்லடைக்கண்களாகத்துளைத்து சாரதியையறுத்துபின்னுஞ்விசேஷமானகணைகளைதாவிமயிலிராவணன்பேரில்பிரயோகஞ்செய்து அவனணிந்திருந்த விசித்திரமான மகரகுண்டல ஆகேயூர கடகக்கணமுதலாகிய ஆபரணங்களையும் கவசத்தையும் பொடியாக்கி அவனையும் ரத்தமயமாக்கினார் அதனால் மயிலிராவணன் பிரமைகொண்டு ஒன்றுந்தோன்றாமல் மனங்கலங்கி சற்றுமசைவின்றிச்சித்திரப்பதுமைபோல் நின்றான் அத்தருணத்தில்ஆஞ்சனேயர்மயிலிராவணன்தேரில்தாவிதன்வில்நாணியினால் அவனைமடல்விரியக்கட்டி அட்டகாசஞ்செய்தார் இலங்கைமன்னவன் மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்துப்பார்த்துகர்ச்சித்து கட்டில்நின்றும் திமிரிக்கொண்டுவெளிப்பட்டு காலாக்கினிருத்திரனைப்போல்கோபமீறி மறுதேரேறி அனுமாரெதிரில் தனது தேரைத்தூண்டி அநேகதவங்களைச்செய்து வரப்பிரசாதத்தால்பெற்ற சில அஸ்திரங்களைவிடுத்தான் அதுகண்டு ஆஞ்சனேயர்சிலஅஸ்திரங்களைவிடுத்து அவ்வஸ்திரங்களைக்கண்டித்தார்.

இப்படி இவ்விருவரும் காலாக்கினி ருத்திரனைப்போல சண்டப்பிரசண்டமாய் ஒருவருக்கொருவர் தோல்வியடையாமல் போர்புரிதார்கள் அப்போது மயிலிராவணனானவன் அக்கினியாஸ்திரம் வருணாஸ்திரம் முதலான ஆயிரத்தெட்டு அஸ்திரங்களையும் பிரயோகஞ்செய்ய ஆஞ்சனேயர் அதிககோபத்துடனே மகாவுக்கிராகாரமாய் கண்களில் நெருப்புப்பொறிபறக்க இருபுயங்களுந்துடிக்க பற்களைநறநறவென்றுகடித்து அனைது உதிரத்தை மடமடவென்று குடிக்க விஸ்வரூபமாய்பதினாயிரம யோசனை விஸ்தாரமாய்த் தோன்றும்படி ஸ்தூலசரீரமெடுத்து மயிலிராவணனை பிடித்து அவனது தேரின் பேரில்

ஓசையற நோக்கியறைந்தார் அவ்வறையில் அக்காசம் அச்சுவேறு- ஆணி
வேறு-கும்பம்வேறு - ஜீத்துக்கால்வேறு. மூத்துக்கால்வேறு - கொடிஞ
கைவேறாகச் சின்னபின்னப்பட்டு பொடிப்பொடியா யிற்றுப்போக ம
யிலிராவணன் ஆஞ்சனேயரிட விசுவரூபத்தையும் அவரது கோபத்தை
யுங்கண்டு மனதில்திகில்கொண்டு நடுங்கி நேரேவிட்டுக்கீழேழுந்திருந்து
கையில் கத்தி-கேடகம்-பாலா- முசலியவைபிடித்து மீசைகள் படபட
வென்று துடிக்க தடதடவென்று ஓட்டமாயோடிவந்து ஆஞ்சனேயரு
டைய நடுமார்பிலே கத்தியினாலோங்கிவெட்ட அவர் அதைத்தட்ட இவ
ன் பின்னுமோட்ட ஆஞ்சனேயர் யாதொன்றுக்கும் சட்டைபண்ணாமல்
தனதுவாலைகீழேவிட்டு மயிலிராவணனுடைய இரண்டு காலையுஞ்சுற்றி
ப்பிடித்து சுருக்காய்இழுத்துப் பூமியிலேதள்ளி இலங்கைமன்னனைப்
பார்த்து அடாராட்சதப்பயலே நீ இனிமேல்எங்கேயாவது ஓடிப்போக
லாமென்று யோசித்திருக்கிறாயென்று சொல்லிகர்ச்சித்து பதினாயிரம
யோசனைதூரம் வளர்ந்து அவனுடையமார்பில் இடதுகாலும் விந்தியா
சலபர்வதத்திலே வலதுகாலுமாகவூன்றிக்கொண்டு அந்தவிந்தியாசலப
ர்வதத்தின் ஐந்துகுகைக்குள் நடுவாயிருக்கிற துவாரத்தைக்கண்டு அந்த
த்துவாரமனைத்தையும் இடதுகை யுள்ளங்கையினாலே மூடிக்கொண்டு
வலதுகையை துவாரத்துள்புகவிட்டு தடவிப்பிடிக்கையில் வண்டுகளெல்
லாம் ஆஞ்சனேயஹஸ்தம்வருவதைக்கண்டு வெளியேபுறப்பட்டுப் போ
வோமென்று வாசலில்வந்துபார்க்கும்போது அவ்வாசலானது ஆஞ்ச
னேயருடைய உள்ளங்கையால் மூடியிருப்பதைக்கண்டு அவ்வண்டுக
ளானது பயந்து வெளியேபுறப்படாமல் மூலைக்குமூலையோடி உள்ளே
யொளித்திருந்தன அவருடையகையில் அகப்படாமலிருக்க அவர் உடன்
யமாய்விரலினாலே பிடித்து நகத்தினாலே கோர்த்துக்கொண்டு இரண்
டாந்துவாரத்தில் இருக்கிற வண்டையும் பிடித்துக்கொண்டு மூன்றாந்
துவாரத்திற்கைவிட்டு அதிலிருக்கிற வண்டையும்பிடித்து நான்காந்து
வாரத்திற் கரத்தைச்செலுத்தி அதிலிருப்பதையும்பிடித்து ஐந்தாந்து
வாரத்தி லிருப்பதையும் பிடித்துக்கொண்டு இவ்வைந்துவண்டையும் உ
ள்ளங்கையிலடக்கி நசுக்கிக் கசக்கித்தேய்த்து மாய்த்துப்போட அந்தவ
ண்டுகளின்பிராணன் அதிகவேகமாய்ப் பாதவித்துக்கொண்டு மயிலிரா
வணனைத்தேடி யலைந்து அவன் தேகத்திற்பிரவேசிக்க மயிலிராவணன்
தன்பிராணன் தனதுடலிற்புகுந்ததைப் பார்த்து அவன்சிரசையசைத்
து ஆ இதென்ன ஆச்சரியம்நமக்கு இன்றோடே மரணகாலம் நேரிட்டி
ருக்கின்றது ஆகையால்இந்த ஆஞ்சனேயர்கையில் வண்டுகளைந்தும் அக
ப்பட்டு நசுக்கினதென் றறிந்துகொண்டு ஆகாசவாணி சொன்ன வி
சேஷத்தையும் நினைத்து ஆஞ்சனேயர் வீராவேசத்தையும் பார்த்
துக் கொண்டிருக்கச்சே மயிலிராவணனுக்கு ஞானசாரமாவது சப்பூ

ர்ணமாய்நிறைந்து ஆஞ்சனேயனைப்பார்த்து தோத்திரம்பண்ணுகிறான்
ஓ வாரும் அனுமந்தசேயா-ஸ்ரீபவா- ஸ்ரீராமகாரியதுரந்தரா- வாய்வுகு
மாரகா- அஞ்சனாதேவிபுத்திரா-ஸ்ரீராமசகாயா பரிபூரணகருணாகரா - கா
ருண்யமயா சுவாமியென்று பலபலவிதமாய்த் தோத்திரஞ்செய்து சுவாமி
நான்செய்தகுற்றங்கள் யாவும் பொறுத்தாட்சிக்கவேண்டும் இராமதூ
தா ஸ்ரீராமதுரோகம்பண்ணின பாவியாகிய நான் உன்பாதாரவிந்தங்கா
ணப்பெற்றேன் வைகுண்டபதவியுற்றேன் நீர்வந்தகாரியம்ஈடேறியது
சீக்கிரமாய் நீலமேகனுக்குப் பட்டங்கட்டிவைத்து ஸ்ரீராமலட்சுமணு
ளையெடுத்துக்கொண்டுபோய் இராவணசம்மாரஞ் செய்துவையும் ஐயா
வென்று தோத்திரம்பண்ணிக்கொண்டிருக்கச்சே பாதாளவிலங்கைக்க
ரசனாகியமயிலிராவணன்சீவனானது வைகுந்தபதவியடைந்தது அவனுக்கு
த்தெய்வலோகத்திலிருந்துபுஷ்பவிமானம்வந்தது அந்தப்புஷ்பவிமானத்
திலேறிக்கொண்டுதேவதாஸ்திரீகளாகிய அரம்பை-மேனகை-ஊர்வசி-தி
லோர்த்தமை முதலானஸ்திரீகள் நடனமாடவும் வெண்சாமரை போட
வும் தாளமத்தளங்கள்போடவும் சகலதேவர்களும்கொண்டாடவும் இ
வ்விதஆடம்பரத்துடனே புஷ்பவிமானத்திலிருந்தபடியே ஆஞ்சனேய
ரை தரிசனஞ்செய்துகொண்டு நான்போகிறேனென்று வீரசொர்க்கத்
தையடைந்தான் அப்போதேஅப்பாதாள விலங்கையில் சிலஇராட்சசா
ளிருக்கப்பார்த்துஆடா ராட்சசர்களேநீங்கள்சீக்கிரமாய்நீலமேகன் தூ
ரதண்டி இவர்களை அழைத்துவாருமென்றுசொல்லதே அக்கணமே அ
ழைத்துவந்தார்கள் தூரதண்டி நீலமேகன் இவ்விருவரும் ஆஞ்சனேயர்
பாதத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்துகைகட்டி வாய்புதைக்
கொண்டிருக்க ஆஞ்சனேயர் நீலமேகனைப்பார்த்து அடாவாடா நீலமே
கா இந்தமயிலிராவணனுக்கு உத்தரகிரியை முதலியன எவ்வண்ணம் மு
டிக்கவேண்டுமோ அவ்வண்ணம் முடித்துவாவென்றுகூறி சூரியவுதய
த்துக்குமுன்னே இராமலட்சுமணுளைக் கொண்டுபோய் ராவணசம்
மாரம்செய்யவேண்டும் இப்போது ரூபாவதியென்கிறபெண்ணை உமக்
கு கலியாணஞ்செய்வித்து பட்டாபிஷேகஞ்செய்ய நினைக்கிறேன் ஆ
கையால் நீ அதிசீக்கிரத்தில் மயிலிராவணனுக்குச் செய்யவேண்டிய ச
டங்குகளெல்லா முடிப்பித்துவாவேண்டுமென்று ஆக்கியாபித்து ஆஞ்ச
னேயர் அரண்மனைக்குபோய்ச் சேர்ந்தார் அப்போது நீலமேகன் அவர்
சொல்லியவண்ணம் இராட்சசப்பிராமணுளையழைத்து அதற்குவேண்
டும சாமக்கிரியைகள் யாவுஞ் சேகரம் செய்துவைத்துக்கொண்டு மயிலி
ராவணனுக்கு அக்கினிசம்ஸ்காரஞ் செய்வித்து ஸ்தானபானம்பண்ணி
வஸ்திரந்தரித்து நீலமேகன் தூரதண்டியும் மற்றுமுள்ள இராட்சசப்
பிராமணுள் அனைவரும் அரண்மனையில்வந்து ஆஞ்சனேயருக்குஸ்தோ

த்திரஞ்செய்து நின்றார்கள் ஆஞ்சனேயர்மாதங்கியைப்பார்த்து ஓ வரு
ம் பெண்ணே மாதங்கி ஆகாயவாணிசொல்லிய வாக்குப்படிக்கு உன்கு
மாரத்தியை இந்த வீரசூரனை நீலமேகனுக்குக்கொடுத்து கலியாணஞ்
செய்துவையுமென்றுசொல்ல மாதங்கி அவரைப்பார்த்து சுவாமி உமதி
ஷ்டப்படி செய்கிறேனென்று உடனேகூறி ரூபவதியை அழைத்துக்கொ
ண்டுசந்த புஷ்பமுதலியவையணிந்து பச்சைப்பந்தல் வாழைகமுகுகள்
முதலியவைகளால்அலங்கரித்துதம்பதிகளிருவருக்கும்விசித்திரமான ஆ
பரணங்களினால் அலங்காரஞ்செய்து நீலமேகன் ரூபவதி இவ்விருவருக்
கும கல்யாணச்சடங்குக ளியாவும் சம்பிரமத்துடனே முடிப்பித்து
மங்கல்யம் தரிப்பித்து இரத்தினசிங்காதனமிட்டு வீற்றிருக்கச்செய்து
சகல இராக்ஷசப்பிராமணரைக்கொண்டு சர்வதீர்த்தங்கள் கொண்டுவந்து
ஆஞ்சனேயர் முன்னேவைத்தார்கள் அப்போது அவர்சங்கக்குடத்தி
லிருக்கிற சுத்தசலத்தைநீலமேகனுக்கு அபிஷேகஞ்செய்வித்து பின்பு
மந்திரிபிரதானி-சாமந்திரி-தண்டத்தலைவர்-யூதத்தலைவர் அணித்தலைவர்
முதலிய சகலர்களுக்கும் அபிஷேகஞ் செய்தபின்பு நீலமேகனைவன்
சகல ஆபரணபூஷிதனாய் எழுந்துவந்து ஆஞ்சனேயர்பாதாரவிந்தங்களி
ல் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்து சிரமேற்கரங்குவித்து ஸ்தோத்
திரம்பண்ணினான் தூரதண்டி பாங்கிமுதலிய சகலரும் ஆஞ்சனேயர்
முன்விழுந்து கும்பிட்டு எழுந்து வந்துகைகட்டி வாய்புதைத்துநின்றார்
கள் அப்போது ஆஞ்சனேயர் நீலமேகனைப்பார்த்து ஆசீர்வாதஞ்செய்
கிறார் வாரும்பிள்ளாய் நீலமேகா நீஇந்தபாதாளவிலங்கையை இராச்சி
யபாரஞ்செய்துக்கொண்டு சுகமாயிரு ஸ்ரீராமமூர்த்தியின்பேரும் பிரதி
ஷ்டையும் எதுகமட்டுக்கும் சாஸ்விதமாயிருக்குமோ அக்காலம்வரையில்
சுசீலியாய்தர்மநீதிதவறாமல் நீதிசெலுத்தக்கடவாய் சகலவுயிர்களை
யும் தன்னுயிர்போல்மன்னுயிர்களைகாப்பாற்றிவாழக்க. வாஎன்றுசிறிது
புத்திகள்கூறி தூரதண்டியைப்பார்த்து ஓ பெண்ணே நீ கேட்டுக்கொண்
டபடிக்கு நீலமேகனுக்குபட்டங் கட்டிவைத்தேன் நான்போக செலவு
கொடுமென்றுகேட்க அப்போதுதூரதண்டியானவள்சீக்கிரமாய்ப்போய்
பொக்கிஷத்தைத்திறந்து அநேக ஆபரணங்களும் வன்னவன்ன வஸ்தி
ரங்களும் கக்புஷ்பமுதலிய பரிமளதிரவியங்களும் தட்டோடெடுத்
துக்கொண்டுவந்து ஆஞ்சனேயர் முன்பாகவைத்து சாஷ்டாங்கமாக நம
ஸ்காரஞ்செய்துகொண்டாள் ஆஞ்சனேயர் தூரதண்டியைப்பார்த்து
ச் சொல்லுகிறார்.

வாரும பெண்ணே தூரதண்டி நீகொண்டுவந்த வெகுமதிகளை
ப்பார்க்கச் சந்தோஷமாயினவென்று தனது அஸ்தத்தினால் தொட்டு
நான் அஸ்தமிட்டவுடனே எனக்கு மனக்களிப்புண்டாயிற்று நீ கொ
ண்டுவந்ததை பொக்கிஷத்தில் கொண்டுபோய்ச்சேர்ப்பி அவ்வஸ்து

க்கன்கொடுக்ககாரணமில்லை யாதென்றால் சாட்சாத்கட வுளாகிய ஸ்ரீரா மமூர்த்தியானவர் இராவணசம்மாருமுடித்துப் பட்டாபிஷேகமான பின் புயான் அந்தப்பூஷணதிரவியங்களை ந கொடுவென்று ஆக்கியாபித் து விடைகொடுத்துவிட்டு பின்பு ஆஞ்சனேயர் மச்சவல்லபனை அழை த்து ஓ வாரும்பிள்ளாய் மச்சவல்லபசிகாமணியே இப்பாதாளவிலங்கை கை உன்வசமொப்பித்தேன் நீ நீலமேகம்சொற்படிகேட்டு நடந்துக் கொண்டு சுகமாயிரு நான்போயவருகிறேனென்று விடைபெற்றுக்கொ ண்டு சீக்கிரமாய்ப்புறப்பட்டு இராமலட்சுமணரை வைத்திருக்கப்பட்ட யிடத்தில்வந்து பூமிதேவியைப்பார்த்து ஓ வாராய் பூமிதேவியே இராம லட்சுமணரை தடையின்றிக்கொடுக்கும் என்றுவினவ பூமிதேவியாவள் ஆஞ்சனேயர்கையில் பெட்டியோடு தூக்கிக்கொடுக்க அவர் இராமலட் சுமணரைப் பத்திரப்படுத்தியிருக்கிற பெட்டியைப்பெற்றுக் கொண்டு அதிசீக்கிரமாய் பாதாளவிலங்கைவிட்டு அந்த்தாமரைத்தடாகங்கள்வ ந்து அவ்வழித்துவாரத்தைப்பார்க்க அவ்வழி மூடப்பட்டிருந்தது அவ் நுனம் காவலாயிருக்கிற வாயுபகவானைக்கண்டு ஓய் பகவானே எனக் குச்சற்றேவழிவிடும் என்ன வாயுபகவான் அனுமார்வந்துவிட்டாரென் று வழிவிட அவர்பெட்டியையெடுத்துக்கொண்டு அந்ததாமரை நூற்ற ண்டுவழியாக அதிசீக்கிரமாய் நடந்து அந்தசகஸ்திரகமலத்தில் வந்து சேர்ந்தார் வாய்வுபகவான் அவரைப்பார்த்து வாரும்பிள்ளாய்ஆஞ்சனே யா மயில்ராவணனைச் சங்காரம்பண்ணி இராமலட்சுமணரை எடுத் துக்கொண்டு வந்தாயா வென்ன அவர் வாய்வுபகவானைப்பார்த்து ஓ வாய்வுபகவானே நான் மயில்ராவணனைச் சங்காரம்பண்ணி ஸ்ரீராமல ட்சுமணரை இந்தப்பெட்டியோடே எடுத்துக்கொண்டுவந்தேனென்ன வாய்வுபகவானவர் அதிகசந்தோஷத்தை அடைந்தார் அப்போது பா தாளவிலங்கையி லிருந்த மச்சவல்லபன் அங்கனைவிட்டு பாட்டனாரு ம் தகப்பனாரும் இருக்கிறஸ்தானத்தில் வந்து சேர்ந்து அவர்களிருவரு க்கும் சாஷ்டகமாக நஸ்காரம்செய்து கைகட்டிவாய்புதைத்துக்கொண் டு நின்றான் அப்போ வாய்வுபகவான் ஆஞ்சனேயரைப் பார்த்துச்சொ ல்லுகிறார் ஓ வாரும் ஆஞ்சனேயதூயா - அரிராமசகாயா - ஸ்ரீராம லட்சுமணரைக் கொண்டுவந்தேனென்றாயே அவர்களைப்பார்க்க என க்குவிருப்ப மிருக்கிறதென்றுகேட்க மச்சவல்லபனும் அவர்கள் எப்படி ப்பட்டவர்கள் புண்ணிய புருஷர்களோ நானும் பார்க்க விருப்பமுள்ள வனா யிருக்கிறேன் என இருவருங் கூறஆஞ்சனேயர் பெட்டியையெ டுத்துக்கொண்டு வந்து இதோதிறக்கிறேன் பாருங்களென்று பெட்டி யை திறக்க அப்பெட்டியில் இராமலட்சுமண ரிருவரும் கண்மூடிநித் திரைசெய்திருக்க அந்தருணத்தில் வாய்வுபகவான் ஆஞ்சனேயர்மச்ச வல்லபன் இம்மூவரும் முக்கால்வலம்வந்து ஸ்ரீராமலட்சுமணருக்கு

சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து பெட்டியைமூடி தாட்கொண்டு பூட்டி ஆஞ்சநேயர் மச்சவல்லபனைப்பார்த்து ஒருவசனஞ்சொல்லுகிறார் ஓ மச்சவல்லபா நீயிங்குவந்தகாரியமே தென்னென்று வினவ மச்சவல்லபன் சொல்லுகிறான் ஓ ஆஞ்சநேயரே நாளையதினம் உதயகாலையில் இராவணனுடனேயுத்தஞ்செய்யவேண்டும் ஆகையால் நானே அந்தராவணனுடைய இராட்சதபூண்டுகளையெல்லாம் அடித்து சாகும்படியாய்மடித்து உதிரத்தைக்குடித்து வீராவேசம்படித்து பின்பு இப்பாதாளலங்கைக்கு வருவேனென்ன ஆஞ்சநேயர் மச்சவல்லபனைப் பார்த்துச்சொல்லுகிறார் வாரும் மச்சவல்லபா நீயவ்விடம்வந்தால் அந்தசுக்கிரீபன் முதலானவர்கள்யாவரும் இவன்யாரென்று என்னைக்கேட்பார்கள் அப்போ அவர்களுக்கு என்னுடையபிள்ளையென்று சொல்லநேரிடும் அப்படியிருப்பதால் அவர்கள்சந்தேகப்படவும் பரியாசஞ்செய்யவுமிருதாவாகப்பிள்ளையென்று ஒப்பாரிபிடித்துக்கொண்டு வந்தானென்றும் எனக்கு அடங்காதநிநேரிடும் ஆகையால் நீவரவேண்டுவதில்லை நீ இந்தலங்கைப்பட்டணத்தில் சுகமாயிருவென்று விடைகொடுத்து வாயுபகவானையும் அனுப்பிவிட்டு ஸ்ரீராமலட்சுமணனை பெட்டியோடெடுத்துக்கொண்டு வாயுவேகமாயவரும்போது அங்கனம் சுக்கிரீபன்-நீலன்-நளன்-சாம்புவன்-விபீஷணர்முதலிய யாவரும் ஒன்றாகக்கூடிக் கொண்டு இன்னம் ஆஞ்சநேயர் வரவில்லையே சூரியஉதயமாகின்றதே என்றுவருத்தப்பட்டு நான்குமூலையும் பார்த்துக்கொண்டிருக்குந்தருணத்தில் ஆஞ்சநேயர்வருவதுகண்டு அனைவரும் எதிர்கொண்டு கூடாரம்வந்து சேர்ந்தார்கள் ஆஞ்சநேயர்பெட்டியோடே இராமலட்சுமணனை அசையாமல் எப்பேதும்போல் முன்னிருந்தவிடத்தில்வைத்து பிரதக்ஷணமாய்வந்துகும்பிட்டார் பின்பு அங்கதன்-நீலன்-சுக்கிரீபன்-சாம்புவந்தன்-விபீஷணன்-முதலானவர்களெல்லாம் இடம்புரிவலம்புரியாய்வந்து தோத்திரஞ்செய்துநிற்க சூரியபகவான் உதயகிரிபர்வதத்திலிருந்து தன் கிரணங்களைப்பரப்பிப் புறப்பட்டான் உடனே ஸ்ரீராமலட்சுமணனை வைத்திருந்தபெட்டியானது மாயமாய்கண்ணுக்குத்தெரியாமல் மறைந்துபோயின இராமலட்சுமணனிருவரும் நித்திரைதெளிந்து எழுந்திருந்தார்கள் ஆகாயமார்க்கத்திலே சகலதேவதைகளும் புஷ்பமாரிபொழிந்தார்கள் மங்கலவாழ்த்துப் பாடினார்கள் நான்குமாதர்களும் நடனமா

டினார்கள் தேவகணங்கள் கூத்தாடினார்கள் சகலசனங்களும்பார்த்து ஆ
ச்சரியத்துடனேவந்து கூடினார்கள் இன்றையதினம் இதென்ன ஆச்ச
ரியமாயிருக்கிறதென்று சந்தேகப்பட்டார்கள் ஆநட்டனேபோர்கொடு
த்தேபமனக்கு இராமலட்சுமணருள்கேட்க சாம்புவந்தனானவன் இந்தப்
பூர்வோத்திரமெல்லாம ஸ்ரீராமமூர்த்திக்குஞ் சவிஸ்தாரமாகச்சொன்னா
ர் அப்போதுஆஞ்சனேயா சாம்புவந்தனைப்பார்த்து கண்சைகையாகச்
சொல்லாதே என்றார் அவர்சைகை சாம்புவந்தர் அறிந்துகொண்டு இ
ராமலட்சுமணனைப்பார்த்துச் சொல்லுகிறார் வாருமையா ஜகதாரக்ஷகா-இ
ராமச்சந்திரா-இனிமேல் நடக்குங்காரியங்களுக்கு ஆலோசியுங்களென
றுசொல்ல ஸ்ரீராமமூர்த்தியானவர் அனுமானைப்புகழ்ந்து சிரஞ்சீவியா
யிருக்கக்கடவையென்று ஆசீர்வதித்துசகலரும் சந்தோஷமடைந்திரு
ந்தார்கள் இவனம இப்படியிருக்க இலங்கைப்பட்டணத்தில் இராவண
னானவன ஸ்திரீகளோடிசரச சல்லாபவுல்லாசமாய் சிரித்துக்கொண்டுஇ
ருந்தவன் சூரியவுதயத்தில் தேவர்கள கருடகாந்தர்வர் முழக்கம்பட்ட
மேளவாத்தியதொனியைக்கேட்டு யோசனைபண்ணி இப்போது தேவர்
கள் இந்தவாத்தியகோஷ்டம் பண்ணும்படியான காரியமென்னவென இராம
லட்சுமணனை மயிலிராவணன் கொண்டுபோயிருக்க தேவர்களுக்கு
இத்தனைசந்தோஷம் வரத்தக்ககாரியமென்னவென்று மனதில்யோசித
து நாலுபேர்வேவுகாரரை அழைப்பித்து இக்கணமே பாதாளவிலங
கையில் மயிலிராவணனண்டைக்குப் போகாமலவாநாரசேனையண்டை
க்குப்போய் இராமலட்சுமணரை உயிருடனே க்ஷேமமாயிருக்கிறார்களா
அவர்களுடையசேதியை விசாரித்துக்கொண்டு வாருங்களென்ன அந்த
வுத்தாரப்படிக்கு வேவுகாரர் பாதாளவிலங்கைக்குச் செல்லாமல வாநா
ரசேனை யிருப்பிடம்வந்து விசாரிக்குமளவில இராமலட்சுமணர் சுகமா
யிருப்பதைப்பார்த்து அதிசீக்கிரமாய்திரும்பி வந்து இராவணேஸ்வ
ரனைநோக்கிச் சொல்லுகிறார்கள வாரும் லங்கைக்கதிபா இராமலட்சு
மணர் சுகமாயிருக்கிறார்களென்ன இராவணன இதேது ஆச்சரிய
மாயிருக்கின்றது மயிலிராவணனைக் கொன்றுவிட்டார்களோ அல்ல
து அவன் அவர்களிருவரையும் எடுத்துக் கொண்டுபோகாமல் தனியா
ய்ப்போனானோவென்று மனதில்பலபலயோசனைசெய்து எட்டுப்பேர்
வேவுகாரரையழைப்பித்துச் சொல்லுகிறான் ஓ தூதர்களே நீங்கள் சீ
க்கிரமாகப் பாதாளலங்கைக்குப் போய் மயிலிராவணனிருக்கிறானோ இ

ல்லையென்று பார்த்துவாருங்களென்ன அங்ஙனம் எட்டுப்பேர்வேவுகாரர்கள் அதிசீக்கிரமாய் காலால்நடவாமல் காற்றாய்ப்பறந்துபாதாளலங்கைக்குப் போகவேண்டுமென்று தாமரைக்குளத்தில்வந்து இராக்ஷசரெல்லாரும் அங்ஙனம் இல்லாதிருப்பதைப்பார்த்து இதென்ன ஆச்சரியம் இவ்விடத்தில் நூதனமாய் நீலமேகனும் அவன் சேனைகள்யாவரும் காவலாயிருப்பதைப்பார்த்து அந்த எண்பரும்சொல்லுகிறார்கள் வாருங்கள் இராக்ஷசப்பேய்களே லங்கையிலிருக்கப்பட்டநாய்களேமயிலிராவணனெங்கே இக்கோட்டையில் ஆயிரங்கோடிராக்ஷதாள் காவலாயிருந்தார்களே அவர்கள் எவ்வாறாயினார்கள் நாங்கள் திசைகண்டராவணனாலே அனுப்பப்பட்டவர்கள் மயிலிராவணனைக் காணவந்தோம் வழிவிடுங்களென்ன காவலர்கள் எண்மருங்கேட்டுச் சொல்லுகிறார்கள் ஆமடா நீங்கள் திசைகண்டராவணன்பேச்சை யெடுக்குங்காரணமென்னவென்று கர்ச்சித்து பற்களைநறநறவென்று கடித்து மீசைதுடித்துக் கோபங்கொண்டு பிடரியைப்பிடித்துத்தள்ளுங்கள் தள்ளினபின்புசேதிவந்துசொல்லுங்கள் என்ன அப்போது வேவுகாரர்கள் காவலாயிருக்கப்பட்ட இராக்ஷதாள்காலில்விழுந்து எழுந்து நடுநடுங்கிச்சொல்லுகிறார்கள் ஓ காவலர்களேஎங்களுக்கு அந்தவிர்த்தாந்தத்தைச்சொல்லவேண்டுமென்று வேவுகாரர்கள்கேட்க காவலர்கள் அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்.

வாருங்கள் வேவுகாரர்களே அனுமார் மயிலிராவணனை அதஞ்செய்து நீலமேகனுக்குப் பட்டங்கட்டி ஸ்ரீராமலட்சுமணனையும எடுத்துக்கொண்டுபோனார் ஆகையால் அவருடைய உத்திரவில்லாமல் இங்ஙனம் சற்றேனும்நிற்கக் கூடாதென்று சீக்கிரத்தில்கெட்டி தலைமேற்குட்டி பிடரியைப் பிடித்துக் கழுத்தைக் கடித்து பிடித்துத் தள்ளிவிட்டார்கள் அவர்கள் படைத்தசனையை ஆசையோடுபெற்றுக்கொண்டு நமக்குமோசமாகிய நாசகாலம்வந்ததென்று மனதில் விசாரங்கொண்டு அவிடம்விட்டுப்புறப்பட்டு இலங்கைபுரியையாளப்பட்ட இராவணனிடத்தில்வந்து மகாதுயரத்துடனே சொல்லுகிறார் கேளும இராவணேஸ்வரா மயிலிராவணனுமவன் புத்திர மித்திர களத்திராதியுடனே அனுமாரால் யமபுரத்தை யடைந்தான் இராட்சசப்பூண்டின் சகலமும அழிந்துவிட்டது நீலமேகன் பாதாளவிலங்கையைப்பட்டங்கட்டிக்கொண்டு அரசுசெலுத்திக்கொண்டு இருக்கிறானென்

ழுகூற அவ்விசேஷத்தைத்தினை கண்டராவணன் கேட்டு சிங்காதனத்தி
ன்பேரிலிருந்து கீழேவிழுந்து கடகடவென்றுபுரண்டு மூர்ச்சையாய்க்
கிடக்கிற இராவணனை மகோதரன்முதலிய மந்திரிகளெடுத்து ஆயாசந்
தீரப்பாயாசந்தந்து சோடசவுபசாரஞ்செய்து மூர்ச்சைதெளியவைத்து
அவனுக்குத்தேறுதலைசொன்னார்கள் இராவணன் மந்திரிகளைப்பார்த்து
ச்சொல்லுகிறான் வாருங்கள மந்திரிகளே ஆராய்ந்துசொல்லுந்தந்திரிகளே
எனது துயரத்தை யென்றுசொல்லமுடியுமோ யான் செய்தயத்தன
மெல்லாம விருதாவாயின மகாசாமர்த்தியரான எனதுசகோதரனும்பி
ள்ளைகளும் இறந்துபோய் எனதுசரீரபலமில்லாது யாதொன்றிலும்புத்தி
செல்லாது எனதுகாரியமு பொல்லாது க்ஷணநேரமுமில்லாதென்று
மனதிலெண்ணி யோசனைபண்ணி திடங்கொண்டு தன்னுடையதேரை
க்கொண்டுவரசொல்லி யானை சேனைபரிவாரமுதலியவற்றைச்சேர்த்துக்
கொண்டு யுத்தகளத்தில்வந்து இராமமூர்த்திபேரில் எதிர்த்து வில்லைவ
ளைத்து நாணேறிட்டு அனேகபாணங்களைவிடுத்தான்.

அதுகண்டு ரகுநாயகரானவர் அதிககோபத்துடனே தமது கோ
தண்டத்தைவளைத்து நாணேறிட்டு ராமபாணங்களை யெடுத்து சரவரு
ஷங்களைப் பொழிந்தார் அந்தபாணங்களால் ராவணேஸ்வரனுடைய
யானைகள் - குதிரைகள் - தேர்கள்-மந்திரிகள்-படைத்தலைவர்கள்-காலா
ள்களமுதலிய யாவருமரணக்களத்தில் விழுந்திறந்தார்கள் இராவண
ன் தனியாகநின்று யுத்தஞ்செய்தான் அதுகண்டு இராமமூர்த்தியான
வர் இதென்ன இவனுடையபோராட்டமே நமக்கு மாராட்டமாயிருக்
கிறதென்று கோபங்கொண்டு தனதுவில்லினிடமாக அதிதீட்சண்ய
மான இராமபாணத்தை யெடுத்துத் தொடுத்து இராவணனுடைய உ
ந்திக்கமலத்திற்கு நேராகவிடுத்தார் அந்தப்பாணமானது இராவண
னுடைய உந்திக்கமலத்திலிருக்கும் அமுதகலசத்தை வெளிப்படுத்த
முதுநீனுநவிப்பேயின் இராவணன் தலைகள் பலவாறாய்ப் பூமியில்
விழுந்தன பின்பு இராமமூர்த்தி விபீஷணருக்கு உபசாரஞ்செய்து
ராவணேஸ்வரனை யெடுத்து தகனஞ்செய்சொல்லி உத்தாரவுகொடு
த்தார் உடனே விபீஷணர் ராவணனையெடுத்துத் தகனஞ்செய்து ப
தினாறுநாழ்கர்மாதிகாரியத்தை நடத்தினார் அதுகண்டு ரகுநாயகர் வி
பீஷணருக்கு இலங்கைப்பட்டணத்தைப் பட்டாபிஷேக செய்தனு

வைத்து சீதாதேவியை யழைத்துக்கொண்டு வரச்சொல்லி விபீஷணன்-சுக்கிரீபன்-அங்கதன்-நளன்-நீலன்- குமுதன் - குமுதாக்கன்- சாம்புவந்தன்-சுவாட்சகன-முதலிய சேனைத்தலைவரும் எழுபத்திரண்டுவெள்ளஞ் சேனையையு மதாரூடராய் வரச்சொல்லி ஆஞ்சனேயருடன் புறப்பட்டு ராமலட்சுமணாள் சீதாபிராட்டிசமேதராய் விமானத்திலேறிக்கொண்டு சேனைகளைநடக்குப்படி ஆக்யாபித்து தமதுவிமானத்தையும் நடத்தி பரத்துவாசர் ஆசிர்மத்திலிறங்கினார்கள் அப்போது ஆஞ்சனேயர் முன்னதாகப்போய் பரதருக்கு சுகசேதிசொல்ல வேண்டுமென்று ரகுநாயகரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்திற்குவந்து பரதனைக்கண்டு சுவாமிவருகிறசமாச்சாரத்தை ஆதியோடந்தமாகச்சொன்னார் பரதர்சந்தோஷப்பட்டு பட்டணமெல்லாம் அலங்காரஞ்செய்வித்து தானும் சத்துருக்கர் முதலானவரோடு தமகள் தாய்மார்களையும் அழைத்துக்கொண்டு அனேகயானை-குதிரை- சேனைகளுடன் பட்டணத்திலுண்டாகிய ஜனங்களோடும் எதிர்கொண்டுபோனார்.

அப்போது ரகுநாயகர் பரத்துவாச ஆசிர்மத்திலே போசனஞ்செய்து பரத்துவாசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சகலசேனைகளுடனேபுறப்பட்டு அயோத்தியைநோக்கிவரும்போது எதிர்கொண்டுவருகிற பரதனைக்கண்டு ரகுநாயகர்ரதத்தை நிறுத்தினார் உடனேபரதர் இராமமூர்த்திக்கு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்தார் ரகுநாயகர்பரதனைக்கட்டிக்கொண்டு ஆலிங்கனஞ்செய்து அதிக சந்தோஷத்துடனே சதுரங்கதளசேனைகளோடும் பிரயாணப்பட்டு தம்முடையதாகிய கௌசலாதேவியம்மனை நமஸ்கரித்து கைகேசி சுபத்திராதேவியம்மனுக்கும்வந்தனஞ்செய்து சகலபேரையும்தேரிலேற்றிக்கொண்டு சந்தோஷ சமாச்சாரங்களைச்சொல்லி சகலஜனங்களுடனும் நந்திக்கிராமத்தில்வந்திறங்கி கங்காஸ்நானஞ்செய்து வஸ்திராபரணகந்தபுட்ப பரிமளவர்க்கங்கள் முதலியவையணிந்துக்கொண்டு திவ்வியான்னம்புசித்து தாம்பூலவர்கந்தரித்து அதிகசல்லாபவுல்லாசமாய் அயோத்தியாபுரி பட்டணத்துக்குப்போய் ஸ்ரீராமமூர்த்திக்குப்பட்டாபிஷேகஞ்செய்வித்து சகலபிரஜைகளும் ஆநந்தமடைந்திருக்குந்தருணத்தில் சுக்கிரீபன்-விபீஷணர்முதலானவர்களுக்கும்எழுபத்திரண்டுவெள்ளம் வானரசேனைகளுக்கும் உபசாரஞ்

செய்யஇராமமூர்த்தியானவர்வசிஷ்டரைப்பார்த்துஒருவிசேஷஞ்சொல்லுகிறார் ஐயாபெரும் சுவாமி வசிஷ்டமாமுனியே இதோயிருக்கிற ஆஞ்சநேயர்எங்களுக்குஅனேகசகாயஞ்செய்திருக்கிறார் அவர்செய்தவுபகாரத்துக்குத் தேவராலும்யாவராலும்பிரதியுபகாரஞ்செய்யமுடியாதென்று இராமமூர்த்தியானவர் சொல்ல வசிஷ்டர்சொல்லுகிறார் வாருமையாராமச்சந்திரா ரணரங்கவிந்திரா ஆஞ்சநேயர் அனேகவுபகாரங்கள் செய்தாரென்று சொன்னீரே அவர்செய்தவுபகாரத்தை யாவருமறியார்கள் இன்னதென்றுகுறியார்கள் அவர்செய்தகாரியார்த்தமென்னநம்மையறியாமலென்ன அற்புதஞ்செய்தார் நமக்குஞ்சகலகாரியமும் ஞானதிருஷ்டியினால்தெரியும் அவர்செய்தவுபகாரத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க ரகுபாகர் விபீஷணரைநோக்கிச் சொல்லச்சொன்னார் விபீஷணர் சாம்புவந்தரைப்பார்த்து ஐயாசாம்புவந்தரே ஆஞ்சநேயர்மயிலிராவணனைச் சங்காரஞ்செய்த சவிஸ்தாரத்தைச் சொல்லவேண்டுமென்ன சாம்புவந்தரெழுந்திருந்து பயபத்திவிசுவாசத்துடனே கைகட்டிவாய்புதைத்து ரகுநாயகரை ஸ்தோத்திரஞ்செய்து சபைக்குமுன்னின்று சொல்லுகிறார் அனுமாரானவர் தாமரைத்தண்டின் நூல்வழியாய்ப்போனதும் அவ்விடத்தில் ஆயிரங்கோடிஇராக்ஷசரைச் சங்காரஞ்செய்ததும் பின்புஅக்கினிக்கோட்டையில் மச்சவல்லபனோடுபோர்புரிந்துமச்சவல்லபனைதன்னுடையபிள்ளையென்று பிறப்புவளர்ப்பால் அனுமார் அறிந்ததும் பின்புதெர்ப்பக்குளக்கரைச்சேர்ந்து தூதண்டியைக் கண்டு அவனிடத்தில் சிலசங்கதிகளையறிந்ததும் துலாயந்திரக்கோட்டைவாசலில் நடந்தவாறும் தானுள்ளேநுழைந்து காளிகோயிலைக்கண்டு சுவாமியையெடுத்துக்கொண்டுவந்ததும் மயிலிராவணனுடனே அனேகமாய்கைகள்செய்து அவனைக்கொன்ற விவரமும் தூரதண்டி குமாரன் நீலமேகனுக்குப் பட்டங்கட்டி அவனுக்கு விவாகஞ்செய்து வைத்ததும் அப்பட்டணத்தின் சமாச்சாரங்களும் சுவாமியையெடுத்துக்கொண்டுவந்ததையும் ஆதியோடந்தமாகச் சொன்னார் இராமமூர்த்தியானவர் ஆநந்த சந்தோஷத்தையடைந்து எழுந்திருந்து ஆஞ்சநேயரைத் தழுவிக்கொண்டு புன்சிரிப்பாகச் சிரித்துச்சொல்லுகிறார் நீர்வல்லமையுள்ள புண்ணியவான் யாவருக்கும் கண்ணியவான் உமக்கு நான் என்னவுபகாரஞ் செய்யப்போகிறேனென்று அனுமாருக்கு

றுபடியும் சிரஞ்சீவியும் ஆசீர்வாதமுங்கூறி வேண்டினவற்றைத்தந்து அதிகசந்தோஷத்தையடைந்திருந்தனர்.

இக்கதையை யாதாமொருவர் படித்தாலும் திதியைத் தொடு முடித்தாலும் ஒருவர்படிக்கக்கேட்டாலும் படித்தவர்களமற்றொருவ ருக்குச்சொன்னாலும் அதைச்செவிகொடுத்துக் கேட்டவர்களை நவ க்கிரகங்கள் குரூரஞ்செய்யமாட்டாது கலிபுருஷனுமணுகான் இதை த் தோத்திரம் பண்ணினவர்களும் மனதிலெண்ணினவர்களும் கண்ட வரும் துதிசெய்து கொண்டவரும் நற்பதவியையடைவார் அவரா வர் செய்த-பிரமஹத்தி-சிசுஹத்தி-முதலிய கொடியபாவங்களும் அற்று பரமபதத்தைப்பெற்று நீடூழி வாழ்வார்கள்.

இந்நூல் அச்சியற்றினோன் சிறப்பு.

அறுசீரடியாசிரிய விருத்தம்

உற்றவனாம் பிள்ளையாரு நாயகருஞ் சாமியு
மூவருந்தாம்வாழ்க
கொற்றவன்செங்கோல்வாழ்க மறையவர்கள்வாழ்கமுகிற்
குழாங்களைவாழ்க
நற்றவமாயிதைப்பதித்த வீராசாமி
புதல்வன்வாழ்க
மற்றவருங் கற்றவரு மெஞ்ஞான்றுபாருறு
வாழ்கமாதோ.

———*———

# மயிலிராவணன்கதை.

முற்றுப்பெற்றது.

——*——